விலை: யாழ். ரூ.30, வன்னி ரூ.20 பக்கங்கள் 56

# உதயன்

சுடர் 30 கதிர் 291 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 27, ஞாயிற்றுக்கிழமை 13.09.2015

## ஐ.ம.சு.முவின் 47 எம்.பிக்கள் எதிரணியில்

கொழும்பு, செப்.13
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 47 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமரத் தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,

பக்கம் 29.....

## விக்கியை சம்பந்தனே பார்த்துக் கொள்ளட்டும்

யாழ்ப்பாணம், செப். 13
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனே கொண்டு வந்தார். எனவே, வடக்கு முதலமைச்சர் தொடர்பிலான விடயங்களை சம்பந்

பக்கம் 29.....

## நல்லூரில் இம்முறை திருட்டு குறைவு

யாழ்ப்பாணம், செப். 13
நல்லூர்த் திருவிழாக் காலத்தில் மூன்று தங்கச் சங்கிலிகள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையதாக மூவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த

பக்கம் 29.....

# ஜெனிவா புறப்பட்டது கூட்டமைப்பு

### உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் ஆவணத்துடன்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 13
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் ஆவணத்துடன், ஜெனிவா அமர்வில் பங்கேற்பதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான குழுவினர் நேற்று சனிக்கிழமை அதிகாலை கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர்.
ஜெனிவா சென்றுள்ள இந்தக் குழுவினர், நேற்றைய தினமே அங்கு தங்கியுள்ள உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30 ஆவது கூட்டத் தொடர் நாளை திங்கட்கிழமை

பக்கம் 29.....

## தமிழ்க் கூட்டமைப்புக்குள் முரண்பாடு கிடையாது

### மனம் திறந்தார் முதல்வர் விக்கி

கொழும்பு, செப்.13
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எந்தப் பிரிவினையோ அல்லது முரண்பாடோ கிடையாது என வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
ஜனநாயகக் கட்சிக்குள் கருத்து மோதல்கள் இடம் பெறுவது சாதாரண விடயம் எனக் குறிப்பிட்டுள்ள அவர் அதனை ஊடகங்கள் பெரிதுபடுத்தக் கூடாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.
இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளதாவது:-
எம்மிடையே எந்தப் பிரிவினையோ அல்லது பிளவுகளோ கிடையாது. அவ்வப்போது கருத்து முரண்பாடுகள் ஏற்படலாம். அதை சில சிங்கள, ஆங்கில ஊடகங்கள் பெரிதுபடுத்துகின்

பக்கம் 29.....

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராட்டம்

### நேற்று யாழ்.பஸ் நிலையம் முன்பாக



யாழ்ப்பாணம், செப். 13
தேசிய சிறைக் கைதிகள் தினத்திலாவது சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும் என வலியுறுத்தித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் யாழ்.மத்திய பஸ் நிலையம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.
இலங்கையின் பல்வேறு சிறைகளிலும் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் எதுவித நிபந்தனைகளும் இன்றிப் புதிய அரசு உடன் விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி ஆர்ப்

பக்கம் 29.....

## சர்வதேசப் பொறிமுறைக்கு இந்தியாவின் ஆதரவு தேவை

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருவதாக இந்திய ஊடகம் செய்தி

கொல்கத்தா, செப்.13
ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாகச் சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதற்கு இந்தியா ஆதரவளிக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளதாக கொல்கத்தா ரெலிகிராப் செய்தி வெளியிட்டுள்ளது.

பக்கம் 29.....

## வடக்கு அமைச்சரவையை மாற்றியமைக்கவேண்டும்

### பிரதி அவைத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 13
வடக்கு மாகாண சபையின் அமைச்சரவையை மாற்றியமைக்குமாறு, சபையின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன், வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரைக் கோரியுள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகின்றன. சபையின் அமைச்சரவையை முழுமையாக மாற்றியமைக்கவேண்டும். இது வடக்கு

பக்கம் 29.....

## மினிபஸ்-லொறி மோதியதில் ஆவரங்காலில் கோர விபத்து

### 32 பேர் காயம்



கரணவாய், செப். 13
யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் ஆவரங்கால் சந்திக்கு அண்மையில் நேற்று இடம்பெற்ற கோர விபத்தில் லொறி ஒன்று சின்னாபின்னமாகியதுடன் மினிபஸ் ஒன்றின் முன்பக்கம் சிதைந்தது.

பக்கம் 29.....

## உள்ளகப் பொறிமுறைக்கு கூட்டமைப்பின் ஆதரவை பெற அரசு தீவிர முயற்சி

*மோடியிடம்*
*உதவி கோருவார் ரணில்*

கொழும்பு, செப்.13
போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இணங்க வைப்பதற்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆதரவு கோரவுள்ளார் என இராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.
இந்தியாவின் பாரம்பரிய நண்பரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாளை இந்தியாவுக்குத் தனது அதிகாரபூர்வ

பக்கம் 29.....





www.sdb.lk

நிலையான வைப்புகளுக்கு
உயர்ந்த வட்டி

ஐந்து வருட
நிலையான வைப்பொன்றுக்கு
10.75%
உச்ச வருட வட்டி (முதிர்ச்சியில்)
வ.தே.வ. 8.98%

| | 3மாதம் | 6மாதம் | 1வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ.வ.வி.) | 7.25% | 7.50% | 8.25% |
| வ.தே.வ. | 7.45% | 7.64% | 8.25% |

ஏனைய நிலையான வைப்புகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதம்
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சணச அபிவிருத்தி வங்கிக் கிளையை நாடுங்கள்

011 5 411 411

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணைக்கு ஆதரவளிக்காது இந்தியா

## தனது நலனை கருத்திற் கொள்ளும் என்கிறார் முன்னாள் இராஜதந்திரி

கொல்கத்தா, செப்.13

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணையை இந்தியாவின் மோடி அரசு ஏற்றுக் கொள்வது மிகவும் கடினமானது – சாத்தியமற்றது என்று இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் நிருபம் சென் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தா ரெலிகிராப் நாளிதழுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொண்டால் அது இந்தியாவுக்குப் பாதிப்பாகி விடும். இதுபோன்ற விசாரணைகளை காஷ்மீரிலும் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையைத் தூண்டி விடும் என்று இந்தியா எச்சரிக்கையாக இருக்கிறது.

தனது அண்டை நாடாக இருப்பதால், இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்துவதற்கு இந்தியா இடமளிக்காது என்ற இரண்டாவது காரணமும் இருக்கிறது. எமது செல்வாக்கைப் பலப்படுத்த வேண்டிய பிரதேசம் இது. அதற்குப் பதிலாக எமக்கு ஏன் சர்வதேசத் தலையீடு தேவை? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (த–வ)

# வவுனியாவில் மகாகவியின் நினைவுதினம் அனுஷ்டிப்பு



வவுனியா, செப் 13

வவுனியா நகரவரியிறுப்பாளர் சங்கம், தமிழ் விருட்சம்,கலை இலக்கியநண்பர்கள் வட்டம் இணைந்து ஏற்பாடு செய்த, மகாகவி பாரதியாரின் நினைவுதினம் நேற்று முன் தினம் காலை 8.30 மணிக்கு குருமன்காடு சந்தியில் அமைந்துள்ள பாரதியார் சிலையடியில் தமிழ் மணி அகளங்கன் தலைமையில், வெகுசிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாரதியின் பெருமைகளைப் பறை சாற்றும் கவிதையை குரும்பையூர் ஐங்கரன் வழங்கியதுடன், தமிழ் மணி அகளங்கனின் செந்தமிழும் நாப் பழக்கம் எனும் நூலும் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் வவுனியா நகர சபையின் முன்னாள் நகரபிதாவும், வட மாகாண சபை உறுப்பினருமான ஜி.ரி.லிங்கநாதன், உப நகர பிதாவும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின்(புளொட்) மாவட்ட இணைப்பாளருமான க.இந்திரகுலசிங்கம் (மோகன்),வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், வவுனியா சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன், தமிழ் விருட்சம் அமைப்பின் போசகர் ரோய் ஜெயக்குமார், தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் சு.காண்டீபன், பொருளாளர் த.நிகேதன், ஆகியோருடன் சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர். (த–402)

# கண்டி பஸ்ஸில் பெண்களுடன் தகராறு செய்த சீருடையினர்

## யாழ் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப்.13

பொலிஸார் எனக் கூறி இராணுவச் சிப்பாய் ஒருவரும் அவரது நண்பரும் இணைந்து பஸ்ஸில் பயணிக்க இருந்த இரு பெண்களுடன் தகராறில் ஈடுபட்டதைத் தொடர்ந்து இரு பெண்களும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டியை நோக்கி நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்குப் பயணமாகும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:–

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கண்டி நோக்கிப் பயணிக்கும் பஸ்ஸில் பயணிப்பதற்கு இரு பெண் களும் காலையில் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருக்கைகளை முன் கூட்டியே பதிவு செய்துள்ளனர்.

பின்னர் இரவு 7 மணியளவில் பஸ் புறப்படத் தயாராக இருந்த நிலையில் இரு பெண்களும் பஸ் தரிப் பிடத்தில் பதிவு செய்யப்பட்ட இருக்கைளை வந்து பார்த்தபோது, அதில் இரு பெரும்பான்மை இளைஞர்கள் அமர்ந்திருந்துள்ளனர்.

அப்போது, இரு பெண்களும் தாம் பதிவு செய்த இரு இருக்கைகளையும் விடுமாறு இரு இளைஞர்களிடமும் கேட்டுள்ளனர். அதற்கு இரு இளைஞர்களும், தாம் பதிவு செய்த இருக்கைகள் என அந்தப் பெண்க ளுடன் தகராறில் ஈடுபட்டதுடன், தாம் பொலிஸார் என்றும் அந்தப் பெண்களிடம் கூறியுள்ளனர்.

ஆனாலும், இரு பெண்களும், யாழ்.மத்தியபஸ்நிலையமுகாமையாளருடன் பேசியதுடன், பஸ்ஸைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

அதன் பின்னர், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் மற்றும் மத்திய பஸ் நிலைய முகாமையாளர் உட்பட பஸ்ஸில் பயணித்த பயணிகள் அனைவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பொலிஸார் எனத் தெரிவித்துத் தகராறில் ஈடுபட்ட இரு இளைஞர்களிடமும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இந்த விசாரணையின் போது, ஒரு இளைஞர் காங்கேசன்துறை இராணுவ முகாமில் உள்ள இராணுவச் சிப்பாய் என்றும், மற்றவர் அவரது நண்பரெனவும், அவர் தனியார் நிறுவனமொன்றில் சாரதியாகக் கடமையாற்றுபவர் என்றும் விசா ரணையில் தெரியவந்துள்ளது.

இரு தரப்பினரிடமும் விசாரணை மேற் கொண்ட பொலிஸார் இரு இளை ஞர்களையும் எச்சரிக்கை செய்து விடுவித்ததுடன் இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தி பஸ்ஸைக் கண்டிக்கு அனுப்பி வைத்தனர். (த–106)

# அமைதியாக இடம்பெற்ற கந்தனின் தீர்த்தோற்சவம்

வலி.வடக்கு செப்.13

வரலாற்றுப் புகழ் மிக்க நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம் நேற்று மிகவும் பக்திப் பரவசமாகவும் மிக அமைதியாகவும் இடம்பெற்றது.

ஆலயத் தீர்த்தக் கேணியில் கடந்த காலத்தில் இளைஞர்கள் செய்த அட்டகாசத்தால் இம்முறை கேணியைச் சுற்றி பாதுகாப்பு இரும்பு வேலிகள் அமைக்கப்பட்டிருந்ததுடன் தீர்த்தக்கேணியின் உட்புறத்தில் சிவில் உடையில் சுமார் 200 பொலிஸார் வரை கடமையில் இருந்தனர்.

அத்துடன் ஆலயச் சுற்றாடலில் பொது மக்களுக்கு இடையூறாகவும், வழிபாடுகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையிலும் நடந்து கொள்பவர்களுக்கு எதிராகச் சட்டம் உரிய கடமையைச் செய்யும் என யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தமையாலும் பல வருட கால இடைவெளிக்குப் பின்னர் இம்முறை அடியவர்கள் மிகவும் அமைதியாகத் தீர்த்தத்தைக் கண்டு களிக்க முடிந்தது.

தூக்குகாவடிகள், பறவைக்காவடிகள் நேற்றும் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டதுடன் அங்கப் பிரதட்சணமும் இடம்பெற்றது. (த–86)

# கிளாலியில் குண்டு மீட்பு

சாவகச்சேரி, செப் 13

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலிப் பகுதியில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுப் படையினரின் குண்டுகள் செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளது.

கிளாலிப் பகுதியில் நேற்று முன் தினம் வளவொன்று துப்பரவு செய்தவர்கள் வெடிக்காத நிலையில் கைக்குண்டு காணப்பட்டதையடுத்துக் கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் அனுப்பினர்.

அங்கு விரைந்த பொலிஸார் அப்பகுதியில் பாதுகாப்பை ஏற்படுத்தி விட்டு இது தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்து படையினரின் குண்டுகள் செயலிழக்கச் செய்யம் பிரிவினர் மூலம் அப்புறப்படுத்த அனுமதி வழங்குமாறு கோரியிருந்தனர்.

பதில் நீதிவான் அனுமதி வழங்கியதையடுத்த குண்டு மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. (த)

# யாழில் போறா முஸ்லிம்களின் பள்ளிவாசல் நேற்றுத் திறப்பு





யாழ்ப்பாணம், செப்.13

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாகப் போறா முஸ்லிம்களின் தொழுகைச் செயற்பாடுகளுக் காகப் புனரமைப்புச் செய்யப்பட்ட பள்ளிவாசல் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உலக போறா முஸ்லிம்களின் பரிசுத்தம் நிறைந்த ஆன்மீக மதத்தலைவர் டி.ஆர்.சைய்யதினாமுபத்தல் சைபூத்தின் (ரீ.யு.எஸ்) கலந்து கொண்டு புதிய வடிவமைப்புடன், மறுசீரமைப்புச் செய்யப்பட்ட பள்ளிவாசலைத் திறந்து வைத்தார். இந்தியாவில் இருந்து வருகை தந்த இவர் போறா முஸ்லிம்களின் 53 ஆவது ஆன்மீகத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று தினங்கள் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் உலகின் பல பகுதிகளில் இருந்தும், இலங்கையின் பிற மாவட்டங்களில் இருந்தும் வருகைதந்த 20ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கலந்து கொண்டனர்.

அவர்களில் சிலர் கூறும்போது, போறா முஸ்லிம்களாகிய நாங்கள் மிகுந்த பாரம்பரியம் கொண்டவர்கள். எங்களுடைய பள்ளிவாசல் 1904ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டது. பின்னர் ஏற்பட்ட மாற்றங்களாலும், போர்ச் சூழ்நிலைகளாலும் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருந்தது. சிறிதாக அமைந்திருந்த எமது பள்ளிவாசல் இன்று புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதால் மகிழ்ச்சி அடைந்துள்ளோம். மூன்று தின நிகழ்வுக்காக இங்கே கூடியிருக்கிறோம்.

இன்று(நேற்று) எமது ஆன்மீகத் தலைவர் டி.ஆர்.சைய்யதினா முபத்தல் சைபூத்தின் சிறப்பு வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையில் கலந்து கொள்வது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது. பள்ளிவாசலை அமைப்பதற்கு அனுசரணையாக இருந்த யாழ்.மாவட்ட அதிகாரிகள் மற்றும் மக்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் என குறிப்பிட்டனர். (த–ரி5–106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவிராஜின் கொலைக்கு பயன்படுத்திய துப்பாக்கி படை அதிகாரிக்குரியது

## விசாரணைகளில் தகவல்

கொழும்பு, செப்.13
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜை படுகொலை செய்வதற்குப் பயன்படுத்திய துப்பாக்கியை உயர் இராணுவ அதிகாரியொருவர், கொலையாளிக்கு வழங்கியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
ரவிராஜ் கொலை குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இதனைத் தெரிவித்துள்ளனர் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.
இராணுவத்தின் ஆயுதமொன்று தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
2006ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடராஜா ரவிராஜ், நாரஹேன்பிட்டியில் வைத்து இனம்தெரியாத துப்பாக்கிதாரியின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிச் சாவடைந்தார்.
படுகொலை செய்ய பயன்படுத்தப்பட்ட ரி–56 ரக ஆயுதத்தை உயர் இராணுவ அதிகாரியொருவர் வாடகை அடிப்படையில் வழங்கியதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.
லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இராணுவ உயர் அதிகாரிகளிடம் நடத்தப்பட்டுவரும் விசாரணைகளில் பல்வேறு அரசியல் படுகொலைகள் பற்றிய தகவல் கள் அம்பலமாகி வருவதாகத் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.(த–வ–5)



## பிரதமரின் பேச்சாளராக ரோஸி நியமனம்

கொழும்பு, செப்.13
ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனநாயக்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஊடகப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
அத்துடன் பிரதமர் அலுவலகத்தின் துணைத் தலைவியாகவும் ரோஸி சேனநாயக்க நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
ரோஸி சேனாநாயக்க, கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (த–வ)

## பிரான்ஸ் தூதராக திலக் ரணவிராஜா

பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவராக நிர்வாக சேவை சிரேஷ்ட உத்தியோகத்தரும், ராஜதந்திரியுமான திலக் ரணவிராஜா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 8ஆம் திகதி பிரான்ஸ் ஜனாதிபதியைச் சந்தித்து தனது உத்தியோகபூர்வ நியமனக் கடிதத்தைக் கையளித்ததுடன், ஜனாதிபதி மைத்திரிபாலவின் விசேட வாழ்த்துச் செய்தியையும் கையளித்திருந்தார்.
கடந்த ஜனவரி தொடக்கம் திலக் ரணவிராஜா ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனவின் ஆலோசகர்களில் ஒருவராகக் கடமையாற்றி வந்தார். அதற்கு முன்னர் பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு அமைச்சு, ஊடக மற்றும் தொடர்பாடல் அமைச்சு, சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சு, சமூக நலனோம்பல் அமைச்சு, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு, மஹாவலி அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் செயலாளராகக் கடமையாற்றியுள்ளார்.
அத்துடன் சர்வதேச ரீதியில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம், ஐக்கிய நாடுகள் பொருளாதார செயற்றிட்டம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு, உலக சுகாதார அமைப்பு என்பவற்றிலும் இவர் ஆலோசகர் தர பதவிகளை

# தமிழ்க் கூட்டமைப்பும் மு.காவும் இரட்டைக் குழல் துப்பாக்கிகள்

## மாகாண அமைச்சர் துரைராசசிங்கம் தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த மட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லீம் காங்கிரஸும் இரட்டைக் குழல் துப்பாக்கிகளாக இருப்போம். இது அழிவுக்கான துப்பாக்கி அல்ல. சிறுபான்மை மக்களுடைய உரிமைகளைப் பெறுவதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்கும் துப்பாக்கி' என கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும்
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம்
தெரிவித்தார்.
முதலமைச்சரின் பிரதேச சபைகளுக்கான களப் பயணம் தொடர்பில் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையில்உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–
எமது மாவட்டத்தில் இருக்கின்ற ஒவ்வொரு பிரதேச சபைகளுக்கும் சென்று அவற்றை ஊக்குவிக்கின்ற செயற்பாடுகளை நாம் இப்போது மேற்கொண்டிருக்கின்றோம். அந்த வகையில் சரியான ஒரு செயற்றிட்டம் இங்கு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அமைச்சரினுடைய ஆளணி இங்கு வந்து ஒவ்வொரு சபைகளையும் ஆராய்ந்து சபைகளில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அவர்களுடைய மதிப்பீடுகளைச் செய்திருக்கின் றார்கள்.
நாம் கேட்பது அதிகாரப் பகிர்வு அல்லது அதிகாரப் பங்கீடு, நாட்டிலுள்ள முக்கிய விடயங்களைத் தவிர்த்து ஏனைய விடயங்கள் தொடர்பாக நாங்களே எங்களுக்குத் தேவையான சட்டங்களை ஆக்கிக் கொள்வது, எங்களுக்குத் தேவையான நிதியினை சேகரித்துக் கொள்வது, எங்களை வளப்படுத்திக் கொள்வது, எமது கலை, கலாசார, பண்பாட்டு விடயங்களைக் கையாள்வது போன்றன தான் அதிகாரப் பங்கீடு. அதனைத் தான் நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். கிழக்கு மாகாண சபையில் எமக்கு இருக்கும் இந்தக் குறுகிய காலப் பகுதியில் எமது அடைவுகளை நாம் அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் இருக்கின்றோம்– என்றார். (த–10)

# புலமைப் பரிசில் வினாத்தாளில் சிக்கலான கேள்வியால் சர்ச்சை

## இலங்கை ஆசிரியர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

நடைபெற்று முடிந்த ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளில் கேட்கப்பட்டிருந்த சிக்கலான கேள்வி ஒன்றினால் மாணவர்களும், ஆசிரியர்களும் அசௌகரியப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.
சிவனொளிபாதமலை எந்த மாகாணத்துக்கு உரியது என்று இந்த முறை புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளில் வினா ஒன்று எழுப்பப்பட்டிருந்தது. அளவையியல் திணைக்களத்தின் படி, சிவனொளிபாதமலை சப்ரகமுவ மாகாணத்துக்கு உரியது.
ஆனால் வரைபடத்துக்கு அமைய இது மத்திய மாகாணத்துக்கு உரியதாகக் காணப்படுகிறது. எனவே இது சிக்கலுக்குரிய ஒரு வினா என்று அவர் தெரிவித்துள்ளார். (த–வ)

# இரண்டு பதில்களுக்கும் புள்ளிகள் வழங்கப்படும்

## பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சிக்கலான கேள்விக்கு மாணவர்களால் அளிக்கப்பட்ட இரண்டு விடைகளுக்கும் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.
உண்மையில் சிவனொளிபாதமலை சப்ரகமுவ மாகாணத்துக்கே உரியது. எனினும் சில ஆசிரியர்கள் அது மத்திய மாகாணத்துக்கு உரியது என்று மாணவர்களுக்குப் புகட்டியுள்ளனர்.
இந்த நிலையில் ஆசிரியர்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில், [illegible] இரண்டு விடைகளுக்குமே புள்ளி வழங்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.பியை மீண்டும் விசாரிக்கப் பணிப்பு

## பிரதமர் ரணில் விடுத்தார்

கொழும்பு, செப். 13
விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் ஆயுத முகவரான குமரன் பத்மநாதன் (கே.பி.)குறித்து மீண்டும் ஆரம்பத்திலிருந்தே விசாரணைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 10ஆம் திகதி பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.
கே.பியின் விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதையடுத்து பிரதமர், ரணில் விக்கிரமசிங்க வால் இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.
சட்டமா அதிபரின் கருத்து நிலைப்பாட்டுக்கு அமைய சுடுகலன்கள் சட்டத்தின் கீழ் கே.பிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைத் தாக்கல் செய்ய இயலாதெனத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.
இதற்கமைய கேபிக்கு எதிராக ஆரம்பத்திலிருந்து விசாரணைகளை ஆரம்பிக் குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.(த–22)

# நெல் கொள்வனவை அவதானிக்க 6 அமைச்சர்களை உள்ளடக்கி குழு

கொழும்பு, செப். 13
நெல் கொள்வனவு குறித்து அவதானம் செலுத்தி அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள 6 அமைச்சர்கள் உள்ளடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்கு கடந்த 9 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் முதற்தடவையாகக் கூடிய அமைச்சரவையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அமைச்சரவைத் தீர்மானத்தின் பரிந்துரைக்கு அமைய, அமைச்சர்களான ரவி கருணாநாயக்க பீ.ஹரிசன், துமிந்த திஸாநாயக்க, காமினி ஜயவிக்கிரம பெரேரா, மகிந்த அமரவீர, ரிஷாத் பதியுதீன் ஆகியோர் இந்தக் குழுவுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
இந்தக் குழுவும் கடந்த 9 ஆம்திகதி கூடியிருந்ததோடு நெல் கொள்வனவு தொடர்பாக அவசியப்படும் நீண்டகால மற்றும் குறுகிய காலத் தீர்வுகள் குறித்து அதில் கலந்துரையாடப்பட்டது.
அதேபோன்று நெல் கொள்வனவுக்குத் தேவைப்படும் மேலதிக நிதிக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.
கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான பீ.ஹரிசன் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,
நெல் கொள்வனவை அரசு நிறுத்திவிட்டதாக பரப்புரை செய்யப்பட்டு வந்தாலும், அரசு அத்தகைய எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை. நெல்லைக் கொள்வனவு செய்யும் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும் –என்றார். (த–22)

# வாழைத்தோட்டங்களில் திருடர்களின் அட்டகாசம்

நீர்வேலி பிரதேசத்தில் வாழைத் தோட்டங்களில் வாழைக்குலைத் திருடர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.
இரவு வேளைகளில் வாழைத் தோட்டங்களுக்குச் செல்லும் திருடர்கள் அங்குள்ள வாழைக் குலைகள் மீது தமது கைவரிசையைக் காட்டிவருகின்றனர்.
நேற்று முன்தினம் இரவு நீர்வேலி மேற்கு மாலை வைரவர் ஆலயத்தை அண்டிய வாழைத்தோட்டத்தில் உள்ள 60இற்கும் மேற்பட்ட வாழைக்குலைகளைத் திருடர்கள் மிகவும் தந்திரமாக வெட்டிச் சென்றுள்ளனர். திருடர்களால் வெட்டிச் செல்லப்பட்ட இந்த வாழைக் குலைகள் பிஞ்சுத் தன்மையானவை என்று விவசாயிகள் தெரிவித்தனர்.
இதனை விட நீர்வேலி வடக்கு மற்றும் மாசிவன் போன்ற பகுதிகளிலும் அதிகளவிலான வாழைக் குலைகள் வெட்டப்பட்டுள்ளன.
இந்தத் திருடர்களின் கைவரிசையை அடுத்து விவசாயிகள் தொடர்ச்சியாக வாழைத் தோட்டங்களுக்கு காவல் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
தற்போது வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பை அடுத்தே திருடர்கள் வாழைக்குலைகளில் கண் வைத்துள்ளனர். (த–17)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பயங்கரவாதத் தடைச்சட்டம்; கழற்றி எறியப்படுவது எப்போது...?

இந்த நாட்டின் சட்டங்கள் மிகப் பலவற்றினதும் முக்கிய அங்கமாக பயங்கரவாதத் தடைச் சட்டம் உருவெடுத்துள்ளது. அது மிகவும் கவலைக்கு உரியதாகும்.-

அது மட்டுமன்றி, எமது தேசத்தின் சட்டங்கள் பலவற்றினதும் அங்கங்களாகும் ஒன்றாகவும் பயங்கரவாதத் தடைச்சட்டம் விளங்குகின்றது.--

ஆகவே, அதனைக் கருத்தில் கொண்டு அந்தச் சட்டத்தை இல்லாது ஒழிப்பதற்கு, ஒன்றுபட்ட அதிக அளவிலான முயற்சிகள் தேவைப்படுகின்றன.--

இந்தப் பேராபத்தை, "கபே" (நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம்) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக்காட்டி உள்ளார்; ஊன்றி எடுத்துரைத்து உள்ளார்.

நல்லாட்சியின் மகத்துவத்தை உணர்ந்து அதனை ஏற்றுக்கொண்ட அரசியல் தரப்புகள் மற்றும் கட்சிகள், ஆபத்து விளைவிக்கும் இந்தப் பொல்லாத சட்டத்தைக் களைந்து எறிவதற்கு ஒன்று சேரவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டிருந்த போதிலும், அந்தச் சட்டம் கொண்டிருந்த அதே வகை அதிகாரங்களை, பயங்கரவாதத் தடைச் சட்டமும் தன்னகத்தே கொண்டுள்ள ஆபத்தான நிலையையும் 'கபே'யின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஊன்றித் தொட்டுக் காட்டி இருக்கிறார்.

இந்த ஆண்டு ஜனவரியில், ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர், வடக்கின் சிவில் அமைப்புக்கள், விசேடமாகக் காணாமற்போனோர் விவகாரத்தைக் கையாளும் அமைப்புக்கள்--

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அகற்றுமாறு கோரிக்கை விடுத்திருந்தன.

ஆனால், அந்தச் சட்டத்தை நீக்கினால், இப்போதைய அரசின் வெற்றி சந்தேகத்துக்கு உரியதாகிவிடும் என்று, தென்னிலங்கையின் சிவில் அமைப்புக்கள் பலவும் அச்சம் ஊட்டி இருந்தன. மொத்தத்தில் இந்த தன்னல அரசியல் "உத்தி" நாடாளுமன்றில் முன்னர் அங்கம் வகித்த தரப்புக்களால் மேற்கொள்ளப்பட்டது; அது ஊன்றிக் கவனத்திலும், கருத்திலும் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

எனினும், எப்படியோ, பதவிக்கு வந்துள்ள புதிய அரசு இது விடயத்தில் அக்கறையுடன் செயற்பட வேண்டிய வேளை இது. குறிப்பாக இது விடயத்தில் புதிய அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும், அதற்கு ஆதரவு நல்கிய கட்சிகளுக்கு மட்டுமன்றி, சிவில் சமூக அமைப்புக்களுக்கும் மிகப்பெரிய அளவில் உண்டு. அதனை அவர்கள் மறந்தும் தவிர்க்கக்கூடாது.

அவ்வாறு செய்யின் அவர்கள் பருத்துக் கொழுத்த அரசியல் ஆசாடபூதிகளாகக் கொள்ளப்பட வேண்டியவர்கள்; மக்களால் விரட்டிக் கலைக்கப்பட வேண்டியவர்கள்!

பயங்கரவாதத் தடைச்சட்டம், 1979இல் தற்காலிக ஏற்பாடாகவே அப்போது இயற்றப்பட்டது. பின்னர் 1982'இல் திருத்தப்பட்டது, பின்னர் நிரந்தர சட்டமாக்கப்பட்டது. அது நடைமுறையில் இருந்தபோதே சிங்கள அரசியல் தரப்புகளால் 1983 இல் தமிழ் மக்கள் மீது இனக்கலவரம் வெடிக்க வைக்கப்பட்டது; ஏவிவிடப்பட்டது.

உள்ளதைச் சொல்லப்புகின், அந்தந்த வேளைகளில் ஆட்சிக் கதிரையில் அமர்ந்திருந்த தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் பலரும் இனக்கலவரத்தை உள்ளாடும் கள்ளாடுமாகத் தூண்டித் தமது அரசியல் பலத்தை அதிகரித்துக் கொண்டார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மக்களை, குறிப்பாகச் சிறுபான்மை மக்களை, மிகக் குறிப்பாகத் தமிழ் மக்களை, அவர்களின் போராட்டங்களை நசுக்கி ஒடுக்குவதற்கே பயன்படுத்தப்பட்டது. பல தமிழ் இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணைகள் எதுவுமின்றி மிகநீண்ட காலத்துக்கு சிறைகளில் தடுத்து வைக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

அவ்வப்போது ஆட்சியில் இருந்த, தெற்கின் இரண்டு பெரிய கட்சிகளும், தமது திமிர்த்தனத்தையும், ஏன் கெட்டித்தனத்தையும் அதன்மூலம் காட்டினார்கள்.

மேலும், பயங்கரவாதத் தடைச்சட்டம் மக்களின் தனிப்பட்ட சுதந்திரங்களை முறுக்கி, சுருட்டுவதற்கு வசதி செய்து கொடுத்தது என்பதனை எந்தத் தரப்பினரும் மறந்துவிடலாகாது.

நல்லாட்சியை உருவாக்கியவர்கள் அதனை முழு அளவில் ஏற்றுக்கொண்டவர்கள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை புத்தகத்தில் இருந்து கழற்றி எறிவது எப்போது? குறுகிய காலத்தில் அது நடைமுறைக்கு வருமா....?

ஜனநாயகத்தின் உண்மையான வளர்ச்சிக்கு அத்தியாவசியமான "கபே" அமைப்பின் கருத்துக்களை, பரிந்துரைகளை அரசு உள்ளார்ந்து மனங்கொண்டு செயற்படுமா?

# பொறுப்புக்கூறும் செயற்பாடுகளை புதிய அரசு முன்னெடுக்கவேண்டும்

## ஐ.நா வதிவிடப் பிரதிநிதி கோரிக்கை

கொழும்பு, செப்.13

புதிய நாடாளுமன்றத்தினூடாகக் கடமை மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதாக இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி சுபைனோ நண்டி தெரிவித்துள்ளார்.

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்வு நேற்று முன்தினம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. இதன்போதே இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிட பிரதிநிதி சுபைனோ நண்டி இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் குறிப்பிடு கையில்,

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது தொடர்பில் அழகான விளக்கமொன்றைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கியிருந்தார்.

தற்போது புதிய அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் மிகவும் பாராட்டுதலுக்குரியது. புதிய நாடாளுமன்றம் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த கூடியதாக திகழவேண்டும்.

இதற்கமைய புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊழல் மோசடிகளிலிருந்து முழுமையாக நீங்கி நடக்க வேண்டும். நீதித்துறை மற்றும் தொழில்நுட்ப ரீதியான அறிவை மேம்படுத்திக் கொள்ளவேண்டும்.

அதேபோன்று புதிய நாடாளுமன்றத்தினூடாக கடமை மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் புதிய அரசின் செயற்பாடுகள் அனைத்தும் எமக்கு நம்பிக்கை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளன.

புதிய நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளுக்குத் தொழில்நுட்ப ரீதியான உதவி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக காணப்படுகின்றன. மேலும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இது குறித்தான அறிவூட்டல் செயற்பாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை உதவும்.

அத்துடன் நாடாளுமன்றத்தின் தெரிவுக்குழு, நிறைவேற்று குழு செயற்பாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் பெரும் முக்கியத்துவம் வழங்கிச் செயற்படும் என்று கூறினார். (த)

# புதிய கொள்கையுடன் புதிய அரசியல் பக்கம்

## வெளிவிவகாரப் பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா நேற்று தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

சர்வதேச மட்டத்தில் பொருளாதார ரீதியில் பெரும் பின்னடைவை சந்தித்துள்ள இலங்கையில் புதிய வெளிநாட்டுக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கிய ஓர் அரசியல் பக்கத்தைப் புரட்டவுள்ளதாக வெளிவிவகாரப் பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

வெளிவிவகாரப் பிரதியமைச்சராக தனது கடமைகளை கொழும்பு 01இல் அமைந்துள்ள வெளிவிவகார அமைச்சில் நேற்று உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

என்னுடைய அரசியல் வரலாற்றில் இன்று முக்கியமான நாள். நான் அரசியலில் ஈடுபட ஆரம்பித்த காலம் முதல் இன்றுவரை பொருளாதாரம் சம்பந்தமான விடயங்களில்தான் ஈடுபட்டுவந்தேன். ஆனால், அதனையும்விட முக்கியமான பொறுப்பை ஜனாதிபதியும், பிரதமரும் தற்போது எனக்கு வழங்கியுள்ளனர்.

இன்று இலங்கை பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துவரும் நிலையில், வெளிவிவகார அமைச்சு என்பது முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பாகும். அமைச்சர் மங்கள சமரவீரவுடன் இணைந்து பெரிய வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவுள்ளேன்.

வெளிநாட்டுக் கொள்கைகளின் முறையற்ற தன்மை காரணமாக கடந்த பத்து வருடகாலமாக இலங்கை பொருளாதார ரீதியில் பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. இலங்கையின் ஏற்றுமதி 15 வீதமாகக் குறைந்துள்ளது. பங்குச் சந்தையில் உள்நாட்டு உற்பத்தியாளர்களின் உற்பத்திக்குச் சிறந்த சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. மாறாக, அவர்களின் வருமானம்தான் சூறையாடப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் ஏற்படுத்தப்பட்ட புதிய அரசின்மூலம் வெளிநாட்டுக் கொள்கைகளில் மாற்றத்தையும், இணக்கத்தையும் ஏற்படுத்தி இலங்கைக்கு சிறந்த சந்தை வாய்ப்பை சர்வதேச ரீதியில் உருவாக்கியுள்ளோம்.

எமது பிரச்சினைகள் ஜெனிவாவை மட்டும் மட்டுப்படுத்தியதல்ல. அதனையும் தாண்டிய பிரச்சினைகள் உள்ளன. இவை அனைத்தையும் எமக்குச் சாதகமான முறையில் மாறிக்கொள்ளக்கூடிய வகையில் வெளிநாட்டுக் கொள்கைகளையும், பொருளாதாரத் திட்டங்களையும் ஏற்படுத்து வதன் மூலம் தான் இலங்கையில் நிலையான சமாதானத்தையும், பொருளாதார அபிவிருத்தியையும் அனுபவிக்க முடியும். இத்தகைய அனைத்துச் செயற்பாடுகளையும் கருத்திற்கொண்டு தேசிய அரசு பயணிக்க வேண்டியுள்ளது– என்றார். (த–சி)

# சிபா ஒப்பந்தத்தால் இலங்கைக்கு அழிவு

## தேசிய சுதந்திர முன்னணி எச்சரிக்கை

கொழும்பு, செப்.13

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சிபா என்று சுருக்கமாக அழைக்கப்படும் விரிவான பொருளாதாரக் கூட்டுறவுக்கான ஒப்பந்தம் ஏற்பட்டால், அதனால் இலங்கை மக்களுக்கும் பொருளாதாரத்துக் கும் மிகப்பெரிய அழிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பொன்றின் போது அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த விமல் வீரவன்ச,

நாளை இந்தியா செல்லவுள்ள ரணில் விக்கிரமசிங்க இந்திய அரசுடன் வர்த்தகம் தொடர்பாக சிபா ஒப்பந்தத்தில் கையெழுத் திடுவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த ஒப்பந்தம் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் கையெழுத் தி டுவதற்குத் தயாரானபோது முன்வைக்கப்பட்ட எதிர்ப்புக்கள் காரணமாக அது பிற்போடப்பட்டது. ஆனால் தற்போதைய ரணில் அரசு அதனை நடைமுறைப்படுத்தத் தயாராகி வருகிறது.

கூட்டுறவுக்கான ஒப்பந்தம் ஏற்பட்டால், அதனால் இலங்கை மக்களுக்கும் பொருளாதாரத்துக் கும் மிகப் பெரிய அழிவு ஏற்பட வாய்ப்புள்ளது–என்றார். (த)

### யானைக் கூட்டங்களை ரசிக்கக் குவியும் சுற்றுலாப் பயணிகள்

கொழும்பு, செப் 13

மின்னேரியா தேசிய வனத்தில் 150 முதல் 200 வரையான யானைகள் நடமாடித் திரிவதால் அந்த யானைக் கூட்டங்களைப் பார்த்து ரசிப்பதற்குப் பெரும் எண்ணிக்கையான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தினமும் குவிகின்றனர்.

தற்போது இந்த யானைக் கூட்டங்களுக்கிடையே இருபதுக்கும் மேற்பட்ட யானைக் குட்டிகளும் நடமாடித் திரிவதால் சுற்றுலாத்துறை ஈர்ப்பை அதிகரித்துக் கொள்வதற்கும் ஆற்றல் காட்டியுள்ளது.

இதன் காரணமாக சுற்றுலா வழிகாட்டிகளினதும், சபாரி ஜீப் வண்டிகளின் உரிமையாளர்களினதும் கைகளில் பணம் புரளுவதாக தெரிவிக்கப்படுகின்றது. நாளொன்றுக்கு 200 வரையான சபாரி ஜீப் வண்டிகள் உல்லாசப் பயணிகளைத் தேசிய வனத்துக்கு ஏற் றிச் செல்வதாகவும் கூறப்படுகின்றது. (த–22)

### மாணிக்க கங்கையில் முதலைகளால் ஆபத்து

கதிர்காமத்தில் உள்ள மாணிக்க கங்கையில் கோயிலை அண்டியுள்ள இறங்குதுறையிலும், இரண்டாம் இலக்கப் பாலத்தை அண்டியும் நடமாடும் முதலைகளால் பக்தர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

கதிர்காமம் மாணிக்க கங்கையில் குளிப்பதற்காக இறங்கிய இளைஞரொருவர் கடந்த மாதம் பெரும் முதலையொன்றுக்கு இரையாகியிருந்தார். இந்தச் சம்பவத்தின் பின்னர் முதலைகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு அறிவித்தல் பலகைகள் மாணிக்க கங்கையின் சில இடங்களில் நடப்பட்டிருந்தாலும் அந்த ஆபத்தான இடங்களுக்குச் சென்று நீராடுவது-மற்றும் மீன்கள் போன்ற பிராணிகளுக்கு உணவுகளைப் போடுவது போன்ற செயற்பாடுகளில் கதிர்காமத்தைத் தரிசிக்க வரும் பக்தர்களில் பெரும்பாலானோர் ஈடுபட்டுள்ளதைக் காண முடிகின்றது.

வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் இந்த முதலைகளைப் பிடித்து வேறு பிரதேசம் ஒன்றுக்குக் கொண்டு சென்று விடுவதற்கோ அல்லது மாணிக்க கங்கையில் ஆபத்தான இடங்களில் பக்தர்கள் இறங்காத விதத்தில் முட்கம்பி வேலிகளை அமைப்பதற்கோ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (த–22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

### மாணவ முதல்வர் தினமும், நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 125 ஆண்டு நிறைவு காணும் இவ்வேளையில் எதிர்வரும் 15.09.2015 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவ முதல்வர் சபையால் மாணவ முதல்வர் தினமும் "The Leader" நூல் வெளியீடும் நடைபெறவுள்ளது. இவ்வேளை அனைத்து முன்னாள் மாணவ முதல்வர்களும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(C/18829) (10.17)


## மரண அறிவித்தல்



### மீனாட்சி சுந்தரம் கோவிந்தராயன்

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தின் ஆஸ்தான நாதஸ்வர வித்துவான் மீனாட்சி சுந்தரம் கோவிந்தராயன் நேற்று (12.09.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மீனாட்சிசுந்தரம்-லீலாவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவபாலசுப்பிரமணியம் (தவில் வித்துவான்) அவர்களின் அன்புத் தம்பியும், சாந்தியின் அன்புக் கணவரும், மேகலா சிந்து பைரவி, காலஞ்சென்ற கஸ்தூரி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வக்குமாரி, தட்சணாமூர்த்தி (தவில் வித்துவான்), துளசிபரன் (தவில் வித்துவான்), ரேவதி, குகன் (நாதஸ்வர வித்துவான்) ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், நாதரூபன், பிரபாகரன் (ஆசிரியர் யா/நயினாதீவு மகா வித்தியாலயம்), பகீரதி ஆகியோரின் மாமனும், சஜீவன், கஸ்தூரி, கௌசிகா, கஜானா, அம்ஷிகா, கிருஷாந், சந்தோஷ், அர்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/18831) (10.17)

## மரண அறிவித்தல்



மலர்வு 03.12.1982 உதிர்வு 10.09.2015

### செல்வராசா சாந்தன்

சுன்னாகம் தெற்கு சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா சாந்தன் 10.09.2015 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் றஞ்சினி தம்பதியரின் அன்பு மக னும் நிறஜாவின் அன்புக் கணவரும், அன்ரியா, அஜன்ரிக்கா ஆகியோரின் அன்புத் தந்தை யும் உஷாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.09. 2015 சுன்னாகம் தெற்கிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : சகோதரி
S. உஷா


## முத்துஐயன்கட்டு ப.நோ.கூ.சங்கம் ஒட்டுசுட்டான்

### பதவி வெற்றிடம்

முத்துஐயன்கட்டு ப.நோ.கூ.சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பு செய்யப்படவுள்ளதால் தகைமையுள்ள விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரிகளில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலும் மாவட்ட ரீதியில் தகுதியான விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் யாவும் சகல விவரங்களும் உள்ளடக்கப்பட்டதாக சுயமாகத் தயாரிக்கப்பட்டு விண்ணப்பத்தினை தலைவர், முத்துஐயன்கட்டு ப.நோ.கூ.சங்கம் ஒட்டுசுட்டான் என்னும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ அன்றேல் நேரடியாகவோ 28.09.2015 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரியின் வயதெல்லை 18-40 வயது வரை. கூட்டுறவு சேவையிலுள்ளோர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாதென்பதுடன், கூட்டுறவு நிறுவனத்தில் கடமையாற்றுவோர் விண்ணப்பிக்கும்போது நிறுவனத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

**1. பொது முகாமையாளர்:** 101/08

சம்பள அளவு:- 11200.00+30%(3360.00) 10x140-10x150=17460.00 ம் இதர படிகளும்

**கல்வித் தகைமை:**

(அ) கூட்டுறவு ஊழியர் 9ஆவது சம்பளத் திட்ட முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியிலான ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 10ஆவது சம்பளத் திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 6 ஆண்டு கால அனுவம்

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 4 ஆண்டு கால அனுபவம்

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 வருட கால அனுபவம் / க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 6 வருடசேவையாற்றிய அனுபவம்.

தலைவர்,
மு.ஐ.க.ப.நோ.கூ.சங்கம்,
ஒட்டுசுட்டான்.

(C/18825) (10.17)


## கண்ணீர் அஞ்சலி



எமது கழக அங்கத்தவரான
விஸ்ணுகாந்தனின் தந்தையும்
கழக ஆர்வலருமான

### ஜெகநாதன் செட்டியார் செந்திராஜா செட்டியார்

அவர்கள் 11.09.2015 காலமான செய்தி அறிந்து துயரடைவதோடு அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா இறைவனடி சேரப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்
சம்பியன் லேன், கொக்குவில்.

(C/18823) (10.17)


## உரும்பிராயில் காணி விற்பனைக்கு

வீடுகள் கட்டுவதற்கோ அல்லது வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கோ உகந்த பலாலி வீதியை முகப்பாக கொண்ட 9½ பரப்புக்காணி உடனடி விற்பனைக்குள்ளது முழுதாகவோ அல்லது இரண்டு அல்லது மூன்று துண்டுகளாகவோ வாங்கலாம்.

கொள்வனவு செய்ய விரும்புவோர் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்

T.P: 077 671 4556

(64612)(12.13.16.17)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

**தேவை**

யாழ். நகரில் இயங்கிவரும் நிறுவனங்களுக்கு வேலைக்கு ஆள்கள் தேவை.
* அறை பராமரிப்பாளர் * வரவேற்பாளர்
* பழரசம் / குளிர்பானம் தயாரிப்பாளர்
* சஜ்ஜான் கடையில் வேலைசெய்ய/கணினிகளுக்கு
வழங்கப்படும்,
தொடர்பு: 077 500 6769

(64646) (10.17)

"இளையோர்களின் எதிர்காலத்துக்கான உத்தரவாதம்.."

## கல்விக் கருத்தரங்கு

O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான உயர்கல்வி பட்டப் படிப்புக்கும் வேலைவாய்ப்புக்குமான வழிகாட்டல் கருத்தரங்கு .

திகதி - 14-09-2015
நேரம் - காலை 10 மணிக்கு
இடம் - New Science World
Brown Road,
Jaffna.

தொ.பே.இல : 021-4927088/0777592666


## மரண அறிவித்தல்



### சீவரத்தினம் நவரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - காரைநகர்)

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும், நடுத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் (யாழ்ற்றன் கல்லூரி) சீவரத்தினம் நவரத்தினம் நேற்று (12.09.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெகசோதியின் (ஓய்வுபெற்ற உப அதிபர்-யாழ்ற்றன் கல்லூரி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜசிவம் (சமுர்த்தி உத்தியோகத்தர் காரைநகர்), கலாசக்தி (ஆசிரியர்-யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அற்புதமலர் (ஆசிரியர், யா/கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம. வித்தியாலயம்), றொபேஷன் (ஆசிரிய ஆலோசகர் வலயக் கல்வி அலுவலகம், துணுக்காய்) ஆகியோரின் பாசமிகு மாமனும், ஜெயலட்சுமி, காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் தனலட்சுமி, காலஞ்சென்றவர்களான விஜயலட்சுமி, சோமசுந்தரம் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜனனன், சஞ்சீவன், பிரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை காரைநகர் நடுத்தெருவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நடுத்தெரு, காரைநகர்.
021 2211416

தகவல்: மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C/18828) (10.17)

## மரண அறிவித்தல்



176/3, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அருகில்)

### தம்பிராசா சபாரத்தினம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும், இல.257, ஸ்கந்தபுரம், கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும், இல.176/3, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா சபாரத்தினம் நேற்று முன்தினம் (11.09.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுபாஜினி (ஆசிரியர் - முதலாம் பாடசாலை, ஸ்கந்தபுரம்), சுரேஸ் (மாவட்ட விலை மதிப்பீட்டாளர், வடபிராந்தியம்), றஜீவ் (உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர், வடபிராந்தியம்) ஆரணி (யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பீட இரண்டாம் வருட மாணவி), சிந்து (ஸ்ரீ ஜெயவர்த்தன புர பல்கலைக்கழக முகாமைத்துவ பீட இரண்டாம் வருட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரூபினி, கிருஷ்ணப்பிரியா ஆகி யோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (11.09.2015) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
0772290303


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப்.13

குட்டியப்புலம் அபிராமி அம்பாள் மஹா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக கிரியைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி ஹோமம், பூஜைகள் என்பன நடைபெறும் எனவும் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி முதல் பி.ப 4.00 மணிவரை அடியார்கள் எண்ணை சாத்துதல் இடம்பெறும் எனவும் ஆலயத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் புதன்கிழமை காலை 8.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி அம்பாளுக்கும் பரிவார தெய்வங்களான சிவன், கௌரியம்பாள், விநாயகர், முருகன், வைரவர் ஆகிய மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் நூற்றுமுப்பது ஆண்டுகளுக்கு முன்பாக ஊர்மக்களால் பூவரசு மரத்தடியில் கொட்டில் அமைத்து பொங்கல் பூசை செய்து வழிபடப்பட்டு வந்த இந்த ஆலயம் ஊர் மக்களின் அயராத முயற்சியால் கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# கைதடி முதியோர் ஆன்மீகச் சுற்றுலா

யாழ்ப்பாணம், செப். 13

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்கள் ஆன்மீக வழிபாட்டுக்காக பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். குறிப்பாக வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் மற்றும் வல்லிபுர ஆழ்வார் போன்ற ஆலயங்களுக்கு இந்த முதியோர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். அடுத்த வாரத்தில் இந்த முதியோர்களின் ஆன்மீகச் சுற்றுலா இடம்பெறும்.

சம்பந்தப்பட்ட ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லப்படும் முதியோர்கள் நினைவாக விசேட பூசை மற்றும் கூட்டு வழிபாடுகளும் அவர்களால் நிகழ்த்தப்படும்.

முதியோர் இல்லத்தின் இந்த ஆன்மிகச் சுற்றுலாவின்போது வடக்கில் உள்ள அநேகமான இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களுக்கு இல்ல முதியோர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-17)


## வரும்காலம் மழைகாலம் நீர்கசிவைத் தடுப்போம்
(Water Proofing)

வரும்காலம் மழைகாலம் என்பதனால் தங்கள் வீடுகள். வியாபார ஸ்தாபனங்களில் உள்ள சிமெந்திலான கூரைகள். நீர்த் தொட்டிகள் ஆகியவற்றில் ஏற்படும் நீர்க்கசிவை நிரந்தரமாக தடுப்பதற்கும், மற்றும் கம்பிகள் துருப்பிடிப்பதால் விழுந்துள்ள சிமெந்து படையை உத்தரவாதத்துடன் சீர செய்து கொள்வதற்கும் நாடுங்கள்.

**North and East Engineering**
No.55, Stanley Road, Jaffna.
(பீப்பில் லீசிங்குக்கு முன்பாக)
FINCO
(C/16815)(10.15.17)
021 222 2363 077 524 4177 077 756 8686



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
விளையாட்டு விஞ்ஞான அலகு
உடற்கல்வி டிப்ளோமா இரண்டாம் வருட மீள்பரீட்சை-2015

உடற்கல்வி டிப்ளோமா இரண்டாம் வருட மீள்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் விளையாட்டு விஞ்ஞான அலகில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொண்டு 30.09.2015 ஆம் திகதிக்கு முன்பாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை விளையாட்டு விஞ்ஞான அலகில் கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்
(சி.18808) (13.15.16)



YOUth CREACE

திருமறைக் கலாமன்றமும் கெயார் நிறுவனமும் இணைந்து நடத்தும்

## " கலைப்பொழுது "

இளையோர் உருவாக்க செயற்றிட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற கிளிநொச்சி, மட்டக்களப்பு மாவட்ட இளையோர் வழங்கும்

**நடனங்கள் / நாட்டுக் கூத்துக்கள் / நாடகம்**

காலம் : இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 5.00 மணி
இடம் : முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழகம்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

- திருமறைக் கலாமன்றம்

இணைப்பங்காளர்கள் :
பிரதேச செயலகம் : பூநகரி
முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழகம்

அனுசரணை
European Union
care
(C/18814)(10.15.17)



## கட்டடம் வாடகைக்கு/குத்தகைக்கு விலைமனுக் கோரல்

வடக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி அலகின் அலுவலக செயற்பாடுகளிற்காக பின்வரும் வசதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் கட்டடமும் காணியும் வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்க விரும்புபவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

நிபந்தனைகள்:

மண்டபம் 01 30' X 15' - 01 450 சதுர அடிக்கு மேல்
மண்டபம் 02 25' X 15' - 01 375 சதுர அடிக்கு மேல்
மண்டபம் 03 20' X 15' - 01 300 சதுர அடிக்கு மேல்

1. மேற்படி மண்டபங்கள் உட்பட அலுவலக பாவனைக்குமென மொத்தமாக 5000 சதுர அடிகள் கொண்ட கட்டடமும் வாகனத் தரிப்பிடத்திற்கு 1200 சதுர அடிகள் வரையான நிலப்பகுதியையும் கொண்டிருக்கவேண்டும்.
2. யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட, பேருந்துப் போக்குவரத்து மார்க்கங்களை அண்மித்த கட்டடங்கள் விரும்பப்படும்.
3. மின்சார வசதி (3 phase) நீர் வசதிகள் கொண்டிருக்க வேண்டும்.
4. குறைந்தது 2 வருடங்களிற்கு வாடகைக்கு வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
5. முற்பணம் வழங்கப்படமாட்டாது.

மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக கூறுவிலைகள் தயாரிக்கப்பட்டு உறையிலிடப்பட்டு அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில் "கட்டடம் வாடகைக்கு/ குத்தகைக்கு" என குறிப்பிட்டு கீழ் குறிப் பிடப்படுகின்ற முகவரிக்கு 2015.09.30 ஆம் திகதி பி.ப.2.00மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அ.சிவபாலசுந்தரன்
பிரதிப் பிரதம செயலாளர் -ஆளணி மற்றும் பயிற்சி
121A, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 221 6035 (சி.18893) (13.15.16)



## வீடு வாடகைக்குண்டு

கந்தர்மடத்தில் ,நல்ல வதிவிடச் சூழலில் 3 பெரிய சயன அறைகள்,1 அலுவலக அறை. 2களஞ்சிய அறைகள் ,இணைந்த குளியல் அறை. சமையல் அறை 1, மிகப்பெரிய வரவேற்பறைக்கூடமும்,முகப்பு வரவேற்பறைக்கூடமும்(Hall), பொதுப்பாவிப்பிற்கும்,வாகனங்கள் நிறுத்துவதற்கும் உரிய மிகப் பெரிய Portico வும் மற்றும் நல்ல வசதிகளை உள்ளடக்கிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு . திருவணங்கள் விரும்பத்தக்கது. தரகர்கள் தேவையில்லை .

தொடர்பு நேரம்:- மு.ப 7.00 - 10.30வரை
பி.ப 2.00 -07.00 வரை
தொலைபேசி:
021 222 0430 ,077 3265 237,072 6921 877



## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்




இன்று (13.09.2015)
ஞாயிற்றுக்கிழமை மணிவிழா காணும்
திருமதி
**சத்தியபாமா சிவகுமாரன்**
(பிரதி அதிபர்
யா/ முத்துத்தம்பி மகாவித்தியாலயம்)

அவர்களை உள்ளன்போடு மணிவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

DEPUTY PRINCIPAL

வாழ்த்துவோர்:
பழைய மாணவர் சங்கம்
யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்



## இயந்திரமோ ஒன்று! வேலையோ பல !!

**3D ஹீட் பிறஸ் மெசின்**

விசேட விலைக்கழிவுடன்

**கிடைக்கும் இலாபமோ மிக அதிகம் !!!**

Studio ,Colour Lab, Book Shop,Gift Centers, Communication..
போன்ற வியாபார ஸ்தலங்களிற்கு உகந்தது




பிரிண்ட் செய்யக்கூடிய சகல பொருட்களும் எம்மிடம் உண்டு
மக், பிளேற், ரிங் போத்தல், ஸ்ரோன்ஸ், ரீ சேர்ட், டைல் போன்றவற்றில் பிறின்ற் செய்யக்கூடியது

077 201 5330
077 385 0089

WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

max adz



## INDIAN OVERSEAS BANK - COLOMBO

### VACANCIES IN ASSISTANT MANAGER / BANKING ASSISTANT CADRE

Indian Overseas Bank is a reputed Public Sector Undertaking of Government of India with International presence in 6 countries and established in Sri Lanka since 1945.Join us to have an excellent career in Banking.

**ASSISTANT MANAGER – 2 VACANCIES**
Eligibility:
- Age below 30 years as on 30.09.2015
- Degree or equivalent from a recognized University.
- Professional written and verbal skills in English.
- Minimum 4 years experience in a Licensed Commercial Bank is preferred.
- Good understanding of credit management, trade finance, treasury operations and general business principles and practice necessary.
- Additional qualifications preferred: (a) CIMA; (b) Diploma in Treasury and Foreign Exchange Operations / Risk Management; (c) Other Professional qualification in Banking & Finance.
- Skills in Microsoft Word and Excel essentials.
- Willingness to learn and work as a team.

**TRAINEE BANKING ASSISTANTS – 2 VACANCIES**
Eligibility:
- Age below 22 years as on 30.09.2015
- Completion of GCE 'A' Levels
- Excellent communication skills in English
- Computer literacy
- Willingness to learn and work as a team

Please forward your application by registered postto "The Chief Manager, Indian Overseas Bank, No. 139, Main Street, Colombo 11",with the below information, affixing a recent passport size photo, so as to reach us on or before 28.09.2015.

| Application for the post of Assistant Manager / Trainee Banking Assistant (strike off whichever is not applicable) | | |
|---|---|---|
| Name | | Gender: |
| Age / Date of Birth | | |
| Address | | |
| Qualification | | |
| Experience: | | |
| Organisation | | |
| No. of years | | |
| Post held | | |
| Present salary drawn (Gross) | | |
| Date : | | Signature: |
| Note : Enclose a recent passport size photo. | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### காணி,வீடு விற்பனைக்கு

கண்டி வீதி (A9) நாவற்குழியில்
வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 606 2944

### ஸ்கூட்டர் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 152 -XXXX
தொடர் இலக்கமுடைய
Bajaj Classic Modelஸ்கூட்டர்
விற்பனைக்கு உண்டு.
தொ.பே. 077 658 9642 (62946) (13.15.

### விற்பனைக்கு

Panasonic
DVD Stereo
Super Woofer 6600w
Samsung Galaxy Smart Pone
தொடர்பு: 077 271 9000
077 514 1123

### மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு

யப்பான் மேக்கிலுள்ள லான்சர்
கொண்டா 90 HX - XXXX,
MD 90.VO -XXXX,
500 - XXXX லான்சர்
மொடல் சாளி என்பன விற்பனைக்குள்ளன.
(62949) (13.15.
தொ.பே. 077 474 5921

### வாகனம் விற்பனைக்கு

புதிய FAW பொடி
உள்ளதும் 3000 Km
ஓடியதும் பின்புறம் 4
சில்லுக் கொண்டதுமான
(Heavy vehicle) வாகனம்
விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு
077 323 7515
(63584) (12.15)

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி விவசாயப் பயிற்சிப் பாடசாலை அமைந்துள்ள பகுதியில், பலாலி வீதிக்கு மிக அருகில் நல்ல சூழலில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 217 4038
(64618) (13.15.18)

### காணி விற்பனைக்கு

நல்லூர், புதிய செம்மணி வீதியில் காணி
விற்பனைக்குண்டு. (ஒரு பரப்பு)
தொடர்பு: 078 5609812
021 223 0378

### வாகன விற்பனைக்கு

PS / HG இலக்கமுடைய
வாகனங்கள் விற்பனைக்குள்ளன.
தொடர்பு : 077 995 5450

### கார் விற்பனைக்கு உண்டு

5 ஸ்ரீ மைனர் கார்
விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 491 8851

### வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள D4E கற்றப்பில்லர்
டோசர்-01 ,சிறிய றோலர் (3 தொன்)-01,
பெரிய கொங்கிறீட் குழைக்கும் இயந்திரம்
(உழவு இயந்திரத்தில் இழுத்துச்
செல்லக்கூடியது) விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு
077 317 0478 ,077 015 9148

### Jeep விற்பனைக்கு

KI- xxxx தொடரிலக்கமுடைய 2007
Model ,Diesel,85000km ஓடிய நல்ல
நிலையிலுள்ளMicro Jeep
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 137 2649
021 205 4538

### விற்பனைக்கு

(F) பான்சிக் கடைக்குத் தேவையான கண்ணாடி
அலுமினிய அலுமாரிகள் மலிவு விலையில்
விற்பனைக்குண்டு.
1'x4'-2 அலுமாரி(முன் பாட்டிசம்)
1½'x4'-2 அலுமாரி(பாட்டு)
1½'x3'-1 அலுமாரி(பாட்டு)
1½'x12'-1 அலுமாரி(8 தட்டு)
தொடர்புகளுக்கு: 077 434 6532

### விற்பனைக்கு

யூரோ நிபோன் நிறுவனத்தில்
இறக்குமதி செய்யப்பட்ட
2014புத்தம் புதிய 3cx Power
Shift JCB வாகனம்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 708 2718
(சி.19403) (13.15.16)

## ஏனையவை

### Ticketing

இலங்கையின் பிரசித்தி பெற்ற
நிறுவனங்களுக்கு டிக்கெட்டிங் வேலை
செய்வதற்கு பயிற்சியுள்ள பயிற்சியற்ற
ஆண்,பெண் தேவை வயது 18-45 தகைமை
(O/L, A/L) சம்பளம் 32.000/=OT 42000/=
தேவைப்படும் பிரதேசங்கள் கொழும்பு
யாழ்ப்பாணம், மன்னார் , கிளிநொச்சி
இன்னும் பல பிரதேசங்களுக்கு
வெற்றிடங்கள் உண்டு . மொழி
அவசியமில்லை வரும் நாளில்
சேர்க்கப்படுவீர்கள் . தொடர்பு கொண்டு
நேர்முக பரீட்சைக்கு சமுகம் தரவும்.
077 1020 619
48A 1/1 Hill Street Magara kama
Road ,Dehiwala

### இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும்
வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப்பெற்ற
பரம்பரை ஜோதிடர்
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 9 மணி முதல் மாலை 5.00 மணிவரை.
இல.424/11,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
(சிவன்கோவிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் எதிரில்)
தொ.பே. 072 681 6681, 072 681 6691
(62389) (45.3.7)

### யாழ் நகரில்

LONDON A/L, O/L CLASSES.
MATHEMATICS, FURTHER, MATHEMATICS
EDEXCEL/ CAMBRIDGE
CALL: 077 361 4359

### பிரத்தியேக வகுப்புக்கள்

வீட்டிற்கு வந்து Spoken English மற்றும்
Computer வகுப்புக்கள் கற்றுத் தரப்படும்.
(கணினி ஆசிரியரால் எடுத்து வரப்படும்.
தொடர்பு : 072 186 7203

### இந்திய யாத்திரை

வட,தென் இந்தியா
October 2015
- February 2016
அனைத்து முக்கிய ஸ்தலங்களும்
தொடர்புகளுக்கு: சொர்ணம்
077 344 8863

### A/L தொழில் நுட்ப வகுப்புக்கள்

2017 ஆம் ஆண்டிற்கான தொழில் நுட்பப்
பிரிவுக்கான வகுப்புகள் ஆரம்பம்
(கிளிநொச்சி, முல்லைத்தீவு)
தொடர்பு: இல. 468,திருநகர் தெற்கு, கிளிநொச்சி,
தொ.பே. 077 616 5290, 021 568 9165
(62505) (13.15.

உதயன் விளம்பரத்
தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## தேவை




### வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வீடு வாடகைக்கு உடன் தேவை.
0777 895634 (62903)(10.17)

### வீட்டுப் பணிப்பெண் தேவை

வெள்ளவத்தையில் வசிக்கும்
குடும்பத்தினருக்கு பணியாள் தேவை.
தொடர்பு: 072 727 6569

### தேவை

கையடக்க தொலைபேசி திருத்துநர் தேவை. Hardware & Software நன்கு தெரிந்தவர்கள் தேவை. மாத வரு மானம் ரூபாய் 50,000 இற்கு மேல் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: யாழ். போன் சொப்
இல.10,நவீனசந்தை யாழ்ப்பாணம்.
T.P.077 361 1282

### பணிப்பெண் தேவை

யாழ் நகரில் வயதான பெண்
ஒருவரைப் பராமரிப்பதற்கு
பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 048 6284

### பணியாள்கள் தேவை

- கணக்காளர்
- சிட்டை எழுதுநர்
- விற்பனையாளர்
- உதவியாளர் (இருபாலாரும்)

அனுபவம் உள்ளவர்களுக்கு
முன்னுரிமை
தொடர்பு: யாழ் போன் சொப்
இல.10,நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(64616) (13.15.16)
தொ.பே. 077 361 1282

## வாடகைக்கு

### வீடு வாடகைக்கு

யாழ் பெருமாள் கோயிலுக்கு முன்பாக 21/1
கலைப்புலவர் வீதியில் உள்ள வாகனத்தரிப்பிட
வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 5666, 077 656 9764

### கடை வாடகைக்கு உண்டு

மனோகரா சந்தி அருகில் விக்னா ஹோட்டல் முன்பாக கடை வாடகைக்குண்டு. மெசினில் உரப்பை தைக்க ஆள் தேவை (இருபாலாரும், அனுபவமுள்ளவர்கள்.)
தொடர்பு : 0212225986,
0772487852

### வீடு வாடகைக்கு (பரந்தன்)

A9 வீதியில் பரந்தன் தபால்
நிலையத்திற்கு அண்மையாக
உள்ள வீடு வாடகைக்கு
விடப்படும்.
தொடர்பு : 077 429 3147

### வாடகைக்கு

ஒரு அறை,ஹோல் குசினியுடன் கூடிய
மேல் வீடு வாடகைக்குண்டு.
தொ.பே. 077 600 7346,077 715 0931 (62049) (13.15.

### வாடகைக்கு

சகல விதமான தேவைகளுக்கான பார ஊர்திகள் வாடகைக்கு விடப்படும். நீண்ட காலத்திற்கும், குறுகியகாலத்திற்குமானது.
தொடர்பு : 077 995 5450
BIZ - I போக்குவரத்து சேவை

### வீடு வாடகைக்குண்டு

கே.கே.எஸ் வீதி, தட்டாதெரு யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள வீடு (பெரிய அறை - 2, சிறிய அறை - 2, விறாந்தை - 3, சமையல் அறை - 1, மலசல கூடம் - 2, குளியலறை - 2) வாடகைக்குண்டு. வீட்டுப் பாவனை/ மாணவர்கள் தங்குவதற்கு/களஞ்சியத்திற்கு/ கடையாகவும் பாவிக்கலாம்.
தொடர்பு : 021 222 0983

## வேலைவாய்ப்பு

### Vacancies @ Australian Institute Jaffna Branch

ஆஸ்திரேலியாவைத் தலைமையகமாகக் கொண்ட எமது நிறுவனத்தில் யாழ். பிராந்திய அலுவலகத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங் கள் கோரப்படுகின்றன.

1. Manager
2. Marketing Executives (Full time, part time)
3. Receptionist
4. Visiting Lecturers (Business, Travel & Tourism)

தொடர்புகளுக்கு :
Australian Technical & Management College (ATMC)
Jaffna Campus.
No.403, Clock Tower Road, Jaffna.
021 221 9456    077 933 9353

### வேலைவாய்ப்பு

சொன்ன சம்பளம் கிடைத்ததா? மாதக்கடைசியில் (8000- 12000) ஆகிய சம்பளமா கிடைத்தது .உணவு,தங்குமிடம்,உங்கள் சம்பளத்தில் கழித்துக் கொண்டார்களா இதோ உண்மையான சம்பளம். நாட்சம்பளம்1600/= உங்கள் விருப்படி ஒவ்வொரு நாளும் சம்பளம் உணவு,தங்குமிடம்,உடை ஆகிய முற்றிலும் இலவசம்.
உங்கள் சம்பளத்தை நீங்களே கணக்கு போட்டுப் பார்த்து கொள்ளவும்
( நாட்சம்பளம்- 1500 x250Ay= 37500).
(உண்மையான சம்பளம்) பிரதான தொழிற்சாலைகளின் லேபல்,உற்பத்தி,பொதிஇடல் ஆகிய பிரிவுகளுக்கு ஆண்,பெண் வயது (18-50) வரும் நாளில் வேலை
தொடர்பு:
077 597 7259, 077 891 0598

### வேலைவாய்ப்பு

FR Advertising கம்பனியில் வேலைக்கான வெற்றிடங்கள் உள்ளன.O/L, A/L தகைமை உடையவர்கள் இளைஞர்,யுவதிகள் நேர் முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

[illegible] - 077 587 9945
யாழ்ப்பாணம் - 077 208 3140
மூதூர் - 077 526 7295
கொழும்பு - 077 354 8006
(63503) (13.15.

### வேலை வாய்ப்பு

நாள்சம்பளம் 1500/= மாதாந்தம் எவ்வளவு? உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். சொக்லெட், பால்மா, ஐஸ்கிறீம் போன்ற தொழிற்சாலைகளின் அனைத்து பிரிவுகளுக்கும் வந்த நாளிலே வேலை. ஆண்/பெண், (17-55) OT உடன் 40000/= அதிகமான சம்பளம்
(நாள்சம்பளம், கிழமைச்சம்பளம், மாதச் சம்பளம் உடனடியாக தொடர்பு கொள்ளவும்)
தொடர்பு :
077 401 7543, 075 544 6898

ஏமாற்றத்தை சந்தித்தீர்களா உண்மை சம்பளம் இதோ? நாள் சம்பளம் 1500/= (8 Hrs) இலவசம் உணவு, தங்குமிடம், தொழில் ஆடை (Uniform) மாத சம்பளம், நாள் சம்பளம், கிழமைச்சம்பளம் ஆகியன பெற்றுக் கொள்ளலாம். பால்மா, ஜாம்,டிபிடிபி, போன்ற பிரிவுகளுக்கு வந்த நாளிலே வேலை உண்டு. ஆண்/பெண் (17-50) வயது.
மாதசம்பளம் - 40000/=
தொடர்பு :
075 718 4659, 072 926 8692,
076 533 2795

O/L அல்லது A/L படித்த இளைஞர் யுவதிகளுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு. (பொதியிடல், லேபல், ஸ்டோர்ஸ் போன்ற பிரிவுகளுக்கு ஆண்/பெண் வயது (17 - 50) பெண்களுக்கான தங்குமிடம் பாதுகாப்பானதாக அமைத்துத் தரப்படும். உணவு தங்குமிடம் முற்றிலும் இலவசம். அதிகூடிய சம்பளம், நாள் சம்பளம் 1500/=. நீங்கள் விரும்பிய வேலையை நீங்களே தாம் பிரித்துக் கொள்ளலாம். உடனடி யாகத் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு :
076 701 5219, 076 748 4289,
075 420 4351

### வேலைவாய்ப்பு

கொழும்பிலுள்ள பாதுகாப்புச் சேவை கம்பனிக்கு OIC, JSO, SSO /LSO உடன் தேவை. தங்குமிடம் இலவசம். உணவு சகாய விலையில் சம்பளம் 25 000-30 000 ரூபாவரை. யாழ்ப்பாணத்தில் VELANAI யில் வேலை செய்வதற்கு JSO தேவை.
104 1/1, WELIKADAVIATTA ROAD,
RAJAGIRIYA (64017) (13.15.18)
011 287 1280, 071 244 6926

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### பூசாரி வேலு



கண்டியைப் பிறப்பிடமாகவும் ஓட்டு மடத்தை வசிப்பிடமாவும் கொண்ட பூசாரி வேலு 11.09.2015 வெள்ளிக் கிழமை காலமானார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2015) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம் பயண்மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

254/6 சேபஸ்ரியார் லேன்
ஒட்டுமடம்

தகவல்: குடும்பத்தினர்

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
17
08
1937



விண்ணில்
10
08
2015

### திருமதி. பரமேஸ்வரி நந்தகோபால் (கிச்சி)

அன்பைப் பொழிந்து எமை வளர்த்தாய்
அறிவை புகட்டி அவனியில் சிறப்புற்று
அனைவரும் போற்ற வாழவைத்தாய்
இன்று எமை ஆறத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட அன்னையே !
எம் இதயங்களில் வாழும் தெய்வமே !

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

10.08.2015 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி. பரமேஸ்வரி நந்தகோபால் அவர்களின் மறைவையொட்டி நேரிலும், தொலைபேசி, மின்னஞ்சல் ஊடாகவும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் சகல உதவிகளும் புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

31-5/1 வண்டவற் பிளேஸ், தெஹிவளை.
தொ.பேசி : 0112734816

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி வாலாம்பிகை நாகலிங்கம்

பிறப்பு
15
08
1943



இறப்பு
12
09
2015

சுண்டிக்கசூழி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், களுபோவில தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட வாலாம்பிகை நாகலிங்கம் 12.09.2015 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் நாகேந்திரன், செல்வ அனுஷா தேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சோமசுந்தரம், காலஞ்சென்ற கனகசபாபதி, நாகேஸ்வரி, சிவராமலிங்கம், சரஸ்வதி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராஜேஸ்வரி, ராஜராஜேஸ்வரி, கந்தையா, யோகேஸ்வரி, பாலசிங்கம், தேவமகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ராஜ்மோகன், சிவநாதன், Dr.பார்த்திபன், ஆகியோரின் அன்பு மாமியும் Dr.பிரபாகரன், தயாளினி, Dr.மதிவதனி, Dr.ராதிகா, ஜெயமாறன், ஜெனனி, மயூரதன், சசிதரன் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஞானாம்பிகை, இந்துமதி, கிருஷ்ணாம்பிகை, மீனாம்பிகை, வரதராஜன், தர்ஷிகா, ஜெயந்திகா, மிருது பாஷினி, ஜெயப்பிரகாஷ், ஷயனுஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் சௌமியன், அபிரதன், அக்ஷயன், ஷயந்தன், ஷறிஷா, ஹர்ஷவர்தன், அஷ்விதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணி முதல் பி.ப 5.00 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 14.09.2015 திங்கட்கிழமை பி.ப 2.30 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
நாகலிங்கம் (கணவர்)
நாகேந்திரன் (மகன்)

0778318160


## வேலை வாய்ப்பு | VACANCY

வவுனியா நகரில் இயங்கிவரும் விளம்பர நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடத்திற்கு தகுதியானவர்களுக்கான வேலை வாய்ப்பு

"A good working knowledge of Adobe photoshop and illustrator is required. As well as a wealth of good ideas. Must have experience in Album design, capable of designing Tamil wedding albums. Be willing to work independently with own creative ideas."

ALBUM DESIGNER

"புகைப்படத் துறையில் முன்அனுபவம் அவசியம்"

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

STREETFOX

"தகுதியானவர்கள் தொடர்புகொள்ளவும்"
# 077 3736 300 # 077 8633 941


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
13 . 11 . 1932

மறைவு
14 . 08 . 2015

### திருமதி புவனேஸ்வரி சிவகாருணியம்

திதி: அமாவாசை

அன்போடு எமை அணைத்து
அகிலந்தனில் எமைக் காத்து - நல்
அறிவோடு வளர்த்துவிட்ட அம்மாவே!
ஆயிரம் உறவுகள் போல் ஆலமரமாய் நீர் இருந்தீர் - இன்று
ஆதரவு யாருமற்று அபலை போல் நின்று
அழுகின்றோம் அன்னையே!
அடுத்த பிறவியினை எம் உறவில் நீரெடுத்து
அரவணைத்து ஆதரிக்க வாரீரோ!

எமது அன்னையின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

126, அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (இந்து மகளிர் கல்லூரி முன்னால்)

குடும்பத்தினர்.

(64610)(10.15.17)


## காணி விற்பனைக்கு

மிருசுவில் A9 றோட்டை முன்பக்கமாகவும் பாம் றோட்டை பக்க றோட்டாகவும் கொண்ட 20 பரப்பு காணி விற்பனைக்குண்டு விரும்பினால் பகுதிகளாகவும் பிரித்து கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 607 9340

## வான் விற்பனைக்கு

Tata, Lh, 709 நீளம் 14½ கொண்ட கன்டர் விற்பனைக்கு

தொடர்பு: 077 6095 749

(64836)(10.15.17)


## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்



இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை
மணிவிழா காணும்

### திருமதி சத்தியபாமா சிவகுமாரன்

(பிரதி அதிபர் யா/ முத்துத்தம்பி மகாவித்தியாலயம்)

அவர்களை உளம்மகிழ்ந்து மணிவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்.

DEPUTY PRINCIPAL

ஆசிரிய நண்பர்கள் குழாம்

அதிபர் திருமதி கௌரிபரந்தாமன், உப அதிபர்: திருமதி ரே.சிவசோதி,
ஆசிரியர்கள்:
றோ.சிவபுத்திரன், திருமதி பிரசாந்தி கிருபராஜ், திருமதி க்.ஆருரன்,
திருமதி வி.அம்பிகைபாகன், லி.ஜெயராஜ், சி.இந்திரராஜா,
திருமதி ரஜனி மதிருபன், த. சகிலன், செல்வி வெ. விஜயபாரதி,
க. துஸ்ஜெயந்தன், திருமதி ரஜனி பிரதீபன்.

Best Wishes

(64633)(10.15.12)

## மைதானம் இடமாற்றத்துக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். கண்டனம்

மன்னார் நகரசபைக்கு உட்பட்ட எமில்நகரில் நவீன வசதிகளைக் கொண்ட மைதானம் இடமாற்றப் பட்டமைக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். மாவட்டக் குழுக் கூட்டத்தில் கண் டனம் தெரிவிக்கப்பட்டள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி யான ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் மாவட்ட நிர்வாகக் குழுக் கூட்டம் மத்திய குழு உறுப்பினரும் மாவட்டப் பொறுப்பாளர் எஸ். ஆர். குமரேஸ் தலைமையில் கட்சிக் காரியாலயத்தில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. இதன்போதே குறித்த மைதானம் இடமாற்றப்பட்டமைக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

பொதுத் தேர்தலுக்குப்பின் இடம் பெறும் முதலாவது மாவட்டக் குழுக் கூட்டம் என்பதால் பல்வேறு விட யங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

இந்தத் தேர்தலில் கட்சியின் நகர் வுகள் பற்றியும், வாக்கு வங்கியின் ஏற்ற இறக்கங்கள் பற்றியும், கட்சித் தலைவருக்கு தேசியப்பட்டியல் வழங் காமை பற்றியும், கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு இதுவரை கூட்டப்படாது இருப்பது தொடர் பாகவும், மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி விடயங்களில் தனிப்பட்ட அரசியல் வாதிகளின் தன்னிச்சையான போக்குகள் பற்றி யும் விரிவாக ஆராயப்பட்டுக் கண்டனங்களும் தெரிவிக்கப்பட்டன.

குறிப்பாக மாவட்டத்தின் விசேட நவீன வசதி களைக்கொண்ட மைதானம் ஒன்றை அமைப்ப தற்கு நகரசபைக்கு உட்பட்ட எமில்நகரில் இடமும் ஒதுக்கப்பட்டு நகரசபையாலும் விளையாட் டுத்துறை அமைச்சாலும் செயற்பாடுகள் முன் னெடுக்கப்பட்டு வந்தன. இதற்கான ஆதாரங்கள் நகரசபையில் உள்ளன.

இப்போது இந்த மைதானமானது மிகவும் கபடத்தனமான முறை யில் மாவட்டத்தின் மக்கள் பிரதி நிதிகளுக்கோ, அதிகாரிகளுக்கோ, விளையாட்டுத்துறையின ருக்கோ தெரியாமல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் செயலை மிகவும் இரகசிய மாக நகரசபை கலைக்கப்பட்ட தன் பின்னர் அமைச்சர் ரிசாத் பதியுதீனே செய்துள்ளார் என் பதை அறிந்து அனைவரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அது வும் தனது சொந்த ஊரான தாரா புரத்துக்கு மாற்றப்பட்டதை இட்டு அவரது சுயநலம்வெளிப்பட்டுள்ளது. எனவே இந்த மைதானத்தை மீண் டும் நகரசபைக்குட்பட்ட எமில் நகரில் அமைப்பதற்கு மக்கள் சக்தியைத் திரட்டி எம்மாலான சகல முயற்சிகளையும் மேற் கொள்ளுவோம் என மாவட்ட நிர்வாகக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக எஸ்.ஆர். குமரேஸ்தெரிவித்தார். (த-56)


## நாகபூஷணி திருமண சேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மற்றும் வங்கி உத்தியோகத்தர், அரச உத்தியோகத்தர் தனியார் துறையைச் சேர்ந்தவர். உள்நாட்டு/ வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் நிறைய உள்ளன. நீங்கள் விரும்பும் மண மக்களின் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு

T.P. NO: 077 138 7596, 021 222 9306
T.P. NO: 071 894 5692, 021 320 9793
Email: nakapoosanywedding@gmail.com
383/14B, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் கோவில் வடக்குப்பக்கம்)

(எமக்கு வேறு கிளைகள் எதுவுமில்லை)

வாரத்தின் ஏழு நாள்களும் திறந்திருக்கும்.

## CCTV அவதானிப்புத் தொகுதி

உங்கள் வீட்டையும்
தொழில் ஸ்தாபனத்தையும்
பாதுகாத்துக் கொள்ளுங்கள்

CCTV SURVEILLANCE WITH AVTECH DOME & BULLET CAMERAS



இரண்டு வருட சேவை உத்தரவாதம்

- அனுபவம் மிக்க, விரைவான தொழில் நுட்ப சேவை, நியாய விலையில்
- தாய்வானிலிருந்து (Taiwan) இறக்குமதி செய்யப்பட்ட AVTECH உபகரணங்கள்
- Package starting from Rs.40,000/-



LIVE VIEW ON YOUR MOBILE FROM ANYWHERE

gadgetz.lk
யாழ்ப்பாணம்
☎ - 0714590844

## பசுமாட்டைக் காணவில்லை

முன்னங்கால் நொண்டி,
மாவெள்ளை நிற கண்டுத்தாச்சி
பசுமாட்டைக் காணவில்லை
தொடர்பு: கலட்டி சிறி
021 222 9522

(C/18817)(10.15.17)

## விற்பனைக்கு / வாடகைக்கு

திருநெல்வேலியில் உணவகமொன்றில் 1 வருடம் பாவித்த D-Fridge, Bottle Cooler மற்றும் தளபாட உபகரணங்கள் விற்பனைக்கும், உணவகமொன்று கமிசனுக்கும் வழங்கப்படும்.

தொடர்பு: 078 94 727 57

(64635)(10.15.17)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி,
இல.625/5 இல் அமைந்துள்ள பழைய
வீட்டுடனான ஒருபரப்பு 16.23 குளி
நிலம் விற்பனைக்கு.

தொடர்பு :
ரவி : 077 727 0310
வசந்தன் : 077 281 2796

## வீடு வாடகைக்கு

திருநெல் வேலியில்
பிரதான வீதிக்கு அருகிலும்
சந்தைக்கு அருகிலும் உள்ள
4 அறைகள் குசினி சகல
வசதிகளுடனும் வீடு
வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
79/2 பணிக்கர் ஒழுங்கை
திருநெல்வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 234

# சுகமான தாய்மையும் நலமான குழந்தையும்

இன்றைய உலகமானது நவீனத்திலும் நாகரிகத்திலும் உச்சத்தை அடைந்தாலும், தாய்மையின் நிலைக்கு விலைகொடுக்க எவராலும் முடியாது. தாய்மை நிலையை அடைதல் என்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் புதுமையான அனுபவமாக அமைவதோடு, சமூகத்தினதும் உறவுகளினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளவும் வழிசமைக்கின்றது. கருவுற்றிருக்கும் தாயானவளுக்கு தனது குழந்தையைப் பற்றிய கனவுகளும் எதிர்பார்ப்புக்களும் நிச்சயமாக இருக்கும். ஆகவே ஆரோக்கியமான குழந்தையைப் பாதுகாப்பான முறையில் பெற்றெடுக்க, தாயானவள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் ஆரோக்கியமான நிலையில் இருக்க வேண்டியது அவசியமானதாகும். மனிதனுடைய வாழ்க்கை வட்டத்தை நோக்கின் குழந்தையானது தாயின் கருப்பையில் உள்ள போதே மிகவேகமான வளர்ச்சி நடைபெறுகின்ற அதேவேளை, கருவுற்றிருக்கும் தாயின் உடல் கட்டமைப்பிலும் பல வளர்ச்சி மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆரோக்கியமான பெண்ணின் கர்ப்பகாலத்தின்போது அண்ணளவாக 12.5கிலோகிராம் நிறை அதிகரிப்பு ஏற்படுகின்றது. இந்த நிறை அதிகரிப்பானது சிசுவின் நிறை, மார்பகங்களின் விரிவு, கருப்பையின் வளர்ச்சி, மேலதிக குருதி உற்பத்தி போன்ற காரணிகளால் ஏற்படுகின்றது.

கருப்பையினுள் வளரும் சிசுவுக்கு தாயிலிருந்தே போசணைப் பதார்த்தங்கள் கடத்தப்படுகின்றன. அதேவேளை, குழந்தை பிறந்த பின்னர் சக்தியும் போசணையும் தாய்ப்பாலினூடாக வழங்கப்படுகின்றது. ஆகவே கருவுற்றிருக்கும் சந்தர்ப்பத்திலும், தாய்ப்பாலூட்டும் நிலையிலும் தாயானவள் மேலதிகமான சக்தி மட்டத்தையும் போசணை மட்டத்தையும் கொண்டிருப்பது மிக முக்கியமானதாகும். இந்த மேலதிக சக்தியையும் போசணையையும் தாயானவள் தனது அன்றாட உணவு உட்கொள்ளல் மூலமே பெற்றுக்கொள்ள முடியும். உணவானது தாயின் உடல் நிலைக்கு பொருத்தமானதாகவும், விருப்பமானதாகவும், சக்தித் தேவையையும், போசணை தேவையையும் அளவிலும், தரத்திலும் பூர்த்தி செய்வதாகவும் அமைய வேண்டும்.

கர்ப்பிணித் தாய்மார்களின் உணவுப் பழக்கத்தைப் பொறுத்தமட்டில் பல்வேறு வகையான சமய நம்பிக்கைகளும், கலாசாரப் பிணைவுகளும், குடும்பப் பின்னணியும் பெருமளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனை இன்னுமொரு விதமாக நோக்கின், தாயின் கர்ப்பங்களின் எண்ணிக்கை, குடும்ப வருமானம், வசிக்கின்ற காலநிலை வலயம் மற்றும் பரம்பரை இயல்பு போன்றனவும் தாயின் உணவு உட்கொள்ளலில் குறிப்பிட்ட அளவில் பாதிப்பைச் செலுத்துகின்றன. எவ்வாறாயினும் தாயின் நடைமுறை உணவுப் பழக்கச் செயற்பாடுகளே, வளரும் சிசுவின் உடல் வளர்ச்சியையும் மனவிருத்தியையும் கூடியளவில் தீர்மானிக்கின்றன. ஆகவேதான் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும் உணவுப் பழக்கவழக்கம் தொடர்பான போதுமான விளக்கமும் போசணை பற்றிய போதுமான அறிவும் இருத்தல் அவசியமானதாகும்.

கர்ப்ப காலத்தில் சாதாரணமாக உட்கொள்ளும் அளவிலும் பார்க்கக் கூடிய அளவில் உணவு உட்கொள்ளுதல் முக்கியமானதாகும். அதே வேளை உணவு வேளைகளின் எண்ணிக்கையை அதிகரித்தலும், உட்கொள்ளும் உணவின் அளவை அதிகரிப்பதற்குப் பொருத்தமானதாக அமையும். இந்தக் காலப்பகுதியில் தாயின் உடலில் நடைபெறும் வழமையான உடற்தொழிற்பாடுகள் வழமைபோல் நடைபெறுவதோடு சிசுவின் உடல் அங்கங்கள் ஒவ்வொன்றும் படிப்படியாக உருவாகின்றன. ஆகவே தாயானவள் மேலதிக உணவை உட்கொள்ளு வதன் மூலம்தான் தாய், சேய் இருவருக்குமான சக்தித் தேவையையும் போசணைத் தேவையையும் ஈடுசெய்ய முடியும்.

கர்ப்பிணித் தாய்மார்கள் விசேடமான உணவுகளையோ அல்லது விலையுயர்ந்த ஆடம்பர உணவுகளையோ உட்கொள்ள வேண்டும் என்கின்ற தேவையில்லை. ஆனால் உங்கள் சூழலில் கிடைக்கக்கூடிய உணவுகளைப் பொருத்தமான முறையில் தெரிவு செய்து தகுந்த முறையில் சமையல் செயற்பாடுகளைக் கையாண்டு போதுமான அளவில் உட்கொள்ளுதல் சிறந்தது. உங்களுடைய எல்லா உணவு வேளைகளிலும் எல்லாவிதமான போசணைக் கூறுகளும் அடங்கியுள்ளதா எனப் பரிசோதித்துக் கொள்ளுங்கள். ஒரு முழு உணவானது மாச்சத்து (காபோவைதரேற்று), புரதம், இலிப்பிட்டு(கொழுப்பு), விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். வாரத்தின் எல்லா நாள்களுமே ஒரேமாதிரியான உணவுகளை உட்கொள்ளாமல், ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வகையான உணவுகளைத் தெரிவு செய்து உண்ணுங்கள். உங்களுடைய உணவுத்தட்டில் பல வர்ணங்களை அவதானிக்கக்கூடிய உணவுகள் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். பல நிறமுடைய உணவுகளானது எல்லாவிதமான போசணைக் கூறுகளையும் உள்ளடக்கியதாக அமைகிறது.

ஒவ்வொரு உணவு வேளையின்போதும் இரண்டுக்கும் மேற்பட்ட மரக்கறி வகைகளைச் சேர்த்துக்கொள்ள மறக்காதீர்கள். ஒவ்வொருநாளும் குறைந்தது மூன்று தடவையாவது பழங்களை ருசித்து உண்ணுங்கள். ஏனெனில் மரக்கறிகளிலும் பழங்களிலும் கர்ப்பகாலத்துக்குத் தேவையான விற்றமின்களும் கனியுப்புக்களும் அதிகளவில் காணப்படுகின்றன. கர்ப்பகாலத்தின்போது இரும்பு, விற்றமின் சி, போலிக் அமிலம், கல்சியம், விற்றமின் டீ, அயடீன் போன்ற போசணைக் கூறுகளின் தேவை விசேடமாக அதிகரிக்கின்றது.

உடலில் அதிகளவான இரும்புக்கூறானது குருதியில் ஒட்சிசனைக் காவுகின்ற ஈமோக்குளோபின் எனப்படும் மூலப்பொருளில் காணப்படுகின்றது. உடலில் இரும்புச்சத்து குறைவடைவதால் ஈமோக்குளோபின் அளவும் குறைவடைகின்றது. அதன் தொடர்ச்சியாக ஒட்சிசனின் அளவு குருதியில் குறைவடைந்து குருதிச்சோகை நிலைமை ஏற்படுகின்றது. கருவுற்றிருக்கும் தாய்க்கு குருதிச்சோகை ஏற்படுமானால் சிசு குறை மாதத்திலோ, இறந்தோ அல்லது எடை குறைவாகவோ பிறக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. தாயின் குருதிச்சோகை நிலையை சோர்வு, பசியின்மை, மயக்கம் போன்ற அறிகுறிகள் மூலம் இனங்கண்டு கொள்ள முடியும். இரும்புச்சத்தானது விலங்கு உணவுகளான இறைச்சி, ஈரல், மீன், முட்டை, நெத்தலி, கருவாடு போன்றவற்றிலும் மற்றும் தாவர உணவுகளான தானியங்கள் (அரிசி, குரக்கன்), பருப்பு வகைகள் (கடலை, கௌபி, பயறு, பருப்பு), அதிக பச்சை நிறமுடைய கீரை வகைகள் (வல்லாரை, பொன்னாங்காணி, பசளிக்கீரை), இலைக்கறி வகைகள் (முருங்கை, தவசி முருங்கை) போன்றவற்றிலும் அதிகளவில் காணப்படுகின்றது. விற்றமின் சி, உடலில் இரும்புக்கூறு அகத்துறிஞ்சப்படும் அளவினை அதிகரிக்கின்றது. விற்றமின் C அதிகம் நிறைந்த உணவுகளான புதிய மரக் கறி வகைகள் மற்றும் பழவகைகளை நாளாந்த உணவில் அதிகமாக சேர்த்துக் கொள்வதன் மூலமும், உணவு தயாரிக்கும்போது எலுமிச்சம்பழம், தக்காளிப்பழம் போன்றவற்றைச் சேர்த்துக் கொள்வதன் மூலமும் உடலுக்குத் தேவையான விற்றமின் இ யைப் பெற்றுக் கொள்ள முடியும். உணவு உண்ட சிறிது நேரத்தின் பின்னர் அருந்தப்படும் தேநீர், கோப்பி போன்ற பானங்கள் இரும்புக்கூறின் அகத்துறிஞ்சலைத் தடுக்கின்றன. ஆகவே உணவு உட்கொள்வதற்கு ஒரு மணித்தியாலத்துக்குள்ளோ அல்லது உணவு உட்கொண்டு ஒரு மணித்தியாலத்துக்குள்ளோ இவற்றைப் பருகுவதைத் தவிர்ப்பது பொருத்தமானது.

கர்ப்ப காலத்தில் கல்சியம் அதிகம் நிறைந்த உணவுகளான பால், யோகட், சீஸ், பச்சை நிற கீரை வகைகள், இலை வகைகள், நெத்தலி, சிறு மீன்கள், பருப்பு வகை (கடலை, கௌபி, பயறு), தானியங்கள் என்பவற்றை உணவில் சேர்த்துக்கொள்வது சிறப்பானது. ஏனெனில் வளரும் குழந்தையின் எலும்பு வளர்ச்சிக்கு கல்சியம் மிக அவசியமானதாகும். கர்ப்ப காலத்தில் கல்சியம் நிறைந்த உணவுகளை எடுக்கத் தவறும் பட்சத்தில் குழந்தையானது தாயின் உடற்சேமிப்பிலிருந்து கல்சியத்தை எடுத்துக்கொள்ளும். இதன் காரணமாக பிற்காலத்தில் தாய்க்கு எலும்பு சம்பந்தமான நோய்கள் உருவாக அதிக சாத்தியப்பாடு உள்ளது. கல்சியம் உடலில் அகத்துறிஞ்சப்படுவதை விற்றமின் டீ அதிகரிக்கின்றது. உடலுக்குத் தேவையான விற்றமின் டீ யை கடல் உணவுகளை உண்பதால் பெற்றுக் கொள்வதோடு, சூரிய ஒளியானது உடலில் விற்றமின் டீ தொகுப்புக்கும் பயன்படுகின்றது. ஒருநாளுக்கு குறைந்த பட்சம் அரை மணித்தியாலமாவது சூரியஒளி உடம்பில் படுவது நல்லது.

போலிக்கமிலம் எனப்படுவது விற்றமின் பி வகையை சேர்ந்ததாகும். கர்ப்ப காலத்துக்கு முன்னரும், கர்ப்பகாலத்தின் ஆரம்ப கட்டப் பகுதியிலும் போலிக்கமிலம் எடுத்துக்கொள்வது அவசியமானது. போலிக்கமிலமானது முள்ளந்தண்டு மற்றும் நரம்புக்குழாய் உருவாக்கத்தில் பெரும் பங்காற்றுகின்றது. இதன் பற்றாக்குறை ஏற்படுமிடத்து குழந்தைக்கு முள்ளந்தண்டு, நரம்புகள் தொடர்பான நோய் நிலைமைகளோ அல்லது குழந்தை இறந்து பிறக்கவோ அல்லது பிறந்த பின் இறக்கவோ அதிக சாத்தியப்பாடு உள்ளது. ஆகவே போலிக்கமிலம் நிறைந்த மாமிச உணவுகளான முட்டை, இறைச்சி, தானியங்கள் மற்றும் தாவர உணவுகளான பருப்பு வகை (கடலை, கௌபி, பயறு, பட்டாணி), பச்சை இலை வகை, முட்டைக்கோவா, அவரை, தோடம்பழம், ஆனைக்கொய்யா, வெண்டிக்காய், குடைமிளகாய் போன்ற உணவுகளையும் போலிக்கமில மாத்திரைகளையும் உட்கொள்வது அவசியமானதாகும்.

அயடீன் கர்ப்பகாலத்தில் அவசியம் உணவில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய கனிப்பொருளாகும். கருவுற்றிருக்கும் தாய்மார்களில் அயடீன் பற்றாக்குறை ஏற்படுமானால் கருச்சிதைவு, குழந்தை இறந்து பிறத்தல், மூளை வளர்ச்சிப் பாதிப்பு, உளவளக்குறைபாடு போன்ற பிரச்சினைகள் குழந்தைகளுக்கு ஏற்பட வாய்ப்புக்களுண்டு. அயடீன் அதிகமுள்ள உணவுகளை தினமும் உணவில் சேர்த்துக் கொள்வதால் அயடீன் குறைபாட்டு நோய்கள் வருவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். மரக்கறி வகைகள், பழவகைகள், கடல் மீன்களான சாளை மீன், நெத்தலி, இறால், சிங்கி இறால், நண்டு, முட்டை மற்றும் அயடீன் கலந்த உப்பு ஆகியனவற்றை உணவில் சேர்த்துக்கொள்வதால் போதுமான அயடீனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கர்ப்ப காலத்தின்போது அதிகளவு தண்ணீர் குடிப்பது மிகவும் நல்லது. கர்ப்ப காலத்தில் ஏற்படும் மலச்சிக்கல், நெஞ்செரிவு, சோர்வு, தசைப்பிடிப்பு, உணவு விருப்பமின்மை, தலைவலி போன்ற உபாதைகளிலிருந்து விடுபட அது உதவியாய் அமையும்.

கர்ப்பகால ஆரோக்கியமானது உணவு பழக்கவழக்கத்தில் மட்டுமல்ல, தாயின் அன்றாட வாழ்க்கை முறையிலும் தங்கியுள்ளது. கர்ப்பிணித் தாய்மார்கள் புகைப்பதையும் மதுபானம் அருந்துவதையும் முற்றாகத் தவிர்க்க வேண்டும். கர்ப்பிணித் தாய்மார்கள் புகைப்பதால் பிறக்கும் குழந்தையானது எடை குறைவாகவோ, குறைமாதக் குழந்தையாகவோ, இறந்தோ பிறக்க அதிக வாய்ப்புள்ளது. கர்ப்ப காலத்தில் மதுபானம் அருந்துவதால் குழந்தையின் உடல் மற்றும் மன வளர்ச்சி நேரடியாகப் பாதிப்படையும். அத்தோடு தேநீர், கோப்பி, மென்பானங்கள் மற்றும் சொக்லேட் போன்ற உணவுகளை அதிகளவில் தவிர்ப்பதும் மிகச் சிறந்தது. இந்த உணவுகளை அதிகம் உட்கொள்வதால் பிறக்கும் குழந்தைகள் குறைந்த எடையுடனும் குறைபாடுடைய குழந்தைகளாகவும் பிறக்கின்றார்கள்.

கர்ப்பிணித் தாய்மார்கள் உடற்பயிற்சி செய்வது அவசியமானதாகும். சாதாரணமான வீட்டு வேலைகளை கர்ப்ப காலம் முழுவதுமே செய்யலாம். தினமும் கர்ப்ப காலத்தில் நடைப்பயிற்சி செய்வது நல்லது. உடற்பயிற்சி செய்வதால் எலும்புகள் தசைகள் பலமடைவதோடு பிரசவத்தை இலகுவாக்கவும் உதவும். அதாவது குழந்தை சரியான நிறையில் பிறப்பதற்கும், கர்ப்ப காலத்தின் போது ஆரோக்கியமாக இருப்பதற்கும், சுகப்பிரசவத்துக்கும் உதவும்.

எனவே கர்ப்ப காலத்தில் தாய் சரியான உணவுப் பழக்கவழக்கங்கள் மூலமும் மற்றும் பொருத்தமான வாழ்க்கை முறையை கடைப்பிடிப்பதன் மூலமும் முறையான உடற்பயிற்சி செய்வதனாலும் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றுக்கொள்ளலாம்.




***செல்வி கௌஷிக்கா தாமோதரம்பிள்ளை***
***4ஆம் வருட மாணவி***
***பிரயோகபோசாக்குத் துறை***
***உணவும் போசாக்கும்***
***வயம்ப பல்கலைக்கழகம்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Are You After A/L's !

**Jaffna Branch**

**Trainee Marketing Executives (Male/Female)**

We offer exciting income potential and career opportunities. We are represented throughtout 21 countries in Asia.

- ★ Age between 18 to 25.
- ★ Earn oner 30,000/= per month
- ★ We provide Training, Basic salary, Travelling & Commission.
- ★ Overseas trip for achievers.

**Call us to schedule an interview within 07 days.**

Jaffna Branch: 021 567 1130, 077 356 6835 jaffnapioneerhouse@gmail.com

Address: No.100, 2nd Floor, Manipay Road, Jaffna



NEW SCIENCE WORLD VICTORY MUST

# NEW SCIENCE WORLD

Navalar Road–Brown Road Junction, Jaffna

Hotline : 077 336 4055

G.C.E (A/L) 2016

## Day Classes

திங்கள் – வெள்ளி

| | |
|---|---|
| பௌதிகவியல் | திரு. R. குகன்<br>திரு. R. குமரன் |
| இரசாயனவியல் | திரு. டயஸ்<br>திரு. T. சிவகுமார் |
| உயிரியல் | திரு. S. பொன்திவாகரன்<br>திரு. V. உமாசங்கர் |
| இணை கணிதம் | திரு. S. செந்தில்ராஜ் |

09.09.2015 தொடக்கம் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.



30 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....

# கலாலயா

பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

**A/L பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு, வெளிநாடு செல்லவிருப்பவர்களுக்கு, சொந்தமாக தொழில் செய்ய விரும்புவர்களுக்கு, மற்றும் ஆர்வமுள்ள மகளிருக்கானது.**

- *கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,*
- *Hair Dressing & Styling* (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- *முக அழகுக் கலை* (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். **(கிழமை நாட்களில் மட்டும்)**

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 20.09.2015 (ஞாயிறு)

கிழமைநாள் பிரிவுகள்: 23.09.2015 (புதன்)

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-





அருள்மிகு

வறுத்தலைவிளான்

# மருதடி விநாயகர் ஆலயம்

## மகாமண்டபம், தரிசன மண்டபம் திருப்பணி ஆரம்பவைபவம்

*மருதடி விநாயகர் அடியார்களே!*

எங்கள் ஆலயத்தில் மேற்குறிப்பிட்ட வைபவம், நிகழும் மன்மத வருடம் ஆவணி மாதம் 30 ஆம் நாள் (16.09.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நிகழ எம்பெருமான் திருவருள் கிட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அவ்வமயம் ஆலயத்திற்கு வந்து, மேற்படி மங்கல நிகழ்ச்சியில் கலந்து, எம்பெருமான் திருவருள் பெற்று உய்யுமாறு தங்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மருதடி விநாயகர் சேவையில்,
பரிபாலனசபையினர்.



விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்

DMI COMPUTER EDUCATION

After A\L

IT & English Diploma

- Dip.in Information Technology
- Dip.in Office Automation
- Dip.in PC Application

Spoken English

புதிய பிரிவுகள் ஆரம்பம்

75% OFF

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

# DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, | M.M.V. வீதி, | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.111, A9 வீதி, |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |





The Valampuri

30% Off

## The Valampuri

Address : 148/10, Station Road. Jaffna, Sri Lanka.

Telephone : +94 (0) 21 222 0111

Email : info@valampurihotel.com

Web : www.valampurihotel.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Unilever

Knorr

9/10 CHANGE ஆகி விட்டார்கள்

நீங்களும் CHANGE ஆகுங்கள்

0722 000 666 க்கு மிஸ் கோல் ஒன்று கொடுத்து சாம்பிள் பக்கெட் ஒன்றினை

**இலவசமாகப்**

பெற்றுக் கொள்ளுங்கள்



ரூ. 20/- இலிருந்து

கடந்த ஒரு வருடத்தில் நோர் மாசி பவுடர் கலவையைப் பாவித்த, 9 மாகாணங்களிலுள்ள 359 குடும்பத் தலைவிகளுக்கிடையில், LMRB நிறுவனத்தால் 2015 மே மாதம் நடாத்தப்பட்ட ஆய்வுகளின்படி இது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

முன்னர் இருந்து எங்கள் இல்லத்தரசிகள், அவர்கள் சமைக்கும் உணவுகளில் மாசிக்கருவாட்டை சேர்த்து அதன் சுவையை உணவுடன் சுவை பார்த்தார்கள். அன்றிலிருந்து இன்று வரை இந்த மாசிக்கருவாடு இலங்கையிலுள்ளவர்களில் பிரசித்தி பெற்றுள்ளமை நாம் அறிந்த உண்மை.



மாசிக்கருவாடு பாவனையின் அவசியம் மற்றும் ஆர்வம் எங்கள் இல்லத்தரசிகள் மத்தியில் தற்போது குறைந்துள்ளது. என்னுடன் ஒரு தடவை ஓர் பெண்மணி பேசிய போது "ஐயோ இப்போ மாசிக்கருவாட்டின் விலையைப் பாருங்கள். அதனை வீட்டுக்கு வாங்கி வந்த காலம் கூட ஞாபகமில்லை. அத்துடன் கடைகளில் விற்பனையாகும் மாசிக்கருவாட்டின் மேல் நம்பிக்கையுமில்லை" என்று சொன்னார்.

இதோ அதற்கு ஒரு தீர்வு கிடைத்துள்ளது. நீங்கள் விரும்பிய தரத்தில் நோர் அறிமுகப்படுத்தியுள்ள நோர் மாசி பவுடர் கலவை இப்போதே உங்கள் இல்லங்களில் இருக்கலாம். அதுபோலவே அதிலுள்ள சுவையையும் நீங்கள் விரும்பியிருக்கலாம். எனவே தான் இது மிகச் சிறந்த தரத்திலான உற்பத்தியாகக் கருதப்படுகின்றது.

சுறுசுறுப்பாக இயங்கும் எங்கள் இல்லத்தரசிகளுக்கு மாசிக்கருவாட்டை பணம் கொடுத்து வாங்கி வந்து வீட்டில் கழுவி காய வைத்து இடித்து பொதி செய்து வைத்திருப்பது சிரமமாக இருப்பதனால், நாம் நோர் மாசி பவுடர் கலவையை பாதுகாப்பாகவும் தூய்மையாகவும் தயாரித்துள்ளோம். நீங்கள் எதிர்பார்ப்பது போன்றே புதிய மீன்கள் மற்றும் மிகச் சிறந்த மளிகைப் பொருட்கள் கலந்து தயாரிக்கப்படும் இந்த உற்பத்தி உங்கள் உணவுகளில் அதிக சுவையை சேர்ப்பது போன்றே அதிக பெறுமதியையும் சேர்க்கின்றது. அது மட்டுமா நோர் மாசி பவுடர் கலவை கலந்து தயாரிக்கப்படும் உணவுகளில் ஒவ்வொரு வாயும் அறிந்து கொள்ளும் இந்த சுவை நிச்சயமாய் உங்களையும் ரசிக்கவும் சுவைக்கவும் தூண்டும். அதனால் தான் நோர் மாசி பவுடர் கலவையை சுவை பார்த்த இல்லத்தரசிகள் 10 இல் 9 பேர் இந்த சுவைக்கு மாறியுள்ளார்கள்.

நீங்கள் இன்னும் இந்த சுவையின் மாற்றத்திற்கு மாறாமல் இருந்தீர்களானால்...அதற்கான காலம் இது தான். 0722 000 666 மிஸ் கோல் ஒன்று கொடுத்தீர்களானால் உங்களுக்கு இலவசமாகவே நோர் மாசி பவுடர் கலவை சாம்பள் பெக் ஒன்றினைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே நீங்களும் இன்றே இந்த சுவையின் மாற்றத்திற்கு மாறி உங்கள் உணவின் சுவையை மேலும் அதிகரித்துக் கொள்ளுங்கள்.

0112 629 629 அழையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தெய்வீக இசைப்பேருரை

யாழ்ப்பாணம், செப் 13

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் கந்த புராண தெய்வீகத் தொடரிசை பேருரையில் இருபத்து ஆறாம் நாளான இன்று 'ஸ்ரீவள்ளி' இடம்பெறவுள்ளது. நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.45 மணிக்கு இடம் பெறும் நிகழ்வில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானக தாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா பக்க வாத்தியசகிதம் இசைப்பேருரை ஆற்றுவார் எனவும் அனை வரையும் கலந்துகொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித் துள்ளனர். (த-10)




## மின்தடை

வவுனியா, செப், 13

மேலதிக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு பராமரிப்பு வேலைகளுக் காக நாளை திங்கட் கிழமை வவுனியாவில் சில பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட் டிருக்கும் என மின்சார சபையினர் தெரிவித் துள்ளனர்.

காலை 8.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரை வவுனியா பிரதேசத்தில் வவுனியா கிறிட்டிலிருந்து பட்டாணிச்சூர் வரைக் கும், நெளுக்குளம் சந்தி யிலிருந்து செட்டிக் குளம் வரைக்கும், பண்டாரிக் குளம் பிரதேசத்தில் இருந்து மதவுவைத்த குளம் வரைக்கும் , வவு னியா நகர்ப்பிரதேசம், ஏ-9 வீதியில் (வவு னியா கன்றியிலிருந்து அழ கல்ல பிரதேசம் வரைக்கும்), கோவில்குளம் பிரதே சத்தில் இருந்து சிதம்[illegible] புரம் வரைக்கும், வெளிக் குளம் பிரதேசத்தில் இருந்து துட்டுவாகை வரைக் கும், நெளுக்குளம் பிர தேசத்தில் இருந்து பொக வஸ்வேவ வரையும் மின் விநியோகம் தடைப்ப டும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-10)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல் உறுதியாக
இருந்தால்
எதையும்
சாப்பிடலாம்

மாற்றத்திற்காகவே கொத்து, முட்டை ரொட்டி போன்ற மாசத்துக்கள் அதிகம் கொண்ட உணவுகளை நாம் சாப்பிடுகின்றோம். எனினும், அவற்றால் எமது வாயிலுள்ள கிருமிகளின் செயற்பாடுகள் அதிகரித்து, பற்துளைகளை ஏற்படுத்தும் சீனி அமிலம் வேகமாக உருவாகின்றது.

கராம்பு எண்ணெய்யால் பூரணமான சுப்பர் ஹெக்டிவ் பவர் சேர்க்கைகள் கொண்ட புதிய க்லோகாட், சீனி அமிலத்தை உருவாக்கும்

கிருமிகளுக்கு எதிராக 99% போராடும்*

க்லோகாட், தற்போது ஃபிரெஷ் மின்ட் சுவையிலும் பெற்றுக்கொள்ளலாம்.




கிருமிகளை கட்டுப்படுத்தும் சீனி அமிலத்தை செயலிழக்க செய்யும்

இலங்கையரின் முதன்மை பற்பாதுகாவலன்*

SLDA SLS 275

*ஆய்வுக்கூட பரிசோதனையின் கீழ் பரிசோதிக்கப்பட்ட புளோரைட், சீனி அமிலத்தினால் ஏற்படக்கூடிய பற்சிதைவை தடுக்க உதவும்.
*LMRB இன் ஆய்வுக்கமைய இலங்கையில் முதலிடத்திலுள்ள உள்நாட்டு வர்த்தக நாமம் (2014)
*ஒரிஜினல் க்லோகாட் இற்கு இலங்கை பல் மருத்துவர் சங்கத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

ரூ. 20/- இலிருந்து

HEMAS

PHOENIX O&M


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தோற்ற மகிந்தவை மீண்டும் சக்தி மிக்கவராக மாற்றியது முஸ்லிம் மதவாதிகளே

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சுபைர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப்.13

மக்களால் நிராகரிக்கப்பட்டு ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற மகிந்தவை மீண்டும் சக்தி மிக்கவராக மாற்றியதும், முஸ்லிம் மக்களைக் கோழைகளாக மாற்றியதும் முஸ்லிம் மதவாதிகளிலுள்ள ஒரு சிலர்தான்.

– இவ்வாறுகிழக்குமாகாண சபை உறுப்பினர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.



ஏறாவூரில்இடம்பெற்றகலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு அவர் மேலும் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராஜாங்க அமைச்சரான ஹிஸ்புல்லாஹ் மட்டக்களப்பு மாவட்டத்தில் தனித்துநின்று போட்டியிட்டு வெறும் 127 வாக்குகளாலேயே தோல்வியடைந்தார். அவரது தோல்விக்கு மதவாதிகளின் பொய்ப் பரப்புரையே முக்கிய காரணம்.

ஹிஸ்புல்லாஹ்வுக்கு எதிரான பரப்புரையை மேற்கொண்டவர்கள் மறுபுறம் மக்களால் நிராகரிக்கப்பட்ட மகிந்தவுக்கு உயிரூட்டினார்கள் என்பதையும் மறக் கக் கூடாது.

பொதுத் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சம்பூரில் சந்தித்தபோது – மகிந்த ராஜபக்சவுடன் எங்களை இணைத்துப் பொதுத்தேர்தலில் பரப்புரை செய்தார்கள் எமது எதிரிகள். அதனைத் தெளிவுபடுத்துவதற்கு நீங்கள் ஒரு தடவைகூட மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வரவில்லையே என்று தெரிவித்தேன்.

அப்போது அவர் முஸ்லிம்களுக்கான கௌரவத்தை நாங்கள் அளிப்போம் என்று என்னிடம் தெரிவித்திருந்தார்.

அதுதான் தற்போது ஹிஸ்புல்லாவுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் பதவி– என்றார். (த)

# திருக்கோணேஸ்வரத்தில் தேர்தல் ஆணையாளர்

திருமலை, செப்.13

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கடந்த செவ்வாய்க் கிழமை திருக்கோணேஸ்வரம் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

தேர்தல் திணைக்களத்துக்கு 60 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு அவர் இவ்வாறு வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளருடன், திருகோணமலை மாவட்ட செயலாளர் ஏ.ஏ.புஸ்பகுமார மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் நாலகரட்நாயக்க உள்ளிட்ட பலரும் வழிபாடு களில் ஈடுபட்டுள்ளனர்.

திருகோணமலை உதவித் தேர்தல் ஆணையாளர் சஜித் வசந்த வெல்கமவினால் இந்த வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. (த)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூவின மக்களுக்காகவும் குரல் கொடுப்பார் சம்பந்தன்

### ஹரீஸ் எம்.பி.நம்பிக்கை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தலைமை தாங்குபவரும், தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்து வருபவருமான இரா.சம்பந்தன் எதிர்க் கட்சித் தலைவராக நியமிக்கப்பட்ட தன் மூலம் இந்த நாட்டின் மூவின மக்களுக்கும் குரல் கொடுக் கும் ஒரு தலைவராக மாற்றப்பட்டுள்ளார்.

–இவ்வாறு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஹரீஸ் நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது மிகவும் பொறுப்பு வாய்ந்த பதவியாகும். இப்பதவிக் கான ஆளுமை, ஆற்றல், தகுதி, அரசியல் அனுபவ முதிர்ச்சியுடைய ஒருவரே இதற்கு நியமிக்கப்பட்டுள்ளார். இது நாட்டில் ஏற்படுத் தப் பட்டுள்ள நல்லாட் சியின் மீது தமிழ் மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு சான்று பகர்கின்றது. இந்த நல்லாட்சியில் சிறுபான்மை இனமான தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச் சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாணும் விதத்தில்– இவ்வா றான ஒரு சந்தர்ப்பத்தில் இப்பதவி யின் மூலம் சம்பந்தன் ஒரு இனத்துக்கும் அநீதி இழைக் காது அம் மக்களுக்கான நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுப்பார்– என்றும் தெரிவித்துள்ளார்.

## கருங்குளவி கொட்டி உயர்தர மாணவி சாவு

மட்டக்களப்பு, ஏறாவூர் கலை மகள் வித்தி யாலயத்தில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவியொருவர் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் உயிரிழந்துள்ளார்.

ஏறாவூர் சவுக்கடி கிராமத்தைச் சேர்ந்த தவபாலன் வினோஜினி (வயது– 16) என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:–

கடந்த புதன்கிழமை பாடசாலை விட்டு வீடு செல்லும் வழியில் அவரது கிராமத்துக்கு அண்மையிலுள்ள காட்டுப் பகுதியில் வைத்து கருங்குளவிகள் கொட்டியுள்ளன.

காயங்களுக்குள்ளாகி மயக்கமடைந்த மாணவி உடனடியாக ஏறாவூர் ஆதார வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (த–சி)

# கிழக்கின் மீதும் கரிசனை காட்டவேண்டும் இந்தியா

## தூதுவருக்கு ஜனா கடிதம்

மட்டக்களப்பு, செப்.13

இந்திய அரசு இலங்கைத் தமிழர் தாயகம் தொடர்பான கரி னையை வடக்குக்கு மாத் திரம் மட்டுப் படுத்தாது கிழக்குக்கும் விஸ் தரிக்க வேண்டும். இது இந்தியாவினது தார் மீகப் பொறுப்பும் கடமையுமாகும்.

– இவ்வாறு முன்னாள் நாடாளு மன்ற உறுப் பினரும், கிழக்கு மாகாண சபை உறுப்பின ருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

இந்திய தூதுவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தி லேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள் ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:–

வடக்கு–கிழக்கு இணைந்த தமிழர் தாயகத் தில் அரசியல் விடுதலை உணர்வு இளைஞர் களிடையே கூர்மையடைந்து அது ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்த வேளை அதற் குப் பின்தளமாக இருந்து எம்மை ஊக்கு வித்தது இந்தியாவே.

தொப்புள்கொடி உறவான தமிழர்களுக்கு நிலையான அரசியல் தீர்வுக்கு இந்தியா தன் னாலான பங்களிப்பை வழங்கும் என்ற நம் பிக்கையின் உற்சாகத்தில் ஆயுதம் ஏந்தி னோம்.

அதன்பின்னர் நடைபெற்றவை எல்லாம் நம்பிக்கைக்கு எதிரானவை. இன்னும் கூட இந்தியாவுக்கு இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஒரு காத்திரமானபங்கு உண்டு. இதனை இந்தியா மறுக்கமுடியாது என்பதே தமிழ் மக்களின் அபிப்பிராயம்.

"யாழ்ப்பாணப் புகையிரதப் பாதை நிர்மா ணம், வடக்கின் வீட்டுத் திட்டம், அச்சுவேலிக் கைத்தொழிற் பேட்டை போன்ற இந்தியாவின் அபிவிருத்திகள் தார்மீக கடமையின்பாற் பட்டதாகவே நான் கருதுகின்றேன்.

அதுபோல், போரால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணம் தொடர்பாகவும் இந்தியா தனது பார்வையைச் செலுத்தவேண்டியதும் காலத் தின் கட்டாயமே.

கடந்த மூன்று தசாப்த போர் வடக்கை எந்தளவுக்குப் பாதித்ததோ அந்தளவுக்குக் கிழக்குவாழ் தமிழ்ப் பிரதேசங்களையும் பாதித்தது.

ஒருபுறம் பேரினவாத அரசின் பாராமுகம். மறுபுறம் சிறுபான்மை இனமொன்றின் அரசி யல் அதிகாரப்பலம். இவற்றுக்கிடையில் மத்தளம் போன்று கிழக்கு வாழ் தமிழர்களின் நிலைமை –

இந்திய அரசு வடக்கில் துணைத் தூதரகத்தை அமைத்து பாதிக்கப் பட்டவர்களின் துயர் துடைப் பதுபோல, எதிர்காலத்தில் கிழக்கில் ஒரு துணைத்தூதரகத்தை அமைத்து கிழக்கு மக்களின் அபிவிருத்தியிலும் கவனம் எடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்"! என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்திரு
ஜூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்

## யாழ். மறை மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலமாக மாறிவரும்



# சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத் தலம்

சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தல பெருவிழா செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கொண்டாடப்படுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

ஊர்காவற்றுறையில் இருந்து சுமார் ஆறு மைல் தொலைவில் லைடன் தீவின் பழம்பெரும் கிராமங்களில் ஒன்றாகிய வேலணையில் – கடல் அலைகள் தாலாட்டும் சாட்டிக் கிராமம், நெய்தலும் பாலையும் இணைந்த இயற்கை வளமுடைய ஒரு கிராமமாக அமைந்துள்ளது. இங்கு சாட்டி மாதா என்று எல்லோராலும் பக்தி பூர்வமாக அழைக்கப்படும் பிரசித்தி பெற்ற சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தலம் அமைந்துள்ளது. வற்றாத நன்னீர் ஊற்று சாட்டியில் கிடைக்கின்றமை ஒரு பெரும் வரப்பிரசாதமாகும். சாட்டி மாதாவின் திருச்சொரூபம் அங்குள்ள கிணற்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டமையால் அங்கு வற்றாத நன்னீர் ஊற்று இருக்கின்றது என்ற ஒரு பாரம்பரியம் உண்டு. இயற்கை அழகு கொண்ட புனம் கூடல்களின் அருகே அமைந்துள்ள சாட்டிக் கடற்கரை, மக்கள் எல்லோரையும் கவர்ந்திழுத்து தமது இனிமையான பொழுதைக் கழிக்க அழைப்பு விடுக்கும் ஒரு கடற்கரையாகும். சாட்டி அன்னையின் பதியைச் சுற்றி பல இந்துக் கோவில்கள் அமைந்துள்ளன. இங்கு வாழ்கின்ற இந்து மக்களுக்கும் கத்தோலிக்க மக்களுக்கும் இடையில் ஓர் நெருங்கிய அன்புறவு உண்டு. சாட்டிக் கடற்கரைக்கு வருகின்ற இந்து சமய மக்கள் சாட்டி மண்ணை விட்டு வெளியேற முன்னர் சாட்டிசிந்தாத்திரை மாதா யாத்திரைத் தலத்துக்குச் சென்று அன்னையைத் தரிசிக்காமல் வெளியேறுவதே இல்லை. அதேபோல சாட்டி அன்னையைத் தரிசிக்க வருகின்ற கத்தோலிக்க மக்கள், அன்னையின் பதியைவிட்டு வெளியேற முன்பு சாட்டிக் கடற்கரைக்கு சென்று நீராடாமலோ – சில மணிப் பொழுதுகளை சாட்டிக் கடற்கரையில் செலவிடாமலோ வெளியேறுவதே இல்லை.

தீவுப்பகுதியானது, ஊர்காவற்துறை – கரம்பொன் – நாரந்தனை – மண்டைதீவு – புங்குடுதீவு – நெடுந்தீவு – சாட்டி ஆகிய 7 பங்குகளையும் ஏறக்குறைய 34 ஆலயங்களையும் கொண்ட ஒரு கத்தோலிக்கத்தின் விளை நிலம் ஆகும். யாழ். மறை மாவட்டத்தின் மிகப் பிரசித்தி பெற்ற மூன்று யாத்திரைத்தலங்களான சரவணை சின்னமடு செபமாலை அன்னை யாத்திரைத்தலம் – சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத் தலம் – கரம்பொன் வேளாங்கன்னி அன்னை யாத்திரைத்தலம் ஆகிய யாத்திரைத்தலங்கள் இங்கே அமைந்துள்ளன. யாழ் – மன்னார் – திருமலை – மட்டக்களப்பு ஆகிய நான்கு தமிழ் மறைமாவட்டங்களின் ஆயர்களான மேதகு ஜெ.எமிலியானுஸ் பிள்ளை அ.ம.தி ஆண்டகை – மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை – மேதகு எல்.ஆர்.அன்ரனி ஆண்டகை – மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை – மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை – மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை ஆகிய அனைத்து ஆயர்களும் தீவுப்பகுதி மண்ணின் மைந்தர்களே.

1981 ஆம் ஆண்டு யாழ். மறை மாவட்டத்தில் இருந்து மன்னார் மறைமாவட்டம் பிரிக்கப்பட்ட போது மருதமடு அன்னையின் யாத்திரைத் தலம் மன்னார் மறைமாவட்டத்தோடு இணைந்தது. அப்போதே யாழ். மறைமாவட்டத்துக்கு மடுப்பதியைப் போன்ற ஒரு பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. சின்னமடு – மன்னார் மடுப்பதியின் ஒரு சிறிய பதிபோன்றது என்று சின்னமடுவை பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலமாக அமைக்க முற்பட்டனர். இருப்பினும் சாட்டியின் இயற்கையான கடல் வளம் – நீண்ட கால சரித்திரப் பின்னணி – மக்கள் மத்தியில் அதற்கிருந்த பிரபல்யம் – இயற்கைஅழகு – இடஅமைப்பு என்பன சாட்டியைப் பிரபல்யமான யாத்திரைத்தலமாக்கியது.

16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் யாழ். குடாநாட்டுக்கு வந்தபோது சாட்டித்துறையிலேயே வந்திறங்கினர். யாழ். நகரை அண்மித்த பிரதேசத்தில் சாட்டி அமைந்திருந்தமையால் இங்கு போர்த்துக்கேயர் ஒரு கோட்டையை அமைத்து அரண் செய்து தமது கடற்பயணத்தின்போது தம்மைப் பாதுகாத்த சிந்தாத்திரை அன்னை சொரூபத்தை வைத்து வேண்டுதல் செய்தனர். ஒல்லாந்தர் கைகளுக்கு யாழ்ப்பாணம் மாறியபோது சாட்டியில் இருந்த இந்தக்கோட்டை அவர்களால் தகர்த்தெறியப்பட்டது. ஏறக்குறைய 200 வருடங்களின் பின்னர் ஒல்லாந்தரால் தகர்க்கப்பட்ட மேற்படி கோட்டையின் இடிபாடுகளுக்கு இடையே போர்த்துக்கேயரால் வைத்து செபிக்கப்பட்டு வந்த அன்னையின் சொரூபம் புதுமையாக சிதைவுறாமல் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஊர் மக்கள் அந்த சிந்தாத்திரை மாதா சொரூபத்தை ஓர் ஓலைக் கொட்டிலில் வைத்து வேண்டுதல் செய்து வந்தனர். இதுவே சாட்டி சிந்தாத்திரை அன்னையின் ஆரம்ப வரலாறு என அறியவருகின்றது.

சாட்டியின் பூர்வீகக்குடிகள் கமண்டலர் எனவும் குயவர் எனவும் அழைக்கப்பட்டனர். மன்னாரிலும் மாதோட்டத்திலும் கத்தோலிக்க மறையைத் தழுவி திருமுழுக்குப் பெற்ற சிலரும் சாட்டியில் வந்து குடியேறி வாழ்ந்தனர் என நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் ஆய்வுகள் கூறுகின்றன. அவர்களோடு வாழ்ந்த இடும்பன் குடும்பத்தைச் சேர்ந்த முத்தவி என்ற உத்தம கத்தோலிக்கர் ஓர் உயர்ந்த தடிகம்பத்தை நிறுவி அதன் நுனியிலே மணி ஒன்றைக் கட்டி அம்மணியை அடித்து மக்களை ஆலயத்துக்கு அழைத்து வழிபாடு செய்து வந்துள்ளார். அவர் ஒவ்வொரு வருடமும் சாட்டியில் அமைந்துள்ள இந்தக் கோவிலுக்கு ஊர் மக்கள் எல்லோரையும் அழைத்து மூன்று நாள் அங்கு தங்க வைத்து வழிபாடுகள் நடத்தி வந்தார் என்று அறியவருகின்றது. சாட்டி சிந்தாத்திரை மாதாவின் மேல் ஆழ்ந்த பக்தியும் அசையாத நம்பிக்கையும் கொண்ட மக்கள் இந்த வருடாந்த வழிபாடுகளில் பங்குபற்றி அன்னையின் அருளை நிறைவாகப் பெற்று வாழத் தொடங்கிய போது இந்தக் கொட்டில் கோவிலை சிறப்பான ஆலயமாக அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடையே உருவானது. அந்த எண்ணக்கருவுக்கு உருக்கொடுக்கும் வகையில் 1789 ஆம் ஆண்டு கல்லினாலான ஒரு சிறிய ஆலயத்தை அங்கு அமைத்தார்கள். 1886 இல் இந்த ஆலயம் தீப்பற்றி எரிந்ததாக அறியவருகிறது.

யாழ். ஆயர் ஜே.ஏ.கியோமர் அ.ம.தி ஆண்டகை காலத்தில் மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் பணியாற்றிய அந்தோனி அடிகளாரின் மேற்பார்வையில் 1928 ஆம் ஆண்டு இப்போது நாம் காணுகின்ற ஆலய கட்டடத்துக்கான கட்டுமானப்பணிகள் ஆரம்பமாகின. 1946 ஆம் ஆண்டு ஊர்காவற்துறை கரம்பொனைச் சேர்ந்த எஸ்.எஸ்.பஸ்ரியன் என்பவருடைய அன்பளிப்பில் ஆலய முகப்பில் நாம் இன்று காணுகின்ற திறந்த மண்டபம் கட்டியெழுப்பப்பட்டது. 1974 இல் கரம்பொன் சுருவிலைச் சேர்ந்த எஸ்.எம். மந்திரி என்பவரால் ஆலயத்துக்குத் தேவையான மின்சார இணைப்பும் மின் விளக்குகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டபோது ஆலயம் ஜெகஜோதியாக இரவு வேளைகளில் காட்சி தந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை காலத்தில் சாட்டி யாத்திரைத்தலம் பெரிதும் வளர்ச்சி கண்டது. 1980களில் றெஜிஸ் இராஜநாயகம் அடிகளார் சாட்டி யாத்திரைத்தல பரிபாலகராக இருந்த காலத்தில் குருக்களின் இல்லத்தோடு கூடிய தங்கு மடம் கட்டப்பட்டது. அன்னையின் சொரூபத்துக்கு அருகே தரிசனம் வேண்டி வருபவர்கள் ஒழுங்காகவும் அமைதியாகவும் பீடத்தை சுற்றிச் செல்ல வழிசெய்யப்பட்டது. ஈழநாடு, பாதுகாவலன் போன்ற பத்திரிகைகளில் விசேட கட்டுரைகளும் விழா மலரும் வெளியிடப்பட்டதோடு சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தல வாழ்த்து மடல்களும் அச்சடிக்கப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டன.

1990களில் யாழ்ப்பாணக் கோட்டையைப் பிடிப்பதற்காக ஊர்காவற்துறையில் தரையிறங்கிய படையினருடைய இராணுவ நடவடிக்கை காரணமாக ஊர்காவற்துறை கரம்பொன், சுருவில், நாரந்தனை ஆகிய இடங்களில் இருந்து மக்கள் சாட்டி அன்னையின் யாத்திரைத்தலத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். மத வேறுபாடு இன்றி மக்கள் எல்லோரும் சாட்டி அன்னையின் வளாகத்திலும் ஆலயத்திலும் குழுமியிருந்தபோது இலங்கை விமானப் படை கெலிகொப்டர் ஒன்று ஆலயத்தின் மேல் றொக்கட் தாக்குதலை மேற்கொண்டது. குருக்களின் தங்குமிடப்பகுதியிலும் ஆலயத்தின் மேலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் இரண்டு உயிர்கள் ஆலயத்தின் உள்ளேயே பறிக்கப்பட்டன. ஆலயம் சேதத்துக்கு உள்ளானது. இராணுவத்தினர் யாழ். கோட்டையைக் கைப்பற்றி திரும்பவும் ஊர்காவற்துறை நோக்கி நகர்ந்த பின்னர் மக்கள் சிறிது காலம் அங்கு வாழ்ந்திருந்தாலும் தீவுப்பகுதியை விட்டு மக்கள் எல்லோரும் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சில ஆண்டுகள் தீவுப்பகுதி வெறிச்சோடிப்போய் மனித சஞ்சாரம் அற்ற பகுதியாக மாறியபோது சாட்டி அன்னையின் திருவிழாக்களும் தடைப்பட்டன.

1995 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இராணுவத்தினர் யாழ். நகரைக் கைப்பற்றிய பின்னர் திருநாள்கள் சிறப்பாகக் கொண்டாடத் தொடங்கப்பட்டன. 2003 ஆம் ஆண்டின் பின்னர் சாட்டி சிந்தாத்திரை அன்னை யாத்திரைத்தலம் அமலமரித் தியாகிகள் சபைக் குருக்களின் பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டது. முதற் பொறுப்பேற்ற ஏ.இம்மானுவேல் அ.ம.தி அடிகளார் காலத்தில் போட்டிக்கோவோடு அமைக்கப்பட்ட திருநாள் திருப்பலி நிறைவேற்றும் மண்டபம், திருத்தி அமைக்கப்பட்டது. யாத்திரிகர்கள் தங்குமிடம் ஒன்றும் அமைக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு மடுப்பதியில் பரிபாலகராகப் பணியாற்றிய அனுபவத்தோடும் தேவதாயின் மேல் ஆழ்ந்த பக்தியோடும் சாட்டி சிந்தாத்திரை அன்னை யாத்திரைத்தல பரிபாலகர் பொறுப்பை ஸ்ரனிஸ்லொஸ் பிலிப் அ.ம.தி அடிகளார் ஏற்ற பின்னர், பல முன்னேற்றப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. குருக்கள் தங்குகின்ற அறைவீடு மற்றும் சிலுவைப்பாதை தலங்கள் – வரவேற்பு மாதா சொரூபம் என்பன அமைக்கப்பட்டன. வழிபாடுகளில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு ஞான ஒடுக்கங்கள் – வார இறுதி வழிபாடுகள் – குழுக்களாகச் சாட்டிப்பதிக்கு வருவோருக்கு வழிபாட்டு உதவிகள் என பல பணிகள் ஆற்றப்பட்டன. இயல்பாகவே குருக்களை அன்பாக வரவேற்கவும் விருந்தோம்பலில் சிறந்து விளங்கவும் வல்லவரான இவரின் காலத்தில் பல குருக்கள் சாட்டிப் பதியைத் தரிசித்துள்ளனர். துன்பப்பட்ட மக்கள் மேல் கரிசனை கொண்டு அவர்களுக்கு நிவாரண உதவி வழங்கவும் மிகுந்த அவசரம் ஏற்படும் போது வாகன வசதி வழங்கவும் எனப் பல பணிகளை இவர் ஆற்றியமையால் சாட்டிப்பதி நோக்கி பலர் வரவும் இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியேறவும் தொடங்கினர்.

2013 முதல் பிரபல்யம் வாய்ந்த பிரசங்கியாரான ஜெறோம் லம்பேட் அ.ம.தி அடிகளார் பரிபாலகராகப் பணியாற்றி வருகிறார். இவர் வழிபாடுகளிலும் அன்னையின் பக்தியைப் பரப்புவதிலும் அதிக ஆர்வம் கொண்டு உழைத்து வருகிறார். தேவ அன்னையின் சக்தியைப் பரப்பக்கூடிய சிந்தனைகளை யாத்திரிகர்கள் படிக்கக்கூடிய இடங்களில் எழுதி அவர்கள் மனங்களில் அன்னைபால் ஆழ்ந்த நம்பிக்கையை உருவாக்கி வருகிறார். ஆலயம் முழுவதும் வர்ணம் பூசப்பட்டு வரவேற்பு மாதா சொரூபத்துக்கு மின் விளக்குகள் பூட்டப்பட்டு பதியை மேலும் அழகு செய்வதில் கவனம் செலுத்திவருகிறார். தவக்காலத்தில் பங்குகளுக்கான வழிபாடுகள் – முதல்சனி பக்தி – பதியைத் தரிசிக்கும் யாத்திரிகர்களுக்கான வழிபாடுகள் எனப் பல பணிகளை இவர் ஆற்றி வருகிறார்.

தீவுப்பகுதிக்கான வீதிகள் சிறப்புற அமைக்கப்பட்டு மிக விரைவாக அங்கு செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளமையால், இனிவரும் காலங்களில் சாட்டிப் பதியை நோக்கி வரும் யாத்திரிகர்கள் தொகை மிக அதிகரிக்கும் என்றே நம்பலாம். சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத் தலத்தில் இன்னும் அதிக கவனமும் விசேட வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு வழிபாடுகளும் மேலதிக திருநாள்களும் கொண்டாடப்பட்டால் இதனை யாழ். மறை மாவட்டத்தில் முதன்மையான மிகப் பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலமாக மாற்றலாம் என்பதில் ஐயமில்லை.

சாட்டி சிந்தாத்திரை அன்னை யாத்திரைத்தலம் யாழ். மறைமாவட்டத்தின் மேலும் பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலமாகி அன்னை தம் அருள் வரங்களை அனைத்துத் தமிழ் மக்கள் மீது மேலும் பொழிவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KBBS CAMPUS
CREATING PROFESSIONAL ACCOUNTANTS

## சாதாரணதர (O/L), உயர்தரப் (A/L)

**பரீட்சைகளின் பின் நிபுணத்துவம் மிக்க கணக்காளர் மற்றும் வங்கியாளராகும் தொழில் வாய்ப்பைப் பெறுவதை உறுதி செய்து கொள்ளுங்கள்**

**விசேட திறமையுள்ள மாணவர்களுக்கு 100% வரையான புலமைப்பரிசில்களும் உண்டு**
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

கல்விசார், தொழில்சார் வழிகாட்டல் இலவச கருத்தரங்கு விரைவில்

CA Sri Lanka | ACCA | CIMA | aat SRI LANKA | IBSL | CMA Sri Lanka

**மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கான விண்ணப்பங்களை மேற்கொள்வதற்கு இப்பொழுதே முந்துங்கள்**

KBBS Campus நிபுணத்துவம் மிக்க தொழில்சார் வகுப்புக்களின் வரிசையில் முதலிடம் பெற்றிருப்பதற்கான விசேட காரணங்கள் எவை?

- ★ தொழில்சார் பாடநெறிகளில் நிபுணத்துவம் மிக்க விரிவுரையாளர்களின் பிரத்தியேகக் கவனிப்பு.
- ★ ஒப்பற்ற, திறமையான, அர்ப்பணிப்பு மிக்க கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களின் சேவை.
- ★ அதியுயர்ந்த சித்தி விகிதங்களும் (90% வரை) பாடநெறிகளுக்கான எளிய கட்டணங்களும்
- ★ பரீட்சைகளுக்கான எதிர்பார்க்கைக் குறிப்புகளும், வழிகாட்டிகளும்.
- ★ விரிவுரையாளர்களால் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட பாடநூல்களும், வினா வங்கியும் (CA Sri Lanka, CIMA, ACCA போன்றன)
- ★ நவீனவசதியுடனும், இலகுவில் வந்தடையக் கூடியதுமான நிரந்தர அமைவிடம்.
- ★ ACCA | CA | அங்கீகரிக்கப்பட்ட தொழில் வழங்குனர் Blue Ocean Group of Companies



**S. Thumilan**
Group Chairman & Renowned Lecturer
ACA, ACCA, ACMA (UK), CGMA, CPA (Aus)
MCSI (UK), FMAAT (SL), ACS

**KBBS CAMPUS** | A Subsidiary of Blue Ocean Group of Companies

**யாழ் மண்ணில் : No. 281, K.K.S Road, Jaffna**

Head Office: No. 75, Galle Road, Dehiwala, Sri Lanka Tel: +94 112 717 902

தொடர்புகளுக்கு 0777 554 557 | 0773 157 465 | 0773 028 400

---



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

ஒரு கட்டடம் கட்டப்படும்போது அதன் அத்திபாரம் எந்தளவு உறுதியாக இருக்கவேண்டுமோ அந்தளவு உறுதியான நம்பிக்கை அதனை நிர்மாணித்துக் கொடுப்பவர்கள் மீதும் இருக்கவேண்டும். இலங்கை கட்டட நிர்மாணத்துறையில் கடந்த 35வருடங்களாக கோலோச்சிக்கொண்டிருக்கும் Link Engineering அந்த நம்பிக்கையை ஆண்டாண்டு காலமாக தமது உயரிய சேவையின் மூலம் காப்பாற்றிவந்துகொண்டிருப்பதுடன் தற்போது அடுத்தகட்டமாக வடக்கிலும் தனது சேவையை விஸ்தரிக்கின்றது.

## உங்களுக்கான எமது சேவைகள் :

- அதியுயர் தரமான கட்டட வடிவமைப்புக்களைக் கொண்ட தனிப்பட்ட மற்றும் வர்த்தக மயப்படுத்தப்பட்ட கட்டுமானங்கள்
- கட்டடக்கலை மற்றும் கட்டமைப்பு வடிவமைப்புக்கள்
- கட்டடச் செலவு மதிப்பீடுகள் தயாரித்தல்
- கட்டடப் பொருட்கள் விநியோகம்
- புனரமைப்பு மற்றும் மீள்கட்டுமானம்

**யாழ் மண்ணில் எமது கட்டட நிர்மாண சாதனை**




தேசிய நீர்-வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வடமாகாண அலுவலக கட்டடம் -யாழ்ப்பாணம் | புதிய நீதிமன்ற கட்டடத்தொகுதி சாவகச்சேரி | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கான வடமாகாண அலுவலக கட்டடம் யாழ்ப்பாணம்

**உங்கள் வியாபார ஸ்தங்களையும் பிரத்தியேக வீடுகளையும் நிர்மாணித்துக்கொள்ள தற்போது யாழ் மண்ணில்**

**LINK | Link Engineering**
LINK TO CONSTRUCTION EXCELLENCE

**PIONEERS IN BUILDING YOUR DREAM HOME OR BUSINESS PREMISES**



நாம் உங்கள் யாழ் மண்ணில் - No. 281, K.K.S Road, Jaffna

**Blue Ocean Group of Companies**
LEADING THE WAY TO THE FUTURE...

Office: #32, 2nd Floor, Galle Road, Dehiwala, Sri Lanka | Tel: 0112 722 217
Factory : No.105, St. Peter's Road, Koralawella, Moratuwa | Web: www.blueocean.lk / www.link.lk

A Subsidiary Of Blue Ocean GROUP OF COMPANIES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளுக்கு 0777 546 546 | 0777 729 555 | 0777 755 323 | 0777 755 657











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரிஸ்சந்திர வழங்கும் தோசைக் கலவை மற்றும் குரக்கன் தோசைக் கலவை

ஹரிஸ்சந்திர என்ற நாமம் மிகச் சிறப்பானதாகவும் முழுமையான உணவுடன் ஒத்ததாகவும் இருப்பதன் காரணமாக, சந்தையில் இது மறுக்கப்பட முடியாத வகையில் முன்னணி வகிக்கின்றது. பல விடயங்கள் மாறி விட்டன. ஆனால், நாம் மாறவில்லை. மிகச்சிறந்த பொருட்கள் சேர்த்து அன்புடனும் கரிசனையுடனும் பார்த்துப் பார்த்து பழைய பாரம்பரிய முறையில் இத் தோசைக் கலவை தயாரிக்கப்பட்டுள்ளது. ஹரிஸ்சந்திரவிடமிருந்து பெற்றுக் கொண்டதனால், அது இயற்கையும் ஊட்டச்சத்தும் மிக்க உணவு என்பதனை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.




ஹரிஸ்சந்திர, தரத்திற்கு நம்பகமான நாமம்

மேலதிக விபரங்களுக்கு,
இணையத்தளம்: www.harischandramills.com அல்லது
www.facebook.com/harischandramills
தொ.பேசி: 011 2 685 734 / 041 2 224 701
ஈ-மெயில்: info@harischandramills.com

விலை - ரூ 125/- இலிருந்து

SUZUKI

அறிமுகமாகிறது. அனைத்தும் ஒடோமெடிக் தொழில்நுட்பத்திலான புத்தம் புதிய அல்டோ K10 மோட்டார் கார்

## நவீனத்துவத்தை பின் தொடருங்கள்




1000cc பலத்தால்... ஓட்டோ கியர் ஆற்றலால்... கவர்ச்சிகரமான விலையில் வரும் முதல்வன்...

ALTO K10

24.07* km/l | K NEXT ENGINE | AUTO GEAR SHIFT

* இரண்டு வருடங்கள் அல்லது 50,000 கி.மீ. உத்தரவாதம்
* நான்கு வருடங்கள் அல்லது 80,000 கி.மீ. நீண்டகால உத்தரவாதம் - ரூ. 25000 முதல்
* சாலை நிவாரண சேவை வருடாந்தம் ரூ. 3,000

TRADE IN YOUR VEHICLE FOR A BRAND NEW SUZUKI

* Test results of rule 115 of CMVR, 1989

அசோசியேட்டட் மோட்டர்ஸ் (தனியார்) நிறுவனம்
445, பொரத்தலோக் மாவத்தை, கொழும்பு 08
www.suzukilk.com

www.facebook.com/suzuki.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வெடுக்கிறார் மகிந்த



முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச கால்டன் இல்லத்தில் ஓய்வெடுக்கும் ஒளிப்படங்கள் வெளியாகியுள்ளன. தனது இளைய புதல்வர் ரோகித ராஜபக்சவுடன் அவர் கால்டன் இல்லத்தில் காணப்படும் ஒளிப்படம் ஒன்று சமூக வலைத்தளத்தில் வெளியிட்டப்பட்டுள்ளது. தேர்தல் கால அலைச்சலையடுத்து அவர் தனது இல்லத்தில் அமைதியாக ஓய்வெடுத்து வருகின்றார். மேலும் தேர்தலில் அவரது அணியினர் பெற்ற தோல்வியைத் தொடர்ந்து அவர் பெரிதும் மனமுடைந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. (த)












Digitized by Noolaham Foundation.
noolaham.org



வடமராட்சி செவிப்புலன் அற்றோர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான சினேக பூர்வமான விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த விழாவில் விளையாட்டு வீரர்கள் ஆர்வமாகக் கலந்துகொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். (10)





யாழ். குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. அதிபர் கி.குகநாதன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்துகொண்டிருந்தார். (10)







சுழிபுரம் குடாக்கனை அம்பாள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா குறித்த முன்பள்ளியின் மைதானத்தில் முன்பள்ளி ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் இடம்பெற்ற மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகள்.(ஐ)





இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை வளலாய் ஜே/284 கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வழங்கிய சமையலறை உபகரணங்களை சங்கத்தின் தலைவர் கு.பாலகிருஷ்ணன் வழங்கி வைத்தார். (ஐ-7)



புலம்பெயர் அறக்கட்டளை நிதியத்தினால் சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)



வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் குளங்கள் புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் தற்போது திருநெல்வேலி பரவைக்குளத்தின் தடுப்பணைகள் போடப்பட்டு தூர்வாரப்படுகின்றது. பெரிய இயந்திரங்களின் உதவியுடன் புனரமைப்புப் பணிகள் இடம்பெறுகின்றன. (7)



ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கருத்தமர்வு ஒன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. சிரேஷ்ட சட்டத்தரணி வி.தேவசேனாதிபதியின் ஏற்பாட்டில் இந்த இலவசக் கருத்தமர்வு இடம்பெற்றது. (4)





நல்லூர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இலங்கைக்கான இந்தியத் தூதரகமும் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் இணைந்து நடத்திய தெய்வீக இசையரங்கு வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கிட்டுப் பூங்காவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்னிந்தியக் கலைஞர் ரேவதி கிருஸ்ணாவின் வயலின் கச்சேரியும் இடம் பெற்றது. (86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சூழல் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல் சாவ கச்சேரி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணம் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் உதவி முகாமைத்துவ உதவியாளர் திருமதி கலைவாணி கோபாலராஜா கலந்து கொண்டு விளக் கங்களை வழங்கினார். (ஜ-122)



வரணி நாவற்காடு ரட்னா முன் பள்ளி விளையாட்டுப் போட்டி நிகழ் வின் போது பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செல்வி இரஞ்சனா நவரட்னம் கலந்து கொண்டார். நிகழ்வில் வினோத உடைப் போட்டியில் கலந்து கொண்ட மாணவிகளைக் காணலாம். (ஜ-122)



கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை நினைவு விருது. குருநகர் கலைஞர் கிறகரி கிறிஸ் தோப்பர் அண்ணாவிக்கு அண்மையில் நல்லூரில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை விருதை வழங்கினார். (ஜ)



சுன்னாகம் ஹரிகரபுத்திர ஐயனார் ஆலயத்துக்குச் செல்லும் மதவடி வீதி முகப்பில் கட்டப்பட்ட அலங்கார வளைவு ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜங்க அமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரனினால் திறந்து வைக் கப்பட்டுள்ளது. (ஜ-86)




வலி. மேற்குப் பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலை மாண விகளை இணைத்து போதைப் பொருளுக்கெதிரான விழிப்புணர்வு நடவடிக்கை[illegible] முக்க சம்மேளனம் நடத்தியது. பேரணி சித்தன்கேணி சிவன் தேவஸ்தான முன்றிலில் இருந்து ஆரம்பித்து சங் கானை மத்திய பஸ்நிலையத்தில் முடிவடைந்தது. (ஜ)



காரைநகர் நீலிப்பந்தனை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மகா கும்பாபிஷேக காட்சிகள். (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SKILLS
COLLEGE OF TECHNOLOGY



## உயர்தப் பரீட்சையின் பின் நீங்கள் எதிர்பார்ப்பது...

- உயர் சம்பளம் பெறும்
- குறுகிய காலத்தில் பூர்த்தி செய்யக்கூடிய
- சமூகத்தில் நல் அந்தஸ்துள்ள

**பாடநெறி**

- ஏற்றுக்கொள்ளப்பட்ட அனுபவமுள்ள நிறுவனத்தில்
- நியாயமான விலையில்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு

## அனைத்துடனும் கற்றுக்கொள்ளவா...

### Your Pathway to Success...

- C&G Post Graduate Diploma in Engineering Level 7
- C&G Graduate Diploma in Engineering Level 6
- BEng - Final Year Level 6
- C&G Advanced Diploma in Engineering Level 5
- C&G Diploma in Engineering Level 4
- C&G Diploma in Engineering Level 3 ← G.C.E. A/L Maths or Science
- SCOT Certificate in Engineering ← G.C.E O/L, G.C.E A/L Commerce or Arts

கட்டார் நாட்டில் தொழில் வாய்ப்பிற்கு எங்களிடம் வரம்

2022 உலக காற்பந்து போட்டியிற்கு தயாராகும் கட்டார் நாட்டில் என்ஜினியர் தொழிலுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா பாடநெறி இலங்கையில் பூர்த்தி செய்து அதன் பின் பட்டப்படிப்பு இறுதி ஆண்டில் வேலை வாய்ப்புடன் எமது புதிய கிளை SCOT தோவா கட்டார் கிளையில் தொடர வாய்ப்பு எங்களிடம்.

**புதிய பாடநெறி ஆரம்பம்**
**2015 செத்தெம்பர்**

மேலதிக விபரங்களுக்கு

| | |
|---|---|
| யாழ்பாணம் | 021 4 666 699 |
| கண்டி | 081 4 666 699 |
| நுகேகொடை | 0773 620 362 |
| குருணாகல் | 037 3 616 868 |
| மாத்தறை | 0773 326 336 |

## City & Guilds Diploma in Engineering

- Civil Engineering
- Quantity Surveying (QS)
- Motor Vehicle Engineering (Hybrid)
- Electrical & Electronic Engineering
- Mechanical Engineering
- AutoCAD & Revit

**படநெறியை முடிவுசெய்யும் சகலருக்ம் வேலை வய்ப்பு /பயிற்ச்சி வசதிகள்!**

- உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு உயர் அந்தஸ்துள்ள City & Guilds சான்றிதழ் எம்மிடம்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு தேவையான TVEC அங்கீகாரம் எம்மிடம்
- பாடநெறி முழுத்தொகையை பகுதிகளாகச் செலுத்தும் இலகு முறை
- பல்கலைக்கழக மற்றும் என்ஜினியர் துறையில் நிபுனத்துவமுள்ள விரிவுரையாளர்கள்

City & Guilds APPROVED CENTRE
Sheffield Hallam University
UNIVERSITY of DERBY
northumbria UNIVERSITY

Jaffna Campus
No.207, Navatar Road, Jaffna.
021 4 66 66 99

Kandy Campus
081 4 66 66 99

Kurunegala Campus
037 3 61 68 68

Nugegoda Campus
No. 102, Stanley Thilakaratne Mw, Nugegoda
011 4 696 666


Matara Campus
No. 68, Dharmapala Mawatha, Matara.
041 4 501 501

Opening Soon
Gampaha Branch
Ampara Branch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்காவின் பெரிய பள்ளிவாசலில் பாரம் தூக்கி சரிந்து 107 பேர் சாவு







றியாத், செப் 13

சவுதி அரேபியாவில் அமைந்துள்ள முஸ்லிம்களின் புனித நகரான மக்காவின் பெரிய பள்ளிவாசலில் பாரம் தூக்கி ஒன்று சரிந்து விழுந்ததில் 107 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் புயலினால் ஏற்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 238 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் சவுதி அரசு அறிவித்துள்ளது.

சவுதியில் ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் முஸ்லிம்களின் ஹஜ் யாத்திரைக்கு மில்லியன் கணக்கான மக்கள் ஒன்றுகூட ஆரம்பித்த நிலையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. பலத்த காற்றே இந்த அழிவுக்குக் காரணம் என நாட்டின் பாதுகாப்பு அதிகாரி தெரிவித்துள்ள அதே வேளை மக்கா பிராந்தியத்தின் ஆளுநரான பிரின்ஸ் காலித் அல்–பைசல் சம்பவம் தொடர்பான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

பெரிய பள்ளிவாசலினது இட நெருக்கடியைத் தவிர்க்கக் கடந்த 2 வருடங்களாகக் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பல பாரம் தூக்கிகள் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ளன. அவற்றில் ஒன்றே புயல் தாக்கி வீழ்ந்துள்ளது. பள்ளிவாசலின் கதவுகள் பூட்டப்பட்டிருந்ததால் வெளியேற முடியாமல் மக்கள் தவித்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த சம்பவத்திற்கு பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். (த–ரி4)

## 3 வயது மகனைச் சலவை இயந்திரத்துக்குள் போட்டுக் கொலை செய்த கொடூரத் தந்தை

### 30 ஆண்டு சிறை தண்டனை விதித்தது பிரான்ஸ் நீதிமன்றம்

பரிஸ், செப். 13



3 வயது பிஞ்சு மகனைச் சலவை இயந்திரத்துக்குள் போட்டுக் கொலை செய்த தந்தைக்கு 30 ஆண்டு சிறை தண்டனை விதித்து பிரான்ஸ் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 36 வயதான கிறிஸ்டோப் சேம்பெனோய்ஸ் என்பவர் தனது மகனான 3 வயதுடைய பேஸ்டைனை பிறந்தது முதலே வெறுத்து வந்துள்ளார். அவனது குறும்புகளுக்கெல்லாம் மோசமான தண்டனை வழங்கி வந்[illegible] கிறிஸ்டோப்.

வழக்கமாக அவர் தண்டனை கொடுப்பதைப் போல கடந்த 2011ஆம் ஆண்டு அவன் பாடசாலையில் செய்த குறும்புக்காக கிறிஸ்டோப் இயங்கிக் கொண்டிருந்த சலவை இயந்திரத்துக்குள் இறக்கிவிட்டுக் கணினி முன் அமர்ந்துள்ளார். பேஸ்டைன் இயங்கிக் கொண்டிருந்த சலவை இயந்திரத்துக்குள் கத்திக் கதறி அலறியிருக்கிறான். கணவர் மீது இருந்த பயத்தால் என்ன செய்வதென அறியாமல் தவித்தார் சார்லின் கோட். அவரது கணவன் செய்த இந்தக் கொடூரச் சம்பவத்தின்போது தாய் சார்லின் தனது மகளுடன் இருந்துள்ளார்.

அலறல் நின்றதும் பேஸ்டைன் இறந்துவிட்டானோ என்கிற பயத்தில் கிறிஸ்டோப் அவசர உதவி எண்ணுக்குத் தொடர்பு கொண்டு தனது மகன் மாடிப்படியில் இருந்து தவறி விழுந்துவிட்டான் எனப் புகாரளித்தார். பேஸ்டைன் இறந்ததைப் பார்த்த பக்கத்து வீட்டுக்காரர் கொடுத்த புகாரின் பேரில் இந்தக் கொடூரச் சம்பவம் நீதிமன்றத்துக்குச் சென்றது.

மகள் இந்தச் சம்பவத்தை தான் கண்ணால் கண்ட காட்சியைச் சாட்சியாகத் தெரிவித்தார். இதனால் மகன் இறக்க உடந்தையாக இருந்த தாய் சார்லினுக்குச் சமீபத்தில் 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

நேற்று பிரான்ஸ் நீதிமன்றம் இவ்வழக்கின் முக்கிய குற்றவாளியான கிறிஸ்டோப்புக்கு 20 ஆண்டுகளுக்குப் பிணை கிடைக்காத வகையில் 30 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது. (த–ரி4)

## இணையத் தாக்குதல்களை ஏற்றுக்கொள்ள முடியாது

### சீனாவைக் கடிந்துகொண்டார் ஒபாமா

வொஷிங்ரன், செப். 13



சீனாவின் இணையத் தாக்குதல்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா .

சீன அதிகாரி ஜி ஜின்பிங் ஒபாமாவை வொஷிங்டனில் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நிறுவனங்கள் மீதான அதிகமான இணையத் தாக்குதல்களுக்கு சீனா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ்வாறான தாக்குதல்களுக்கு எதிராக துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும். இரு தரப்புக்களுக்கிடையிலான பொதுவான இணைய விதிகள், சட்டங்கள் என்பன தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும். இவற்றை நாம் விரைவில் சரி செய்ய வேண்டும். சீனாவை அச்சுறுத்தும் வகையில் இணையத் தாக்குதலை நடத்த எம்மால் முடியும் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள சீன அரசு, அமெரிக்க உளவுத்துறை அதிகாரி எட்வேர்ட் ஸ்னோடெனின் ஆதரவுடனேயே நாம் இவ்வாறு நடந்து கொண்டோம் எனக் குறிப்பிட்டுள்ளது. (த–ரி4)

## விளாடிமிர் லெனின் சிலையின் தலைப்பகுதி கண்டெடுப்பு

பேர்லின், செப் 13



பேர்லின் பெருஞ்சுவர் இடிப்பின் போது இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட ரஷ்யப் புரட்சியாளர் விளாடிமிர் லெனின் சிலையின் பிரமாண்டமான தலைப்பகுதி தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ளது. கிழக்கு ஜேர்மனியின் வீழ்ச்சிக்கும் ஐரோப்பா கண்டத்தில் கம்யூனிச் சித்தாந்தத்துக்கு முற்றுப்புள்ளி வைத்ததற்கும் காரணமாக அமைந்த 1989ஆம் ஆண்டு புரட்சியில் பேர்லின் பெருஞ்சுவர் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது. அப்போது லெனின் சதுக்கமாகவும், தற்போது ஐக்கிய நாடுகள் சபை சதுக்கமாகவும் உள்ள இடத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் 60 அடி உயரத்தில் கிரனேட் கல்லால் உருவாக்கப்பட்ட ரஷ்யத் தலைவர் விளாடிமிர் லெனின் சிலையும் சேர்த்து இடிக்கப்பட்டது.

சுமார் 130 துண்டுகளாக உடைக்கப்பட்ட இந்தச் சிலையின் பிரமாண்டத் தலைப்பகுதி ஜேர்மனியின் தலைநகரான பேர்லினின் புறநகர் பகுதியில் புதைந்திருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிலையின் இதர பாகங்களும் இதே இடத்தில்தான் புதையுண்டிருக்கும் எனக் கருதப்படும் நிலையில் இந்த தலைப்பகுதியை மட்டும் பேர்லின் நகரில் பாதுகாத்து வைத்து காட்சிப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. (த–ரி4)

## முதியோர்களுக்கு உகந்த நாடு சுவிஸ்

பேர்ண், செப் 13

சர்வதேச அளவில் முதியவர்கள் நிம்மதியாக, மகிழ்ச்சியாக வாழத் தகுதியான நாடுகளின் பட்டியலில் சுவிற்சர்லாந்து நாடு முதல் இடம் பிடித்துள்ளது.

குளோபல் ஏஜ் வோச் என்ற முதியவர்களுக்கான சர்வதேசத் தொண்டு நிறுவனம் உலகளவில் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் முதியவர்கள் மகிழ்ச்சியாக வாழ சூழ்நிலைகளை அமைத்து தரும் நாடுகள் குறித்து ஆண்டுதோறும் ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

உலக அளவில் உள்ள 96 நாடுகளில் 2015ஆம் ஆண்டுக்குரிய ஆய்வை மேற்கொண்டு கடந்த புதன்கிழமை முடிவை வெளியிட்டது. இந்த ஆய்வில் முதியவர்களின் விருப்பங்களுக்கு ஏற்றவாறு வாழ்வாதார அம்சங்களைச் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் உருவாக்கித் தருவதில் சிறந்த நாடாக சுவிட்சர்லாந்து தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் பங்கேற்ற 50 வயதிற்கு மேற்பட்ட சுமார் 93 சதவீதத்தினர், சுவிஸ் நாட்டில் தங்கள் வாழ்க்கையை எப்படிக் கொண்டு செல்ல வேண்டும் என்ற சுதந்திரம் தங்களுக்கு இருப்பதாக மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். 83 சதவீதத்தினர் பொதுப் பேருந்துகளில் பயணிக்க மிகவும் வசதியாக இருக்கிறது என்றும் 70 சதவிகிதத்தினர் இரவு நேரங்களில் கூடத் தனியாக வெளியில் சென்றுவிட்டுப் பாதுகாப்பாக வீடு திரும்ப முடிகிறது எனவும் கூறியுள்ளனர்.

சர்வதேச அளவில் முதியவர்கள் நிம்மதியாக வாழத் தகுதியான முதல் 10 நாடுகளின் அடுத்தடுத்த இடங்களில் நோர்வே, சுவீடன், ஜேர்மனி, கனடா, நெதர்லாந்து, ஐஸ்லாந்து, ஜப்பான், அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த ஆய்வில் இலங்கைக்கு 46ஆவது இடமும், இந்தியாவுக்கு 71ஆவது இடமும் கிடைத்துள்ளது. (த–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவு விலையில்
மாபிள் பதிக்க வேண்டுமா?

ஒரு சதுர அடிக்கு 50 ரூபா மட்டுமே.
அழகாகவும் நேர்த்தியாகவும் நீண்ட காலம் நிலைத்திருக்கவும் உங்கள் விருப்பப்படி காலம் தாழ்த்தாது மாபிள் பதித்துத் தரப்படும்.

தொடர்புகளுக்கு: A.B நுவான்
077 329 1745
077 007 4480

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
# ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்




கையிருப்பு உள்ளவரை மட்டுமே...
இன்றே முந்துங்கள்!
Free! Key & Pendant

0777 614 186
4, IBC, Wellawatte, Colombo 06, Sri Lanka.
flex
CAPTAIN TV MEGA TV JAYA TV
FLEX Graphic

Study & Work in
# Singapore

படிக்கும் போதே பகுதி நேர வேலையின் மூலம் மாதம் ரூ.70,000/- மேல் சம்பாதிக்கலாம்.

## Hotel Management
Certificate / Diploma / Advance Diploma

- அடிப்படை தகைமை O/L மட்டும்
- குறைந்த செலவில் பயணம்
- பாடநெறிக் கட்டணம் தவணை முறையில்

VISA 4 வாரத்தில்

விசாவின் பின் பணம் செலுத்தும் வசதி

STUDY IN
UK / CANADA
AUSTRALIA / MALAYSIA

VISA FORM FILLINGS - USA, Canada, UK, France, Italy, German, Swiss
போன்ற நாடுகளுக்கு Business / Family & Friends Visit / Tourist விசா Form சிறந்த முறையில் செய்து தரப்படும்.

flex Institute
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777 761 346
Tel : 2364157 Fax : 2501766
www.flexinstitute.lk

CHEAP AIR FARES
குறைந்த விலையில்
மலேசியா விமானடிக்கட்
Rs. 18,000/- இருந்து

OUR SERVICES IN MALAYSIA
- Airport Pick and Drop
- Hotel Reservations
- Tour Arrangements

RETURN

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | RS. 23,000 | BANGALORE | RS. 24,000 |
| TRICHY | RS. 26,500 | SINGAPORE | RS. 30,000 |
| MADURAI | RS. 17,000 | BANGKOK | RS. 29,900 |
| BOMBAY | RS. 32,500 | KUWAIT | RS. 43,000 |

ALL FARES ARE SUBJECT TO AVAILABILITY

USA, CANADA, UK, EUROPE போன்ற நாடுகளுக்கு Online விசா Form சிறந்த முறையில் செய்து தரப்படும்.

flex Travels & Tours
4, IBC Road, Colombo 06. Tel: 011 2506614
Hotlines: 0775 952357, 0777 761346

வேலைவாய்ப்பு

- கணிய அளவையியலாளர் (Quantity Surveyor) HND/NDT தகைமைச்சான்றிதழ் மற்றும் இரண்டு வருட முன்னனுபவம்

தகைமையுடையோர் முழு விவரங்களும் அடங்கிய விண்ணப்பத்தை 20.09.2015 ஆம் திகதிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

மனிதவள முகாமையாளர்
இல 45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
hreuroville@gmail.com

METRO
Travels & Tours (Pvt) Ltd.

எமது சேவைகள்......

- மிக குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயண சீட்டுக்கள்....
- சகல நாடுகளுக்குமான பயணக் காப்புறுதி சேவைகள்.....
- இந்தியா,மலேசியா,தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான விசாசேவைகள்...
- வெளிநாட்டு கடவுச் சீட்டுகளுக்கான இலங்கை விசா புதுப்பித்தல் ....
- இவை அனைத்தையும் நீங்கள் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.....

METRO TRAVELS & TOURS (PVT) LTD
#272/1, Stanley Road,Jaffna, Srilanka.
Tel:- 0212219424, 0212224647, 0212217199Mobile: - 0773798767, 0777881115
Email: - bartheeban@metrotravels.lk

வேலை வாய்ப்பு

- எமது நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கான ஆள் தேர்வுகள் நடைபெறவுள்ளன
- முன்னனுபவம் தேவையில்லை
- தகைமை:- O/L A/L (இம்முறை)
- இருபாலாரும்
- வயது : 18- 35
- தங்குமிட வசதி உண்டு

இடம்:- வவுனியா,கிளிநொச்சி,முல்லைத்தீவு, யாழ்ப்பாணம்,மன்னார் போன்ற மாவட்டங்களில் இருந்து விண்ணப்பிக்கலாம்
( ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் உடனடியாக விண்ணப்பிக்கவும்.)
தொடர்பு:
077 260 7854, 077 285 4882 ,021 492 7504



சிறுவர்களுக்கான
இலவச ஆங்கில கற்கை நெறிக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
(12 தொடக்கம் 14 வயதுக்குட்பட்டவர்கள்)

John Keels நிறுவனத்தின் அனுசரணையில் Gateway நிறுவனம் நடத்தும் சிறுவர்களுக்கான இலவச ஆங்கில பயிற்சிநெறிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பயிற்சி நெறி
சாவகச்சேரியிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

12 வயது தொடக்கம் 14 வயதுக்குட்பட்ட மாணவர்கள் மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்

விண்ணப்பப் படிவங்களை கீழ்வரும் முகவரிகளில் பெற்றுக் கொள்ளமுடியும்.

குறிப்பு:
- விண்ணப்ப முடிவுதிகதி 15.09.2015 செவ்வாய்க்கிழமை
- விண்ணப்பங்கள் பாடசாலை அதிபரால் அத்தாட்சிப்படுத்தப் படல்வேண்டும்.
- விண்ணப்பப்படிவத்துடன் பிறப்புத்தாட்சி பத்திரம் (Birth Certificate) இணைக்கப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு: 071 6 362 362
Gateway Jaffna, கஸ்தூரியார் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
Gateway Chavakachcheri, நவீன சந்தைக் கட்டடம், சாவகச்சேரி. (சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு)



மருத்துவத்துறையில் வேலை வாய்ப்பு
நாங்கள் வேகமாக வளர்ந்து வரும் பல்தேசியக் கம்பனி, உலகளாவியரீதியில் 14 நாடுகளில் எமது சுகாதார சேவையை வழங்கி வருகின்றோம். இலங்கையின் வட கிழக்குப் பகுதியிலே எமது சேவைகளை விஸ்தரிப்பதற்கும் மேலதிக சேவைகளை வழங்குவதற்கும் MBBS பட்டம் மற்றும் மருத்துவ துறையில் அனுபவம் உள்ள வைத்திய அதிகாரிகளை தேடுகின்றோம். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் தெரிந்திருப்பது மேலதிக தகைமையாகும்.
பகுதி நேரமாகவும் முழு நேரமாகவும் இணையலாம். உடனடியாக ஆரம்பிக்க உள்ளோம்.
ஓய்வுபெற்ற வைத்தியர்கள் மற்றும் கனிஷ்ட வைத்திய அதிகாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. தெரிவு செய்யும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சி கரமான சம்பள பெறுதி வழங்கப்படும்.
Please forward us your CV to: crohhan@gmail.com
Please call 0765440770 for more details.

ஆட்டோ விற்பனைக்கு
மிக நல்ல நிலையில் உள்ள 1300km ஓடிய பச்சை நிற TVS ஆட்டோ(AAY- xxxx) உடன் விற்பனைக்குண்டு லீசிங் வசதி உண்டு.
T.P: 075 554 6000(நல்லூர்)



ஆங்கிலம், சிங்களம் கதைக்க முடியாதே என்ற கவலையா?
இதோ!
வீட்டில் இருந்தவாறே இலகுவாக
ஆங்கிலம், சிங்களம்
கற்றுக்கொள்ள அரியதோர் வாய்ப்பு
REG (இடைவெளி) YES என்று Type செய்து
Dialog என்றால் 77000
Etisalat என்றால் 4499
ஆகிய இலக்கங்களுக்கு SMS அனுப்புங்கள்.
தமிழ் மொழிபெயர்ப்புடன் தினமும் 2 SMS பாடங்கள்

அமெரிக்க Green Card Lottery - 2017
அமெரிக்க Green Card Lottery விண்ணப்பப்படிவம் 13 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2017ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/- முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை Bristol Cyber Cafe, No. 8/3/4, Bristol Street, Colombo-01 எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.
Tel: 0112393919, 0774276579
www.bristolcc.biz

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் பிளாட்டினம் 10.30 / 2.30 6.30
சில்வர் 10.15 / 2.15 / 6.15
பஹுபாலி 10.30 / 2.30
விசாரணை 021- 2227712


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் ஆறுமுகம் பரமேஸ்வரி

மண்ணில் 10.02.1944

விண்ணில் 15.08.2015

15.08.2015 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் ஆறுமுகம் பரமேஸ்வரி அவர்களின் சிவபதப்பேறுகுறித்த அந்தியேட்டி கிரியைகள் இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனிததீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக்கிரியை கள் நாளை(14.09.2015) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முல்லைத்தீவு, மாந்தைகிழக்கு,
நட்டாங்கண்டல்.

(63875) (14,15)

குடும்பத்தினர்.
076 708 9544

## 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் கந்தையா இரகுபதி

மண்ணில் 03.06.1948


விண்ணில் 14.08.2015

கடந்த 14.08.2015 இறைபதம் அடைந்த அமரர் கந்தையா இரகுபதி அவர்களின் மரணச்செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்தோருக் கும் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## முதலாம் வருட நினைவலைகள்



### மாணிக்கம் சாம்பசிவம்

(ஓய்வுபெற்ற அதிபர், SLPS - I)

திதி- பிரதமை

உதிப்பு 25.04.1941

உதிர்வு 26.08.2014

அன்பாய் பண்பாய் அனைவரையும் நேசித்து
அறிவையும் ஆற்றலையும் அள்ளி வழங்கி
அவனியில் என்றும் புகழாய் வாழ்ந்த
அன்புத் தெய்வத்தை இழந்தே இன்று
அகம் நெகிழ துவளுகின்றோம் நாளும்!

இல - 14, கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

(62893) (14,15)

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 17 . 10 . 1937



மறைவு 12 . 08 . 2015

அமரர்

### திருமதி கமலாம்பிகை கணேசமூர்த்தி

அனைத்துமாய் நீயிருந்தாய்
அன்னையே உங்கள் நினைவுகள் தொடரும்
ஆறாத் துயரிலும் உங்கள்ஆசிகள்
எமை வாழவைக்கும் - உங்கள்
ஆத்மா சாந்தியடையட்டும்!


எமது துயரத்தில் பங்கெடுத்த அனைவருக்கும் எமது நன்றிகள்!

இறுதி நிகழ்வில் கலந்துகொண்டும் அந்தியேட்டி அழைப்பிதழ் இதுவரை கிடைக்காமல் இருந்தால் தயவு செய்து மன்னித்துக் கொண்டு இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சுதுமலை, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர் வாழ்நாள் பேராசிரியர்

### கந்தையா குணரத்தினம்

(யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், முன்னாள் விஞ்ஞானபீடாதிபதி)

எமது வளர்மதி நிறைவாழ்வகத்தால் பொருளாதார ரீதியில் வசதி குறைந்த மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்கென யாழ்.பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞானத்துறை பட்டதாரி மாணவர் கள் (1981 Batch - U.K) உடன் இணைந்து நடத்தும் கல்வி ஊக்குவிப்பு செயற்திட்டங்களில் கடந்த பல வருடங்களாக தமது பேராசன் அமரர் கந்தையா குணரட்ணம் அவர்களையும் இணைத்து அன் னாரது ஆலோசனைகள், வழிகாட்டலின் கீழ் திறம்பட செயற்படுத்தி வரும் வேளையில் அன் னாரின் அமரத்துவம் எமக்கும் கல்விச் சமூகத் திற்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், கல்விச்சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.

வளர்மதி நிறைவாழ்வகம்
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம்.

## பதினெட்டாம் ஆண்டு கவிதாஞ்சலி

செல்வி

### சின்னையா கவிதா

திதி- பிரதமை (13.09.2015)

தோற்றம் 16.12.1980

மறைவு 02.09.1997



காலை மலர்ந்த மலரே- எங்கள்
கவலைகள் தீர்த்த மருந்தே- நீ
போன திசை எங்கே?
புரியவில்லை மகளே- எங்கள்
கண்மணியே கவிதா ராசன்
உன் நினைவால் நித்தம்
நித்தம் உருகுகின்றோம்.
நாளும் ஈரவிழிகளுடன்

அன்பு அம்மா, அப்பா, அண்ணன்மார்,
அக்காமார், அத்தான்மார், மச்சான்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவும்

யாழ்ப்பாணம், செப்.13

வட்டு இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா மற்றும் நிறுவுநர் நினைவு தின நிகழ்வு நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு கல்லூரி அதிபர் நா.தனபல சிங்கம் தலைமை வகிக்கவுள்ளதுடன் முதன்மை விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (த-ரி4)

## ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்க

யாழ்ப்பாணம், செப் 13

யாழ் போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் இரு அணிகலன்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எலும்பு முறிவு கிளினிக்கில் கண்டெடுக்கப்பட்ட குறித்த இரு அணிகலன்களும் வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளதாகவும், உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துர் எஸ்.ஶ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார். (த-10)

## கும்பாபிஷேகம்


வவுனியா, செப் 13

வவுனியா ஆசிக்குளம் சக்திவிநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. தொடர்ந்து செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்புநிகழ்வும் புதன்கிழமை கும்பாபிஷேச நிகழ்வும் நடைபெறவுள்ளன.

சிவஶ்ரீ மு.இ.வைத்திய நாதக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நா.பிரபாக் குருக்கள் மற்றும் க.சுதாகரக்குருக்கள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளதாக ஆலயத்தினர் தெரிவித்துள்ளனர். (த-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



அமரர் வாழ்நாள் பேராசிரியர்
**கந்தையா குணரத்தினம்**
(முன்னாள் துணைவேந்தர் விஞ்ஞான பீடாதிபதி, பௌதீகவியல் பேராசிரியர் யாழ் பல்கலைக்கழகம்) அவர்கள் மீளாத்துயில் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், பணியாளர்கள்
New Science World
Brown Road, Jaffna

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வானைப்பிள்ளை (சின்னத்தங்கைச்சி) சரவணமுத்து



வசாவிளான், கண்ணகி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஆசாரி லேன், தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை சரவணமுத்து 09.09.2015 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, சரஸ்வதி, கனகர், கனகம்மா, மார்க்கண்டு, சுப்பிரமணியம், பாலகிருஸ்ணன் ஆகியோரின் சகோதரியும் தற்பராசக்தி, கருணேஸ்வரி, ஸ்ரீதரன், சிவசக்தி, ஸ்ரீவரதன், லலிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராசரத்தினம், மல்லிகாரதி, கனகராசா, சித்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும் கடம்பநேசன், சிவநேசன், குகநேசன், இராஜேஸ்வரி, அருள்நேசன், மயூரினி, துர்க்கா, யாழினி, யதுர்சன், பவித்திரன், பானுஜா, சதுர்சன், சங்கவி, வினோதினி, தில்ஜான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2015) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆசாரி லேன்,
தாவடி வடக்கு.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சரஸ்வதி



கச்சாயைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் சரஸ்வதி 10.09.2015 வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-நன்னிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை(முன்னாள் கிளை முகாமையாளர்), புனிதம் ஆகியோரின் அன்புத்தாயாரும் இராஜேஸ்வரியின் அன்பு மாமியாரும் Dr.கனகசிங்கம், செல்லம்மா, பத்மநாதன் (ஓய்வு நிலை அதிபர்), பூபதி (முன் னாள் கணக்காளர்), காலஞ்சென்ற கனகாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுதர்சன், பிரகாஷ், தர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2015) ஞாயிற்றுக் கிழமை மு.ப11 மணியாளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எறியால் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: செல்லம் பத்மநாதன்
கச்சாய் தெற்கு.

## மரண அறிவித்தல்

### திருமதி மலர் (ராணி) நாகராசா



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நெடுந்தீவை வாழ்விடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மலர் (ராணி) நாகராசா 09.09.2015 புதன் கிழமை காலமானார்.

அன்னார் நாகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பசுபதி - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பிரதாஸ், பிரதீஸ், துஷா (தீபா), உஷா (ஜீவா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மசாந்தன், ஜீவதாஸ், ஜெயப்பிரியா, ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இராசதுரை மற்றும் கண்ணன், இராசாத்தி, தேவரஞ்சினி, கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்னலட்சுமி, நடேஸ்வரி, வள்ளியம்மை, குணரெட்ணம், நகுலேஸ்வரி, வசந்தகுமாரி, கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சதுஷன், கேதுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணியளவில் நடைபெற்று புங்குடுதீவு 12ஆம் வட்டாரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

11/A B.S,லேன்,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்.
077 572 9206

## விசேட ஆன்மிக உரை

யாழ்ப்பாணம், செப். 13

சத்திய சாயி நிறுவனத்தில் தமிழ்நாடு மாநில முன்னாள் தலைவர் ரி.ஜி.கிருஸ்ண மூர்த்தியின் விசேட ஆன்மிக உரை இன்று நடைபெறுகின்றது. யாழ்ப்பாணம் திருநெல்வேலி சேர் பொன்.இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. நிகழ்வு குறித்த நேரத்தில் மங்கல ஆராத்தியுடன் நிறைவு பெற்று தொடர்ந்து மதிய போசனம் வழங்கப்படும் எனவும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் வட பிராந்திய சத்தியசேவா நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (த–10)

## நூல் வெளியீடு


யாழ்ப்பாணம், செப். 13

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளரான பிரம்மஸ்ரீ மகாதேவ ஐயர் ஜெயராமசர்மாவின் "உணர்வுகள்" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. பி.ப 3.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முன்னாள் துணைவேந்தர் கலாநிதி என்.சண்முகலிங்கன் தலைமைவகிக்கவுள்ளார். நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.சிவலிங்கராஜா நிகழ்த்தவுள்ளார்.

நூலின் முதல் பிரதியை சிவஸ்ரீ கிரியாகலாப முக்தாமணி சி.சோமசுந்தரக்குருக்கள் பெற்றுக்கொள்வார் எனவும் நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம் எனவும் விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த–10)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## செல்லையா திருநாவுக்கரசு
### (முத்து பத்தர்)

வரணி இடைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும, இல.36, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா திருநாவுக்கரசு (முத்துபக்தர்) 09.09.2015 புதன்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், சிதம்பரப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அருமை மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், சுப்பிரமணியம் (பொன்னையா பத்தர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், திருச்செல்வம் (டென்மார்க்), கலைவாணி, முரளிதரன் (காயத்திரி நகைத் தொழிலகம்), ரமேஸ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவரஞ்சினி (டென்மார்க்), ஸ்ரீதரன் (அதிபர் - யா/புங்குடுதீவு, இராஜராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாலயம்), சுனேத்திரா, சிவதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், ஹரி, விநோத், ஹரினி (டென்மார்க்), நித்தியாரணி, நிரோஜிதன், மயூரி, காயத்திரி, பிரகஜன், அஜிவ், ஹரேஸ், சன்ஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கந்தசாமி பத்தர் மற்றும் இராஜேஸ்வரி, காமாட்சியம்மா, காலஞ்சென்ற சதாசிவம் (புத்திசாலி) மற்றும் தனலட்சுமி, நகுலேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ஜெயக்குமார், சண்முகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தி. சரஸ்வதி - 0752 480 495
க.சிறிதரன் - 021 222 4881, 077 672 0902
தி.திருச்செல்வம் டென்மார்க் 0045 98 510980, 0045 263 74989
தி.ரமேஸ் சுவிஸ் 0041 7830 47794, 077 577 0078
தி.முரளிதரன் - 021 300 8486, 075 636 7587

36, சேர் பொன். இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்,

(64598) (13.15.16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் ஆறுமுகம் பரமேஸ்வரி

மண்ணில் 10.02.1944

விண்ணில் 15.08.2015

15.08.2015 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் ஆறுமுகம் பரமேஸ்வரி அவர்களின் சிவபதப்பேறுகுறித்த அந்தியேட்டி கிரியைகள் இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனிததீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை(14.09.2015) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெற விரும்புதால் அத்தருணம் தாங்களும் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முல்லைத்தீவு, மாந்தைகிழக்கு,
நட்டாங்கண்டல். (63875) (14,15)

குடும்பத்தினர்.
076 708 9544

## 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் கந்தையா இரகுபதி

மண்ணில் 03.06.1948


விண்ணில் 14.08.2015

கடந்த 14.08.2015 இறைபதம் அடைந்த அமரர் கந்தையா இரகுபதி அவர்களின் மரணச்செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## முதலாம் வருட நினைவலைகள்



### மாணிக்கம் சாம்பசிவம்

(ஓய்வுபெற்ற அதிபர், SLPS - I)

திதி- பிரதமை

உதிப்பு 25.04.1941

உதிர்வு 26.08.2014

அன்பாய் பண்பாய் அனைவரையும் நேசித்து
அறிவையும் ஆற்றலையும் அள்ளி வழங்கி
அவனியில் என்றும் புகழாய் வாழ்ந்த
அன்புத் தெய்வத்தை இழந்தே இன்று
அகம் நெகிழ துவளுகின்றோம் நாளும்!

இல - 14, கோப்பாய் வீதி,
உரும்பிராய். (62893) (14,15)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 17 . 10 . 1937

மறைவு 12 . 08 . 2015



அமரர்

### திருமதி கமலாம்பிகை கணேசமூர்த்தி


அனைத்துமாய் நீயிருந்தாய்
அன்னையே உங்கள் நினைவுகள் தொடரும்
ஆறாத் துயரிலும் உங்கள்ஆசிகள்
எமை வாழவைக்கும் - உங்கள்
ஆத்மா சாந்தியடையட்டும்!

எமது துயரத்தில் பங்கெடுத்த அனைவருக்கும் எமது நன்றிகள்!

இறுதி நிகழ்வில் கலந்துகொண்டும் அந்தியேட்டி அழைப்பிதழ் இதுவரை கிடைக்காமல் இருந்தால் தயவு செய்து மன்னித்துக் கொண்டு இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சுதுமலை, மானிப்பாய். குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர் வாழ்நாள் பேராசிரியர்

### கந்தையா குணரத்தினம்

(யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், முன்னாள் விஞ்ஞானபீடாதிபதி)

எமது வளர்மதி நிறைவாழ்வகத்தால் பொருளாதார ரீதியில் வசதி குறைந்த மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்கென யாழ்.பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞானத்துறை பட்டதாரி மாணவர் கள் (1981 Batch - U.K) உடன் இணைந்து நடத்தும் கல்வி ஊக்குவிப்பு செயற்திட்டங்களில் கடந்த பல வருடங்களாக தமது பேராசன் அமரர் கந்தையா குணரட்ணம் அவர்களையும் இணைத்து அன் னாரது ஆலோசனைகள், வழிகாட்டலின் கீழ் திறம்பட செயற்படுத்தி வரும் வேளையில் அன் னாரின் அமரத்துவம் எமக்கும் கல்விச் சமூகத் திற்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், கல்விச்சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.

வளர்மதி நிறைவாழ்வகம்
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம்.

## பதினெட்டாம் ஆண்டு கவிதாஞ்சலி

செல்வி

### சின்னையா கவிதா

திதி- பிரதமை (13.09.2015)

தோற்றம் 16.12.1980

மறைவு 02.09.1997



காலை மலர்ந்த மலரே- எங்கள்
கவலைகள் தீர்த்த மருந்தே- நீ
போன திசை எங்கே?
புரியவில்லை மகளே- எங்கள்
கண்மணியே கவிதா ராசன்
உன் நினைவால் நித்தம்
நித்தம் உருகுகின்றோம்.
நாளும் ஈரவிழிகளுடன்

அன்பு அம்மா, அப்பா, அண்ணன்மார்,
அக்காமார், அத்தான்மார், மச்சான்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
கவிதாலயம்,
இல.06 நாகதாம்பாள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
(63...) (14,15)

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவும்

யாழ்ப்பாணம், செப்.13

வட்டு இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா மற்றும் நிறுவுநர் நினைவு தின நிகழ்வு நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு கல்லூரி அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமை வகிக்கவுள்ளதுடன் முதன்மை விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (த-ரி4)

## ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்க

யாழ்ப்பாணம், செப் 13

யாழ் போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் இரு அணிகலன்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எலும்பு முறிவு கிளினிக்கில் கண்டெடுக்கப்பட்ட குறித்த இரு அணிகலன்களும் வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளதாகவும், உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ள்லாம் எனவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார். (த-10)

## கும்பாபிஷேகம்

வவுனியா, செப் 13

வவுனியா ஆசிகுளம் சக்திவிநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. தொடர்ந்து செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்புநிகழ்வும் புதன்கிழமை கும்பாபிஷேச நிகழ்வும் நடைபெறவுள்ளன. சிவஸ்ரீ மு.இ.வைத்தியநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நா.பிரபாக் குருக்கள் மற்றும் சுகதா கரக்குருக்கள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளதாக ஆலயத்தினர் தெரிவித்துள்ளனர். (த-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொட்டாஞ்சேனையில் நேற்று பெண் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, செப்.13

கொட்டாஞ்சேனை, ஜெம்பட்டா வீதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோரே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை 5.45 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த கொலைக்கான காரணம் என்னவென்று இதுவரை தெரியவில்லை என்றும், எவ்வாறாயினும் உயிரிழந்த பெண்ணின் கணவன் முன்னதாக இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (த-வ)

# ஐ.நா அறிக்கைக்கு 5 நாள்களில் பதில்

## எழுத்து மூலம் சமர்ப்பிக்க அரசு தயார்

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தினால் கையளிக்கப்பட்ட போர்க்குற்ற விசாரணை அறிக்கைக்கு ஐந்து தினங்களுக்குள் எழுத்து மூல பதில் வழங்கப்படுமென இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் செய்தி வெளியிட்டுள்ள இந்தியாவின் இந்து ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளதாவது:-

நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமை சபை அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணை அறிக்கை நேற்றுமுன்தினமிரவு இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷா டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை தொடர்பான எழுத்து மூல பதிலை இலங்கை அரசு எதிர்வரும் ஐந்து தினங்களுக்குள் ஜெனிவா அமர்வில் சமர்ப்பிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன்வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெனாண்டோ மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் ஜெனிவா சென்றுள் ளனர். அவர்கள் நாளை ஆரம்பமா கும் மனித உரிமை அமர்வில் கலந்து கொள்ளவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழர் தரப்பு சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் நிலையில் இலங்கை அரசு உள்ளக விசாரணையே நடத்தப்படுமென உறுதியாகவுள்ளது. அத்துடன் மைத்திரிபால சிறிசேன அரசு சர்வதேசத்துடன் புரிந்துணர்வு அடிப்படையில் செயற்படுவதனால் உள்ளக விசாரணைக்கு சர்வதேச சமூகம் ஒத்துழைக்கும் என இந்து வின் செய்தியில் குறிப்பிடப்பட் டுள்ளது. (த-வ)

# சர்வதேச விசாரணையே தமிழர்களுக்கு ஒரே வழி

## கெலும் மக்ரேயும் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், செப். 13

போரில் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்புக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் விசாரணைப் பொறிமுறையே தேவை என்று வலியுறுத்தியுள்ள, சனல் – 4 ஆவணப்பட இயக்குநர் கெலும் மக்ரே, சர்வதேச விசாரணைப் பொறி முறையே ஒரே வழி எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்திலிருந்து ஒளிபரப் பாகும் புதிய தலைமுறை தொலைக் காட்சிக்கு வழங்கியுள்ள பிரத்தியேக நேர் காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சனல் – 4 தொலைக் காட் சியின் ஆவணப்பட இயக்கு நரான கெலும் மக்ரே, இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போர் தொடர் பில், நோ பயர் சோன் என்ற பெயரில் ஆவணப் படம் வெளியிட்டவர். தற்போதும், புதியதொரு ஆவணப் படத்தை வெளியிட்டுள்ளார். புதிய ஆவணப்படம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். அதற்கான விசாரணையே தேவை. பாதிக்கப்பட்டவர்களிடையே இதயபூர்வமான நம்பிக்கையை ஏற்படுத்தாத எந்த விசாரணைக்கும் மதிப்பிருக்காது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தாத நீதி விசாரணையோ, அரசியல் தீர்வோ எதற்கும் பயன்படாது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும் என்றால் அது சர்வதேச கட்டுப்பாட்டில் உள்ள விசாரணை மட்டுமே தீர்வு தர முடியும். எனவேதான் எமது ஆவணப் படத்தில் அவர்கள் சொல்வதையும் கேட்போமே என்று வலியுறுத்துகின்றோம் – என்றார் மக்ரே. (த-5)

## தமிழ் அரசியல்

பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசமெழுப்பினர்.

நகரின் மத்தியில் ஊர்வலமாக வந்து பஸ் நிலையம் முன்பாக இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய சிறைக் கைதிகள் தினமான இன்று (நேற்று) சிறைகளில் வாடும் எமது தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் இந்த நல்லாட் சிக்கான அரசு உடனடியாக விடு தலை செய்ய வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் , மாகாணசபை உறுப்பினர்கள், சிறைக் கைதிகளின் உறவுகள் எனப் பலரும்கலந்துகொண்டனர். (த-101-106)

## வடக்கு

மாகாண சபை உறுப்பினர்கள் பலரின் வேண்டுகோளாக இருக்கின்றது. இதனை ஒவ்வொரு உறுப்பினர்களிடமும் நேரடியாகக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

மேலும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவேண்டும். இந்த விடயங்களைக் குறிப்பிட்டு, பிரதி அவைத் தலைவர் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் மற்றும் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கு முகவரியிடப்பட்டுக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் பிரதிகள், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (த-5)

## மினிபஸ்–லொறி

இதனால் 32 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 11ஆண்களும், 21 பெண்களும் அடங்குவர். இதில் மூவர் சிறுவர்கள்.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற மினி பஸ்ஸும் யாழ்ப்பாணத்திலிருந்து வடமராட்சி நோக்கிச் சென்ற லொறியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள், முதியவர்கள் எனப் பலர் இந்த விபத்தில் காயமடைந்தபோதிலும் தெய்வாதீனமாக எவருக்கும் உயிரிழப்பு ஏற்படவில்லை.

மினிபஸ்ஸின் முன்பகுதி பெரும் சேதமடைந்ததுடன் லொறி முற்று முழுதாகச் சேதமடைந்தது. இந்த விபத்தில் 32 பேர் காயமடைந்து அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ் போதனா வைத்தியசலைக்கு மாற்றப்பட்டனர்.

இதேவேளை, விபத்துக்குள்ளாகிய இரு வாகனங்களும் வீதியில் நின்றதால் சிலமணி நேரம் போக்குவரத்தில் தடங்கல் ஏற்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் வீதியூடான போக்குவரத்தைச் சீர் செய்யும் பணியில் ஈடுபட்டனர். (த-108,101,10,109)

## சர்வதேசப்

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உள்நாட்டு விசாரணைகளையே இந்தியா மரபுவழியாக வலியுறுத்தி வரும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ள கொல்கத்தா ரெலிகிராப், இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்வதற்கு மூன்று நாள்கள் முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது,

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்துவதற்கு, இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் ஆதரவை தாம் எதிர்பார்ப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கொல்கத்தா ரெலிகிராபிடம் தெரிவித்துள்ளார்.

அவர்களால் பரிந்துரைக்கப்படும் உள்நாட்டு விசாரணை உண்மையானதாக– சுதந்திரமானதாக இருக்க முடியாது என்பது எமது கடந்தகால அனுபவம்.

சர்வதேச விசாரணை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் கருத்து முரண்பாடுகள் இல்லை. இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியான நிலைப்பாட்டில் இருக்கிறது. புதிய அரசு, சர்வதேசத்துடன் இன்னும் கூடுதலாக ஒத்துழைத்துச் செயற்படுகிறது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தெளிவான நிலைப்பாடு, சர்வதேச விசாரணை அவசியம் என்பதேயாகும் என்றும் சம்பந்தன் தெரிவித்துள்ளார். (த-வ)

## உள்ளக

பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசும் போது, ஐ.நா விசாரணை அறிக்கை மற்றும் ஜெனிவாவில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானம் தொடர்பாக பேச்சு நடத்தவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது, உள்நாட்டு விசாரணைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இணங்க வைப்பதற்கு, இந்தியா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யிடம், பிரதமர் வேண்டுகோள் விடுக்கக் கூடும் என்று இராஜ தந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (த-வ)

## நல்லூரில்

பொலிஸார், கடந்த வருடத்து டன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு திருட்டுச் சம்பவங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டனர்.

நல்லூர் திருவிழாவில் ஒவ் வொரு வருடமும் பெருமள வான நகைகள் திருடப்படுவது வழமையாக இருந்து வந்தது. இந்த ஆண்டு, பொலிஸாரி னால் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சீருடை தரித்த பொலிஸார் மற்றும் சிவில் உடைப் பொலிஸார், இம்முறை மக்கள் கூட்டத்துடன் நின்றிருந்தனர். அத்துடன் 650 பேர் வரையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இதனால், இந்த ஆண்டு நல்லூர் திருவிழாவில் மூன்று தங்கச் சங்கிலிகள் மாத்திரமே திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வூட்லர் தெரிவித்தார். அத்துடன் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களை விட பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தமையினாலேயே, திருட்டு நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (த-5-ரி4)

## ஐ.ம.சு.முவின்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 36 நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேசிய அரசில் அமைச்சர் அல்லது இராஜாங்க அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் பதவியையோ, மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் பதவி யையோ ஏற்காமல் உள்ளனர்.

அவர்கள் நிச்சயமான எதிர்க்கட்சியில் அமர்ந்து கொள்வர். மேலும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகளின் 11 உறுப்பினர்களும் எதிர்க்கட்சியில் அமர்ந்து கொள்ளவுள்ளனர்.

எமக்கு எதிர்க்கட்சித் தலைவர் வழங்கப்படாவிடினும், இந்தக் குழுவினர் எதிர்க்கட்சிக்குரிய பொறுப்புணர்வுடன் செயற்படுவர்–என்றார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலை வர் பதவியை இரா.சம்பந்தனிடம் இருந்து, பறிக்கும் வரை ஓயப் போவதில்லை என்றும், அது தொடர்பாக சபாநாயகருடன் தாம் பேச்சுக்களை நடத்தி வருவதாகவும், மகிந்த ஆதரவு அணியைச் சேர்ந்த விமல் வீர வன்ச மற்றும் தினேஸ் குண வர்த்தன் ஆகியோர் தெரிவித் துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (த-வ)

## விக்கியை

தனே பார்த்துக் கொள்ளட்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றா கிய புளொட்டின் தலைவருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்றத் தேர்தலின்போது செயற்பட்ட விதம் தொடர்பில் அவரிடம் விளக்கம் கேட்பதற்கு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்றுமுன்தினம் முடிவு செய்துள்ளது. இது தொடர்பில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் சித்தார்த்தனிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரனை, சம்பந்தனே கொண்டு வந்தார். எனவே, விக்னேஸ்வரன் தொடர்பில் அவரே பார்த்துக் கொள்ளட்டும். மேலும், தற்போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனித்துதான் தீர்மானம் எடுத்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்டினால், அங்கு இந்த விடயம் எடுத்துக் கொண்டால் நாம் அப்போது என்ன செய்வது என்பது தொடர்பில் பார்த்துக் கொள்வோம் – என்றார். (த-5)

## ஜெனிவா

ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கூட்டத் தொட ரில், இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் நடைபெற்ற மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச விசாரணையின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வுள்ளது. இதனால், இந்தக் கூட்டத் தொடர் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இந்தக் கூட்டத் தொடரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்காது என்று தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், அந்த முடிவை மாற்றித் தற்போது கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பங்கேற்றுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரனுடன், சட்டத்தரணிகள் சிலரும் ஜெனிவாவுக்குப் பயணமாகியுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை விளக்கும், கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் கையெழுத்துடனான ஆவணத்தைச் சுமந்திரன் ஜெனிவாவுக்குக் கொண்டு சென்றுள்ளார். குறித்த ஆவணம், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடமும், ஏனைய உறுப்பு நாடுகளிடமும் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமசந்திரன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், திருமதி அனந்தி சசிதரன் ஆகியோரும் ஜெனிவாவுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## தமிழ்க் கூட்டமை

றன. நாங்கள் ஒற்றுமையுடனேயே எங்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றோம்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் ஜனநாயகக் கட்சி. அதற்குள் கருத்து மோதல்கள் என்பது சர்வ சாதாரணமான விடயம். அதைப் பெரிதுபடுத்தக் கூடாது. உணர்ச்சி வசப்படுவதால் எதுவும் நடைபெறப் போவதில்லை. தமிழ் மக்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு விசுவாசமாக இதய சுத்தியுடன் செயற்படுவேன்.

நாம் தமிழ் மக்களின் துயர் துடைக்கும் பணிக்காகவே புறப்பட்டவர்கள். 1979 ஆம் ஆண்டிலிருந்து தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவை எனக்குத் தெரியும். அன்று தொடக்கம் மாவை தமிழ் மக்களின் ஈடேற்றத்துக்காக சளைக்காது குரல் கொடுத்துச் செயற்பட்டு வருகிறார். அவர் மீது எனக்கு மிகுந்த மரியாதை உள்ளது.

அதே போன்று அவருக்கும் என் மீதுமரியாதைஉள்ளது.எம்மிடையே பிரச்சினைகள் இல்லை. சில வேளைகளில் ஒரு சில வார்த்தைகள் –சொற்கள் தவறான கருத்தைக் கொடுக்கலாம். சற்று நிதானமாக சிந்தித்தால் அது புரியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (த-வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### பூதத்தம்பி சிறிதரன்

(ஓய்வுபெற்ற கணக்காளர் - கொழும்பு)

யாழ்ப்பாணம் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பூதத்தம்பி சிறிதரன் 10.09.2015 வியாழக்கிழமை New Delhi இல் இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பூதத்தம்பி-தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-நல்லம்மா தம்பதியரின் அருமை மருமகனும், குபேந்தினியின் அன்புக் கணவரும், சிந்துஜா, கஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யதுநந் தன், சோபனா ஆகியோரின் அருமை மாமனும், ஒவியா, அருஸ்னி ஆகியோரின் பாசமிகு பாட்டனும், காலஞ்சென்ற செல்வ ரத்தினம் மற்றும் தெய்வீகராணி, காலஞ்சென்ற சதானந்தன் மற்றும் ஜெய ரஞ்சிதம், நிர்மலன், பாஸ்கரன், ரவீந்திரன், ஹரிகரன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2015) ஞாயிற்றுக் கிழமை New Delhi இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**T.P: 011 2500698**
**0091 9990418997 New Delhi**
**12A 5/2, Boswell Place,**
**Colombo - 06.**

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

(64642) (10.17)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி குருநாதன்



உரும்பிராயைப்பிறப்பிடமாகவும், யாழ் கந்தர் மடத்தை வசிப்பிடமாக வும், தற்போது கனடாவை வதிவிட மாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி குருநாதன் 09.09.2015 புதன்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை குருநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான V.M.வேலாயுத பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், சுரேந்திரன் (பிரான்ஸ்), தேவானந் (பிரான்ஸ்), பிறேம்நாத் (கனடா), நிர்மலநாதன் (பிரான்ஸ்), ஸ்ரீரங்க நாதன் (அரவிந் ஸ்ருடியோ யாழ்), நவலோகநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ராஜி மற்றும் நரேந்திரன் (கனடா), திருமதி லோகநாயகி (விஜி - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாவாணி, கனகாம்பிகை, ஜானகி, வளர்மதி, சறோஜா,காலஞ்சென்ற தயாபரன் மற்றும் யசோதரா, செந்தில்குமார் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.09.2015 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : கு.ஸ்ரீரங்கநாதன் (மகன்)
(அரவிந் ஸ்ருடியோ)

509, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.

## கண்ணீர்க் காணிக்கை

தோற்றம்
24
06
1931.



மறைவு
10
09
2015

### அமரர் செல்லையா செல்வரத்தினம் (JP)

(ஓய்வுநிலை அதிபர், மத்தியஸ்தர் சபை உறுப்பினர் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம்.
முன்னாள் செயலாளர் ஈவினை மத்திய கற்பக விநாயகர் சைவ பரிபாலனசபை)

ஈவினை பிறப்பெடுத்த புண்ணிய சீலா
எம்நோக்களில் தாவிய தங்கமகனே!
தீர் பாவணமும் மாறாத பாலகனாய்-எம்
பார்வையில் பட்டவனே!
பண்பில் பருவத்தில் பலகலையும் கற்று
பார் போற்ற வாழ்ந்தாய் ஐயா!
கற்பக விநாயகர் பதிதனில்
அவன் கதியே என்றிருந்தாய்
இன்னல்கள் சூழ்ந்த போதும்
இடிமுழை கேட்டபோதும்
அஞ்சாமல் நிமிர்ந்து நின்று
அவன் பணியே ஏற்றிருந்தாய்
எத்தனை நாட்கள் ஐயா எம்முடன் இருந்தாய்
அத்தனை நாட்களும் உன் நினைவழியா நாட்களைய
பச்சிளம் பாலகனாய் எம்மனை பாதம் தனை வணங்கினீர்
பக்குவம் வந்த பின் எமக்கெலாம் குருவானாய்
அம்மோ என எமைவிட்டு விட்டு
அன்னையிடம் அவசரமாய் சென்றதேனோ?
என்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம்மவர் மனங்களில் என்றும் நிலைத்திருப்பாய் ஐயா!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈவினை கற்பக விநாயகரை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
ஈவினை கற்பக விநாயகர் ஆலய சைவ பரிபாலனசபை

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கரத்தினம் பத்மநாதன்



கைத்தோலை திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் பத்மநாதன் நேற்று (12.09.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் பத்மநாதனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, இரத்தினம், பூரணம், அரியமணி, மதிவதனசோதி மற்றும் பாக்கியலட்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகபத்ம ரஜனி (கனடா), பத்மலோசனி ஆகியோரின் அன்புத் தாயாரும் கருணாகரன் (கனடா), ஜெயசீலன் (ராம் சிடிவேர்ல்ட் எலெக்றோனிக்) ஆகியோரின் மாமியாரும் அர்சயா (கனடா), அபிஷா (கனடா), பிரவீன், பிரணவன் ஆகியோரின் பேத்தியும் சற்குணானந்தன் (கனடா), தில்லையம்பலம், சிவபாக்கியம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வாழ்நாள் பேராசிரியர் கந்தையா குணரத்தினம்

[ Bsc.(Cey.), Ph.D (Lond.), FRAS (Lond.), F.Inst.P. (Lond.), C.Phy. (Lond.), முன்னாள் மூன்றாவது துணை வேந்தர்-யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் (1994-04.01 - 1996.06.30)]

ஏழாலை வடக்கைப் பிறப்பிட மாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த வாழ் நாள் பேராசிரியர் கந்தையா குணரத்தி னம் (முன்னாள் உபவேந்தர்-யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம், வாழ்நாள் இயற்பியல் பேராசிரியர்) கடந்த (09.09.2015) புதன்கிழமை இறைபத மெய்தி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2015) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பாடசாலை ஒழுங்கை,**
**கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**
**T.P: 0777 353 740**


தகவல்:
**கந்தையா கணேசராசா**

(64647) (10.17)

## மரண அறிவித்தல்

### நடேசு கணேசு

(முன்னாள் பேருந்து நடத்துனர் இலங்கை போக்குவரத்து சபை கோண்டாவில் சாலை)



டச்சு வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு கணேசு கடந்த 11.09.2015 வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசு - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புஸ்பமலரின் (செல்லமணி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற உதயகுமார் (தவம்), மற்றும் ஜங்கரகுமார் (பாபு) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் ஜெகதீஸ்வரியின் (கிளி) அன்பு மாமனாரும் துளசிதாசனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சு வீதி, மானிப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் கோவிந்தர்



யாழ். கொக்குவில் கிழக்கு உடையார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கோவிந்தர் நேற்று (12.09.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தையல் நாயகியின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற பாலசிங்கத்தின் மைத்துனரும் பால நாயகம், ஸ்ரீபாலன், பாலகுமார், பாலபூபதி, பாலஜோதி, பாலச் சந்திரன், பாலரஞ்சன், பாலரஞ்சினி, பாலரமேஸ், செல்வராணி, ஞானம், திலகம், கோகுலபாலன், நித்தியானந்தன், வாசுகி, செல்வி, கிருஷ்ணகோபால் ஆகியோரின் மாமனும் சோபியா, காலஞ் சென்றசுஜா மற்றும் சதன், பிரியா, லக்கி, சத்தியன், சபேசன், சஞ்ஜீவன், துர்க்கா, காலஞ்சென்ற நிஷாந்தினி மற்றும் தயாபரன், நிரோஜினி, நித்தியா, சுபா, தவீனா, மயூரன், காயத்திரி, கஸ்தூரி ஆகியோரின் பேரனும், பிரதீப், சுஜாத்தா, சகானா, ஹரிகாலன்,கபிலன், நிலாவன், கீரன், கீதா, மயூரா, யதுஷா, யதுஷன், நிஷா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2015) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

நிரோஜ் 0771019284
ஸ்ரீபாலன் (கனடா) 0014167983945
கோபால் ரஞ்சினி (கனடா) 0014169943861
மஞ்சி (கனடா) 0014165694876
லீல்லி (கனடா) 0014167570907
மகேசன் (லண்டன்) 00442087953586

உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வோக்ஸ் விலகல்

இங்கிலாந்து – ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் தொடரின் ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத் தில் இருந்து விலகியுள்ளார் இங்கி லாந் தின் வேகப்பந்து வீச்சாளர் வோக்ஸ்.
தொடைப்பகுதியில் ஏற்பட்ட காயமே வோக்ஸின் விலகலுக்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் கட்டாயம் இடம்பெறுவார் என்றும் இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# இங்கிலாந்து தக்க பதிலடி

## இறுதியாட்டத்திலேயே கிண்ணம் தீர்மானமாகும் நிலை

இங்கிலாந்து ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரின் நான்காவது ஆட்டத்தில் இங்கிலாந்து 3 இலக்குகளால் வெற்றி பெற்று தொடரை 2–2 என்று சமன்செய்துள்ளது.
இதனால் கிண்ணத்தைக் கைப்பற்றப்போகும் அணி எது என்ற தீர்மானம் ஐந்தாவது ஆட்டத்திடம் தஞ்சமாகியுள்ளது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க பேர்ண்ஸ் மற்றும் பின்ஞ் வழக்கம் போல். ஆஸியின் ஆரம்பம் நீடிக்கவில்லை. இரண்டே ஓட்டங்களுடன் இணைப்பாட்டத்தை முறித்தார் பேர்ண்ஸ். வழக்கத்துக்கு மாறாக வந்த வேகத்தில் பவிலியன் திரும்பினார் சிமித். மறுமுனையில் பின்ஞ் ஆட்டமிழக்க, தற்பொழுது ஆஸி. 30–3, பெய்லியுடன் இணைந்தார் மக்ஸ்வெல். இலக்குச்சரிவைச் சரிசெய்தார் பெய்லி. அதிரடியில் மிரட்டிக்கொண்டிருந்தார் மக்ஸ்வெல். மேலதிக இலக்குகள் இழப்பின்றி ஆஸி. நூறு ஓட்டங்களை எட்டியது. இணைப்பாட்டமாகவும் நூறு ஓட்டங்கள் பகிரப்பட்டு சரிவில் இருந்து மீண்டது ஆஸி. ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தாயிற்று இலக்கு மட்டும் விழுந்த பாடில்லை. ஆஸியின் ஓட்டம் 167 ஆக இருந்த பொழுது 85 ஓட்டங்களுடன் மக்ஸ்வெல் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்தில் பெய்லியின் ஆட்டமும் முடிவுக்கு வந்தது. பின் வரிசையில் அதிரடி காட்டி அரைச் சதம் கடந்தார் வேட். முடிவில் ஆஸி 299–7.



300 பந்துகளில் 300 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்தின் ஆரம்ப வீரர்களாக றோய் மற்றும் ஹேல்ஸ். டக்குடன் வெளியேறினார் ஹேல்ஸ். இங்கிலாந்து 1–1. இருப்பினும் இரண்டாவது இலக்குக்கான இணைப்பாட்டம் இங்கிலாந்துக்கு மீண்டெழக் கூடிய பலத்தைக் கொடுத்தது. இணைப்பாட்டமாக 72 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் 36 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் றோய். சிறிது நேரத்தில் ரெய்லரின் இலக்கும் சரிக்கப்பட தற்பொழுது இங்கிலாந்து 89–3. மோர்கனும் ஸ்ரோக்ஸும் மத்திய வரிசையில் இலக்கை எட்டக்கூடிய திருப்புமுனை ஆட்டம். மோர்கனின் இன்னிங்ஸில் சிக்சரும் இல்லாமலில்லை. 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஸ்ரோக்ஸ். 8 ஓட்டங்களுடன் சதத்தைத் தவறவிட்டார் மோர்கன். இருப்பினும் பரிஸ்ரொவ், மொயீன் அலியின் பங்களிப்புடன் 10 பந்துகள் மீதமிருக்க இலக்கை எட்டியது இங்கிலாந்து. ஆட்டநாயகனாக 92 ஓட்டங்கள் விளாசிய மோர்கன் தெரிவானார். (ம)

## இன்றைய மோதல்கள்

***நியூட்டன் வி.கழகத் தொடர்***

கரணவாய், செப். 13
வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடற்கல்வி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ம–108)

***ஏ.எல். வி.கழகத் தொடர்***

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும், அராலி ஏ.எல் இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து யாழ்.ஐக்கிய அணி மோதவுள்ளது.
அராலி ஏ.எல் விளையாட்டுக்கழகமும் அராலி ஏ.எல் இளைஞர் கழகமும் இணைந்து சங்கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி பாரதி அணியை எதிர்த்து துணைவி சண்ஸ்ரார் அணி மோதவுள்ளது.

***உடற்கல்வி ஆசிரியர் சங்கத் தொடர்***

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதவுள்ளது. (ம–23)

## எதிர்பாராத இருவர் இறுதிக்குள் அமெரிக்கன் ரென்னிஸில் திருப்பம்





சர்வதேச அந்தஸ்துப் பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கன் ரென்னிஸ் தொடர், நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதியாட்டத்தில் விளையாட பென்னட்டா, வின்சி ஆகிய இருவரும்தகுதிபெற்றுள்ளனர்.

**கெலப் எதிர் பென்னட்டா**

முதலாவது அரையிறுதியாட்டத்தில் ருமேனியாவின் சிமோனா கெலப்பை எதிர்த்து தரவரிசையில் 26ஆவது இடத்திலுள்ள பென்னட்டா மோதினார். இதில் மிரட்டுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட கெலப், பென்னட்டாவின் ஆக்ரோசத்துக்கு முன்பாக ஒரேயடியாக வீழ்ந்தார். முதலாவது செற்றை வெறும் 28 நிமிடங்களில் பென்னட்டா தம்வசப்படுத்தினார். 2 ஆவது செற்றில் கெலப் தொடக்கத்தில் 3–1 என்று முன்னிலை வகித்தார். அதன் பிறகு வரிசையாக 5 கேம்களை கைப்பற்றிய பென்னட்டா, கெலப்புக்கு அதிர்ச்சி கொடுத்தார். இந்த ஆட்டம் 59 நிமிடங்கள் மட்டுமே நடைபெற்றது.

**செரீனா எதிர் வின்சி**

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் அசைக்க முடியாத சக்தியாக விளங்கும் முதல்தர வீராங்கனையானசெரீனா,வின்சியைஎதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் வின்சி 2–1 என்ற செற் கணக்கில் செரீனாவின் கிண்ணக் கனவைத் தகர்த்தார்.
முதல் செற்றை 6–4 என்ற அடிப்படையில் செரீனா கைப்பற்றவே செய்தார். ஆனால் மீண்டெழுந்த வின்சி இரண்டாவது செற்றை 6–3 என்ற கணக்கில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். இறுதிக்குச் செல்வது யார்? என்பதைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் தொடர்ந்து ஆக்ரோசத்தை வெளிப்படுத்திய வின்சி 6–4 என்ற கணக்கில் செற்றை வசப்படுத்தி செரீனாவை வெளியேற்றினார். விம்பிள்டன் உட்பட பல கிண்ணங்களைக் கைப்பற்றிய செரீனா அமெரிக்கன் தொடரில் ஏமாற்றமடைந்ததால் அழுது கொண்டே வெளியேறினார். (ம)

## சிறந்த ஆஸி.யைத் தொடர்ந்து சிறந்த இங்கிலாந்து

கடந்த 25 ஆண்டுகளில் சிறந்த ஆஸ்திரேலிய அணியை அறிவித்து பரபரப்பூட்டிய சேன் வோர்ன், அடுத்ததாக இங்கிலாந்து அணியை அறிவித்துள்ளார். இந்த அணியில் இங்கிலாந்து சார்பாக அதிக ஓட்டங்களை எடுத்த வீரரும் தற்போதைய ஆசஸ் தலைவருமான அலிஸ் டர் குக் இல்லை, முன்னாள் தலைவரும் இங்கிலாந்தின் மேலாளருமான ஸரோஸ் இல்லை, மிக முக்கியமாக இங்கிலாந்து கொண்டாடும் உலகம் போற்றும் சகலதுறை வீரர் இயன் போத்தம் இல்லை.
வோர்னின் இந்த அணிக்கு மைக்கேல் வோகன் தலைமை தாங்குகிறார். வோர்னுக்கு மிகவும் பிடித்த கெவின் பீற்றர்சன்



இடம்பிடித்துள்ளார். போத்தம் இல்லாதது தொடர்பாக தனது முகப்புத்தகத்தில் குறிப்பிட்ட வோர்ன், நான் துரதிர்ஷ்டவசமாக இயன் போத்தமுடன் டெஸ்ட் கிரிக்கெட் ஆடவில்லை. இல்லையெனில் அவர் இல்லாமலா? உலகின் தலைசிறந்த சகலதுறை வீரர் அவர் என்று பதிவிட்டுள்ளார்.
வோர்னின் சிறந்த இங்கிலாந்து அணி வருமாறு: கிரகாம் கூச், மார்கஸ் ரஸ்கோதிக், மைக்கேல் வோகன் (தலைவர்), கெவின் பீற்றர்சன், மைக் கேட்டிங், அலெக்ஸ், பிளின்டொப், பிரோட், கிரேம் சுவான், டேரன் காசப், ஜேம்ஸ் அண்டர்சன். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

(சிறிய வைத்திய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை.

தொடர்பு: 077 298 7506, 071 1035 422

## வேலையாள் தேவை

Institute இக்கு Clark ஆக பணிபுரிய பெண் வேலையாள் தேவை.

T.P 077 809 3278 (64501) (10.17)

## பிரத்தியேக கணினி வகுப்பு

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)

TP:0779672038 ஆசிரியர்: KRC

## தேவை

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து அண்மையாக ஒரு கிலோமீற்றர் தூரத்தில் பிரதான வீதிகளுக்கு அருகில் அமைந்திருக்கக்கூடிய வியாபாரம் நடத்தக்கூடிய வீடு/கட்டடம் வாடகைக்குத் தேவை.

**தொடர்பு : 071 636 2362**

## Sun Travels

இந்தியாவுக்கான E.T.A. Tourist Visa வினை வெளிநாட்டு கடவுச் சீட்டு உடையோர் சில மணி நேரத்தில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். மேலும் UK, டென்மார்க், ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ் போன்ற நாடுகளுக்கான Visit Visa விற்கு Online மூலம் எம்மிடம் விண்ணப்பித்துக் கொள்ளலாம். மேலும் விமானப் பயண சீட்டுக்களை எம்மிடம் பெற்றுக் கொண்டால் Visa விண்ணப்பப் படிவங்கள் இலவசமாக நிரப்பிக் கொடுக்கப்படும்.

Computer தெரிந்தவர்கள் இங்கு பணிபுரிவதற்கு வெற்றிடம் உண்டு.

**தொடர்பு: 077 936 1427, 077 225 9030**

இல. 206,
கைலாசபிள்ளையார் கோயில் முன்னால்
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(64613)(40.15.17)

## Germah Institute

German, Swiss நாடுகளுக்கான Deutsch மொழி வகுப்புகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு.

10, Palaly Road, Jaffna
T.P: 077 160 4823
Mrs. P. Kajothini

(64502) (10.17)

## வெற்றுக்காணி விற்பனைக்குண்டு

கைதடிச் சந்தி A9 வீதியில் வீதியோரமாக அமைந்த கடைகள் கட்டடங்கள் அமைக்கக் கூடிய 4 பரப்பும் 21/8 குளியும் கொண்ட காணியும் அதனுடன் இணைந்த 100 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

(62941) (10.17) தொடர்பு: 071 6068 414

## Symart Tec

உங்கள் வியாபாரத்தின் தன்மைக்கேற்ப மென்பொருள் (Software) தெரிவு மற்றும் உங்கள் வியாபாரத்தை கணினிமயப்படுத்தலும் அதனோடு கூடிய பிற கணக்கியல் சேவை மற்றும் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

**0766 202 313**

**Symart Tec**

No.108E, K.K.S. Road, Kokuvil.(Next to Kokuvil Hindu College)

## வீடு வாடகைக்குத் தேவை

திருநெல்வேலி, கந்தர்மடம், பல்கலைக் கழகத்தினை சூழவுள்ள பகுதிகளில் 3 பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றுக்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: (64631) (10.17)

077 3400669, 0775131669

## காணி விற்பனைக்கு உண்டு

அச்சுவேலி, நவக்கிரி, விளாத்தியடியில் 14 பரப்பு கல்லுக்காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. இரண்டு பகுதிகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு:
076 838 2614 ,077 939 6578

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவில்

## SPOKEN English

With Grammar

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் மாணவர்களின் ஆங்கில அறிவுக்கேற்ப Basic, Intermediate, Advance என தனித்தனியாக நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது

Full time 3 Months    Part time : 6 Months

**Hot Line : 0777-596148**

**BRITISH COLLEGE OF EDUCATION**

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113, 077-8927639
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041, 077-0538523
39, Convent Rd, Mannar. Tel: 023-4924124, 077-1113205
10, Vaverset Place, Colombo-06.    585, Peradeniya Rd, Kandy.

முல்லைத்தீவிலும் எதிர்வரும் 20/9 இல் புதிய கிளை திறக்கப்படவுள்ளது

## CIMA-UK ENGINEERING-USA BIT - University of Colombo

### புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள்

கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோர், பல்கலைக்கழக மாணவர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடு செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரச வேலையிலும், வங்கிகளிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிகசம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக்குறைந்த கல்வித் தகைமை க.பொ.த.சா.த சித்தி. விண்ணப்ப முடிவு திகதி 10 SEP. புலமைப் பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும் உங்கள் முழுப்பெயர், கற்கைநெறி பிறந்த திகதி என்பவற்றை 772395895 ற்கு sms செய்யவும். பதிவுக்கட்டணம், வருடாந்தக்கட்டணம், கற்கை நெறிக்கட்டணம், பரீட்சைக் கட்டணம் என்பன புலமைப்பரிசிலாக வழங்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களை யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள MCS நிறுவனத்தில். A.L 2015 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

## வாடகைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு முன்பாக இல.8, புகையிரத வீதி வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்சில் தனி அறைகள், இணைந்த குளியல்றையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.

(சி.19100) (13.15.16) தொடர்பு:

01 250 4281 071 299 1256

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த, திருமணமாகி விவாகரத்துப் பெற்ற நோர்வேயினை வசிப்பிடமாகக் கொண்ட மணமகனுக்கு (1969) அதே இனத்தைச் சார்ந்த மணமகள் தேவை. வடமராட்சி விரும்பத்தக்கது.

தொடர்பு: **0766303396** (C/18826)(10.17)

## வேலையாள் தேவை

கைதடியில் இயங்கும் உணவகம் ஒன்றுக்கு கொத்து, ரைஸ் (Fried Rice) தயாரிப்பில் அனுபவம் உள்ள வேலையாள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும.

(64643) (10.17)

தொடர்பு: **077 668 8337**

## EXPONET

Overseas Consultants
www.expogroup.lk

# STUDY IN LATVIA

(SCHENGEN VISA)

**வேலை வாய்ப்புக்களுடன்**

# நேரடி

**அனுமதிகள்**

**இலவசக் கருத்தரங்கு கொழும்பில்**

**25-09-2015**
**26-09-2015**

VENUE:
EXPONET, COLOMBO
9.30 am 12.00 pm

**யாழ். மாணவர்களே! அரிய சந்தர்ப்பம்**



- LATVIA அரச பல்கலைக்கழகங்களில் இருந்து வரும் கல்விசார் பிரதிநிதிகளை (Representative) இனை சந்திப்பதன் மூலம் பல்கலைக்கழக அனுமதிகளைப் பெறமுடியும்.
- FEBRUARY 2016 Intake இற்கான அனுமதிகளை பெற்றுக்கொள்ள விரையுங்கள்.
  எமது அலுவலகத்தில் நடைபெறும் ஆங்கில பரீட்சையில் சித்தி எய்துவதன் மூலம் IELTS இன்றி Visa வினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.
- IELTS இன்றி உயர்கல்வியைத் தொடருவதற்கான அரிய சந்தர்ப்பம். A/L 3 பாட சித்தியுடன் உங்களுக்கு [illegible] கற்கை நெறியை தொடர முடியும்.
- Schengen Visa (Sehengen Union) இல் உள்ள 26 நாடுகளுக்கும் சென்று பணிபுரிய முடியும்).
- ஒரு வருடத்துக்கான கட்டணமாக Rs. 350,000/=

#197, Arasady Road, Jaffna.
Tel: 021 7538395

No.379-1/2, Galle Road, Colombo 06.
Hotline: 011 7555511/14/18
E-mail: nimal@expogroup.lk

FLEX Graphic

**LEGAL REPRESENTATIVE FOR RTU**

## பாடசாலை சீருடைகள்

எம்மிடம் இருபாலாருக்குமான பல பாடசாலைச் சீருடைகள், உள்ளாடைகள், பாதணிகள், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் பிறந்த குழந்தைகள் முதல் 5 வயதுவரை உள்ள குழந்தைகளுக்குத் தேவையான விளையாட்டுப் பொருள்கள், ஆடைகள், கர்ப்பிணித் தாய்மாருக்கான ஆடைகள், ஏனைய பொருள்கள் விற்பனைக்கு உள்ளன. குறிப்பு: சீருடை தேவையெனில் எம் கையிருப்பை உறுதிப்படுத்திய பின் வருகை தரவும்.

**CDL Mart (Pvt) Ltd**

பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியான் சந்திக்கு அருகில்-இலங்கை வங்கி பிரதான வீதிக்கிளை மற்றும் David Peris Motor Company இயங்கும் கட்டடத் தொகுதியில்)

**தொடர்பு: 021 221 7921, 075 9050 880** (64577) (10.15.17)

## இம்முறை A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான தரம் வாய்ந்த ஆங்கில கற்கை நெறிகள் ஆரம்பம்

**SPOKEN ENGLISH WITH GRAMMAR** 120 Hours

சரளமாக பேச பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறி

**CIMA, ACCA, CA, AAT, HND, Banking, University, College of Education**
ஆகியவற்றின் கற்கை நெறிகளை தொடர ஆங்கிலம் உங்களுக்கு தடையா??
சகல கற்கை நெறிகளுக்குரிய ஆங்கில அறிவினை 100% வழங்குகிறோம்.

**DIPLOMA IN ENGLISH** 200 Hours

* Cambridge English இன் KET, PET, IELTS life Skills பரீட்சைகளுக்கு தோற்ற முடியும்.

**New Batches Start On :**

B1 : 16-09-15 at 9.00 am    B3 : 19-09-15 at 9.00 am    B5 : 21-09-15 at 9.00 am
B2 : 16-09-15 at 2.00 pm    B4 : 19-09-15 at 2.00 pm    B6 : 21-09-15 at 2.00 pm

**Study IELTS at CIL & Get 6 + Band**

**Spoken Sinhala Classes** B1 : Sat & Sun - 9.30-11.30am
B2 : Sat & Sun - 3.00 - 5.00pm

**CIL**

Cambridge Institute of London
No : 17, 3rd Lane, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
(புதிய HNB, ராசி சில்க்ஸ் அருகாமையில்)
Tel : 021 2217774, 0777382108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.